# An India Economic Strategy to 2035 by Australian Government

முகப்பு பக்கம்:

**<u>ஆஸ்திரேலிய அரசு</u>**

**வெளியுறவு மற்றும் வர்த்தகத் துறை**

நம் இரு நாடுகளுக்கு இடையேயான பொருளாதார ஒருங்கிணைப்பு ஏற்பாட்டைத் துரிதப்படுத்துதல்

**2035-ம் ஆண்டுக்குள்** நிறைவேற்றப்பட வேண்டிய **இந்தியப் பொருளாதார உத்தி** தொடர்பான புதுப்பிக்கப்பட்ட அறிக்கை

சாத்திய நிலையிலிருந்து பூர்த்தி செய்து வழங்கலுக்கான நிலையை நோக்கிய பயணம்

1

ஆஸ்திரேலிய அரசு

வெளியுறவு மற்றும் வர்த்தகத் துறை

நம் இரு நாடுகளுக்கு இடையேயான பொருளாதார ஒருங்கிணைப்பு ஏற்பாட்டைத் துரிதப்படுத்துதல்

**2035-ம் ஆண்டுக்குள்** நிறைவேற்றப்பட வேண்டிய **இந்தியப் பொருளாதார உத்தி** தொடர்பான புதுப்பிக்கப்பட்ட அறிக்கை

சாத்திய நிலையிலிருந்து பூர்த்தி செய்து வழங்கலுக்கான நிலையை நோக்கிய பயணம்

2

**2035-ம் ஆண்டுக்குள்** நிறைவேற்றப்பட வேண்டிய **இந்தியப் பொருளாதார உத்தி** தொடர்பான புதுப்பிக்கப்பட்ட அறிக்கை

**படைப்பாக்கப் பொதும உரிமங்கள்**

இந்த வெளியீட்டில் உள்ள பொருளானது, படைப்பாக்கப் பொதும உரிமங்கள் மூலப்படைப்பாளியைக் குறிப்பிட்டுக்காட்டுதல் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றது (creativecommons.org/ licenses/by/4.0/),விதிவிலக்கு:

http://creativecommons.org/licenses/by/4.0/

- காமன்வெல்த் கோட் ஆஃப் ஆர்ம்ஸ் (Commonwealth Coat of Arms)
- வெளியுறவுத் துறை மற்றும் வர்த்தகக் குறியம், மற்றும் வர்த்தக முத்திரையால் பாதுகாக்கப்பட்ட பிற பொருள்
- வெளியுறவு மற்றும் வர்த்தகத் துறைக்கு நேரடியாக மூலப்படைப்பாளியைக் குறிப்பிட்டுக்காட்டாத எந்தவொரு படமும்.

படைப்பாக்கப் பொதும உரிமங்கள் மூலப்படைப்பாளியைக் குறிப்பிட்டுக்காட்டுதல் 4.0 சர்வதேச உரிமம் என்பது ஒரு செந்தரமான உரிம ஒப்பந்த வடிவமாகும். இது, நீங்கள் இந்த வெளியீட்டின்

மூலப்படைப்பாளியைக் குறிப்பிட்டுக்காட்டினால், இந்த வெளியீட்டை நகலெடுக்க, விநியோகிக்க, அனுப்ப மற்றும் தழுவி எழுத உங்களை அனுமதிக்கிறது.

### மூன்றாம் தரப்பு பதிப்புரிமை

படைப்பாக்கப் பொதும உரிமங்கள் கட்டமைப்பின் கீழ் கிடைக்கப்பெறும் இந்த அறிக்கையில் உள்ள சில தகவல்கள் மூன்றாம் தரப்பால் வழங்கப்பட்ட பொருளில் இருந்து வருவித்தவையாக இருக்கலாம். இத்தகைய நிகழ்வுகளில், படைப்பானது மூலப்பொருளின் ஆதாரமூலத்துடன் தெளிவாக லேபிளிடப்படும். அறிக்கையில் உள்ள பொருட்களில் மூன்றாம் தரப்பினர் பதிப்புரிமை பெற்றிருந்தால், பதிப்புரிமை அந்த தரப்பினரிடமே இருக்கும், மேலும் பொருளைப் பயன்படுத்த அவர்களின் அனுமதி தேவைப்படலாம்.

### கோட் ஆப் ஆர்ம்ஸின் பயன்பாடு

என்னென்ன விதிமுறைகளின் கீழ் மரபு சின்னங்களை (கோட் ஆப் ஆர்ம்ஸை) பயன்படுத்த முடியும் என்பது குறித்து, பிரதமர் மற்றும் அமைச்சரவையின் வலைத்தளத்தில் விவரிக்கப்பட்டுள்ளது: pmc.gov.au/resource-centre/government/commonwealth-coat-arms-information-and-guidelines

### வலைத்தளம்

dfat.gov.au/IESUpdate

### தொடர்பு கொள்க

அறிக்கை பற்றிய விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன, மேலும் அவை அனுப்பப்பட வேண்டிய மின்னஞ்சல் முகவரி:

India75@dfat.gov.au

3

சாத்திய நிலையிலிருந்து பூர்த்தி செய்து வழங்கலுக்கான நிலையை நோக்கிய பயணம்

### அமைச்சரின் முன்னுரை

இந்தியாவுடனான ஆஸ்திரேலியாவின் உறவு, உத்திப்பூர்வமாகவும் பொருளாதார ரீதியாகவும் தொடர்ந்து முன்னேறி வருகிறது. ஜூன், 2020-ம் ஆண்டில் பிரதமர்கள் மோரிசன் மற்றும் மோடி ஒப்புக்கொண்ட விரிவான உத்திப்பூர்வ கூட்டாண்மை நமது சமகால உறவுகளின் பண்புகளை விரித்துரைக்கும் இலட்சியம், நம்பிக்கை மற்றும் ஆற்றல் ஆகியவற்றை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

"2035-ம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய இந்தியப் பொருளாதார உத்தி : சாத்திய நிலையிலிருந்து பூர்த்தி செய்து வழங்கலுக்கான நிலையை நோக்கிய பயணம்(IES)" என்னும் அறிக்கையை ஏற்புக் கையொப்பமிட்டதில் இருந்து, ஆஸ்திரேலிய அரசாங்கம் ஆழமான பொருளாதார இணைப்புகளுக்கு அடித்தளம் அமைப்பதில் கணிசமாக முதலீடு செய்துள்ளது. COVID-19 இன் பின்னடைவுகள் இருந்தபோதிலும், பொருளாதார உறவில் நீடிப்புத்திறனுள்ள, உத்திப்பூர்வ முதலீடுகள் மூலமாக IES இன் நீண்டகால இலட்சியத்தை கைவரப்பெறுவதில் நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம்.

கோவிட்-19க்குப் பிறகு, மேலும் சவாலான சர்வதேச சூழலை நாம் எதிர்கொண்டுவருகிற வேளையில், வலுவான, அதிக இயக்கநிலையுள்ள மற்றும் போட்டித்தன்மையுள்ள பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான அரசாங்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த புதுப்பிக்கப்பட்ட அறிக்கை விளங்குகிறது. இந்த புதுப்பிக்கப்பட்ட அறிக்கையானது ஆஸ்திரேலிய

வணிகங்கள் மற்றும் தொழில்களை பல்வகைப்படுத்தவும், இந்தப் புதிய சூழலுக்கு ஏற்ப பொருந்தச்செய்யவும் உதவும்.

இந்தத் திட்டத்திற்கு இந்தியாவுடனான ஆஸ்திரேலியாவின் கூட்டாண்மை முக்கியமானது, ஏனென்றால், வலுவான, நீடிப்புதிறனுள்ள பொருளாதார வளர்ச்சிக்காகவும், மிகவும் பாதுகாப்பான மற்றும் பல்வகைப்பட்ட வர்த்தகம் மற்றும் முதலீட்டு முறைகள் மற்றும் வழங்கல் தொடர்கள் ஆகியவற்றுக்காகவும் இரு நாடுகளும் பாடுபட்டு வருகின்றன.  நமது கூட்டாண்மையின் நம்பிக்கையும் நம்பகத்தன்மையும் ஆழமான பொருளாதார ஈடுபாட்டை இயக்க உதவும்.

நமது வலுவான பொருளாதார உறவுகள் மிகவும் வெளிப்படையான, அனைத்தையும்/அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் மீள்தன்மை கொண்ட இந்தோ-பசிபிக் பிராந்தியத்திற்கு பங்களிக்கும் மற்றும் நன்மை பயக்கும்.

இந்தப் புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் உள்ள புதிய முன்னெடுப்புகள், இருவழி வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட நமது பொருளாதார உறவுகளில் புதிய வீரியத்தைப் பாய்ச்சி, மேலதிக கவனம் செலுத்தும் என்று நான் நம்புகிறேன்.  இந்திய சந்தையில் ஆஸ்திரேலியாவின் பாரம்பரிய வலிமைகளை வளர்ப்போம் மற்றும் எதிர்காலத்தில் நம் இருநாடுகளையும் நிலைநிறுத்த எமது இயற்கையான குறைநிரப்புதல்களைப் பயன்படுத்துவோம். எமது உயர்தர சரக்குகள் மற்றும் சேவைகள் - கனிமங்கள் முதல் உலகத் தரம் வாய்ந்த கல்வி மற்றும் தொழில்நுட்பம் வரை - இந்தியாவின் வேகமாக வளரும் பொருளாதாரத்தை ஆதரிக்க உதவும்.

இலக்கிடப்பட்ட முன்னெடுப்புகள் ஆஸ்திரேலியாவின் ஆழ்ந்த மதிப்புள்ள இந்திய ஆஸ்திரேலிய சமூகத்தின் ஆற்றலையும் நிபுணத்துவத்தையும் பயன்படுத்தும். இந்த முன்னெடுப்புகள் அறிவியல், வெளி, தொழில்நுட்பம், சுகாதாரநலம் மற்றும் இன்றியமையாத கனிமங்கள் போன்ற உத்திப்பூர்வமாக முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் நெருக்கமான ஒத்துழைப்பை ஊக்குவிக்கும். மேலும் இந்த முன்னெடுப்புகள், குறைந்த உமிழ்வு தொழில்நுட்பங்களை துரிதப்படுத்துவதன் மூலம் புதிய ஆற்றல் பொருளாதாரத்தை ஆதரிக்க புதிய கூட்டாண்மைகளை உருவாக்கும். நாங்கள் வெற்றிக்காக நிலைநிறுத்தப்பட்டு இருப்பதை உறுதிசெய்ய, IESஐ தொடர்ந்து புதுப்பிப்போம்.



தி ஹோான் டான் டெஹான் எம்.பி

4

சாத்திய நிலையிலிருந்து பூர்த்தி செய்து வழங்கலுக்கான நிலையை நோக்கிய பயணம்

5

**பொருளடக்கம்**


| | |
|---|---|
| செயலாட்சி சுருக்கத்தொகுப்பு 6 | பெருகிவரும் சமூக உறவுகள் 38 |

| | |
|---|---|
| செயல் திட்டம் 8 | கல்வி 40 |
| அறிமுகம் 12 | சுற்றுலா 43 |
| தொழில்நுட்பம் மற்றும் விண்வெளி 16 | பண்பாடு மற்றும் படைப்புசார் தொழில்கள் 44 |
| இந்தியாவின் பலதிறன் வாய்ந்த தெற்கு 22 | விளையாட்டு 45 |
| அறிவியல் மற்றும் புத்தாக்கம் 23 | வேளாண்வணிகம் 46 |
| வளங்கள் மற்றும் METS துறைகள் 24 | பாதுகாப்பு 48 |
| ஆற்றல் 26 | உலகளாவிய கூட்டாளிகள் 49 |
| சுகாதாரநலம் 30 | வணிக கல்வியறிவு மற்றும் வணிக சூழல் 50 |
| முதலீடு 32 | இந்தியாவின் பலதிறன் வாய்ந்த அண்டை நாடுகள் 52 |
| உள்கட்டமைப்பு 34 | |
| நிதி சேவைகள் 36 | |


6

**செயலாட்சி சுருக்கத்தொகுப்பு**

2035-ம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய இந்தியப் பொருளாதார உத்தி: இந்தியாவுடனான பொருளாதார ஒருங்கிணைப்பை ஆழப்படுத்துவதற்கான இலக்கை அடைவதற்கான பயணத்திட்டம் என்ற முறையில், 2018 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலிய அரசாங்கத்திற்கு ”சாத்திய நிலையிலிருந்து பூர்த்தி செய்து வழங்கலுக்கான நிலையை நோக்கிய பயணம்(IES)” என்னும் தலைப்பில் ஒரு சுயாதீன அறிக்கை வழங்கப்பட்டது. வரும் தசாப்தங்களில் இந்தியாவை விட ஆஸ்திரேலிய வணிகங்களுக்கு வேறு எந்தவொரு நாடும் அதிக வளர்ச்சி வாய்ப்புகளை வழங்கி இருந்திருக்காது என்று ஏற்கவைக்கத்தகு விதத்தில் IES வாதிட்டது.

ஆஸ்திரேலிய அரசு 2018 இல் IES க்கு ஒப்புதல் அளித்தது மற்றும் அப்போது முதற்கொண்டு அதன் இலட்சியத்தை வழங்குவதற்கான நடைமுறை முன்னெடுப்புகளை செயல்படுத்தியுள்ளது. ஜூன் 2020 இல் பிரதமர்கள் மோரிசன் மற்றும் மோடி ஆகியோரால் அறிவிக்கப்பட்ட விரிவான உத்திப்பூர்வ கூட்டாண்மையானது (CSP) விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை (பெட்டி) நோக்கிய பணிகள் உட்பட, இந்த இருநாட்டு உறவுகளால் நிறைவேற்றப்படச் சாத்தியமுள்ள பொருளாதாரத்தை கைவரப்பெறுவதில் மற்றொரு அடியெடுப்பை முன்வைத்தது. இந்த புதுப்பிக்கப்பட்ட அறிக்கை, இரு நாடுகளின் செழிப்புக்கு ஆதரவாக பொருளாதார இணைப்புகளை உருவாக்குவதற்கும் ஆழப்படுத்துவதற்கும் ஆஸ்திரேலிய அரசு இயந்திரம் எங்கிலும் முயற்சிகளை துரிதப்படுத்துகிறது.

**முன்னுரிமை துறைகள்**

இரண்டு பொருளாதாரங்களையும் வளர்ப்பதற்கும், வணிகங்களை விரிவுபடுத்த உதவுவதற்கும் ஆஸ்திரேலிய அரசு சிறந்த இரு வழி முதலீட்டுப் பாய்வுகளை ஆதரிக்கும்.

இந்தியாவின் சீர்திருத்த செயற்குறிப்பு ஆஸ்திரேலிய முதலீட்டாளர்களுக்கு நிலைமைகளை மேம்படுத்தும். உள்கட்டமைப்புத் துறையில் நிறைவேற்றப்படச் சாத்தியமுள்ள சிறந்த பொருளாதாரத்தை கைவரப்பெறுவதற்கு உதவுவோம்.

எல்லை மூடல்களின் தாக்கத்திலிருந்து இந்தியாவுடனான நமது கல்வி உறவுகள் மீள்வதற்கு அரசாங்கம் உதவும். நாங்கள் நீடித்து நிலவுகின்ற உறவுகளை உருவாக்கி, இந்தியாவின் கல்வி, திறன்கள் மற்றும் ஆராய்ச்சித் தேவைகளுக்கு நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் எமது உலகத் தரம் வாய்ந்த வழங்குநர்களை விருப்பக் கூட்டாளிகளாக நிலைநிறுத்த உதவுவோம்.

இந்திய சுற்றுலாச் சந்தையில் இருந்து வலுவான வளர்ச்சியை மீண்டும் பெறுவதற்கு அரசாங்கம் தொழில்துறை மற்றும் மாநில மற்றும் பிரதேச அரசாங்கங்களுடன் இணைந்து செயல்படும்.

ஆஸ்திரேலியா 2035 ஆம் ஆண்டுக்குள் மேலும் 1.2 மில்லியன் இந்தியர்களின் வருகையை அடைவதை இலக்காகக் கொண்டுள்ளது, இது ஆஸ்திரேலியப் பொருளாதாரத்திற்கு ஆண்டுக்கு 9 பில்லியன் ஆஸ்திரேலிய டாலர்களுக்கு மேலான மதிப்பை சேர்க்கும்.

இந்த புதுப்பிக்கப்பட்ட அறிக்கை, ஆஸ்திரேலிய அரசுக்கான ஐந்தாண்டு செயல் திட்டத்தை குறித்துக்காட்டுகிறது, இது இரு நாடுகளுக்கும் சிறந்து பெருகிவரும் வாய்ப்புகள், மாறியுள்ள உலகளாவிய சூழ்நிலைகள், இருதரப்பு உறவின் வளர்ந்து வரும் வலிமை மற்றும் இந்தியாவின் முக்கிய பொருளாதார சீர்திருத்தங்கள் ஆகியவற்றிற்கு பதிலளிக்கிறது.

இந்த புதுப்பிக்கப்பட்ட அறிக்கை, நமது பாரம்பரிய வலிமைகளைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்துகின்ற நடைமுறை முன்னெடுப்புகளை கோடிட்டுக்காட்டுகிறது மற்றும் வளர்ந்து வரும் ஒத்துழைப்புத் துறைகளுக்கு புதிய கூட்டாண்மைகளை உருவாக்குகிறது.

இது தொழில்நுட்பம், விண்வெளி மற்றும் படைப்புசார் தொழில்களின் பங்குகளில் கூர்மையான கவனம் செலுத்துவதோடு, IES ஆல் அடையாளம் காணப்பட்ட முன்னுரிமைத் துறைகளையும் விவரிக்கிறது. இந்த புதுப்பிக்கப்பட்ட அறிக்கை, புதிய மற்றும் ஏற்கனவே உள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கான நடைமுறை வழிகளில் வணிகங்களை ஆதரிக்க உதவுகிறது.

ஆஸ்திரேலியாவை இந்தியாவின் முதன்மை வேளாண் வணிகக் கூட்டாளியாகவும், வேளாண் பொருட்களின் முக்கிய வழங்குநராகவும் தொழில்நுட்ப அறிவில் கூட்டாளியாகவும் நிலைநிறுத்துவதற்கு ஆஸ்திரேலிய அரசு செயல்பட்டு வருகிறது. மற்ற எல்லாவற்றையும் விட முதலில் செய்யவேண்டிய முன்னுரிமைச் செயல் என்ற முறையில், சிறந்த சந்தை அணுகல் இலக்கை நோக்கி செல்வோம்.

நமது பொருளாதார உறவில் வளங்கள் மையமாக இருக்கும். கனிமங்கள் மற்றும் சுரங்கத் தளவாடங்கள், தொழில்நுட்பம் மற்றும் சேவைகள் ஆகியவற்றின் நம்பகமான மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த வழங்குநர் என்கிற எமது நிலையைத் தக்கவைக்க, தொழில்துறையுடன் இணைந்து பணியாற்றுவோம்.

இன்றியமையாத கனிமங்களில் கூட்டாண்மைகளை எளிதாக்குவோம்.

உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் ஆற்றல் சந்தையான இந்தியாவுடன் நமது ஆற்றல் உறவுகளை வளர்க்க அரசு பணியாற்றும் . அதிநவீன தொழில்நுட்பங்கள், அதிலும் குறிப்பாக புதுப்பிக்கத்தக்கவை மற்றும் ஹைட்ரஜன் ஆகியவற்றில் இந்தியாவுடன் ஒத்துழைப்போம்.

சாத்திய நிலையிலிருந்து பூர்த்தி செய்து வழங்கலுக்கான நிலையை நோக்கிய பயணம்

இந்தியா உலகளவில் ஒரு தொழில்நுட்ப ஆற்றல் மையமாகவும், நம்பகமான தொழில்நுட்ப திறமைகளின் ஆதாரமாகவும் உருவெடுத்து வருவதைப் பயன்படுத்திக்கொள்ள, ஆஸ்திரேலிய அரசு ஆஸ்திரேலிய தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும்.

7

2025ஆம் ஆண்டுக்குள் இந்தியா 900 மில்லியன் இன்டர்நெட் பயனாளர்களைக் கொண்டிருக்கும். 1 நமது எதிர்கால செழுமைக்கு அடித்தளமாக இருக்கும் இன்றியமையாத மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் ஒத்துழைப்பை ஆழமாக்குவோம்.

# An India Economic Strategy to 2035 by Australian Government

வளர்ந்து வரும் விண்வெளி உறவானது, வணிக மற்றும் உத்திப்பூர்வ ஈவுத்தொகையை வழங்கும். ஆஸ்திரேலிய பாதுகாப்பு நிறுவனங்களுக்கு இந்தியாவில் மேலதிக தனித்துவமாக்கிய வாய்ப்புகளைக் கண்டறிய உதவுவது உட்பட, இரு நாடுகளுள் ஒன்றிடம் குறைவாக உள்ள பண்பை மற்றொன்றிடம் இருந்து பெற்று குறைநிரப்பிக்கொள்தல் மற்றும் உத்திப்பூர்வ உறவுகளை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு வணிகத்துடன் இணைந்து பணியாற்றுவோம் .

சுகாதாரநலத் துறையில் ஆஸ்திரேலியா-இந்தியா உடனுழைப்பு மிகவும் எதிர்பார்க்கப்படுகிறது. COVID–19 ஆனது இந்தியாவில் டிஜிட்டல் சுகாதாரநலச் சேவைகளை உயர்த்தியது, மருத்துவ சாதனங்கள் மற்றும் மருந்துப் பொருட்களைத் தயாரிப்பதில் அதிக கவனம் செலுத்தியது, மேலும் தடுப்பூசிகள் உட்பட உலகளாவிய வழங்கல் தொடர்களில் இந்தியாவின் முக்கியத்துவத்தை வலுப்படுத்தியது.

நிதிச் சேவைகள் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் இந்தியா விரைவான வளர்ச்சியைக் கண்டு வருகிறது . ஆசியாவின் சிறந்த நிதித்தொழில்நுட்ப மையமாக மாறுவதற்கான இந்தியாவின் முயற்சி ஆஸ்திரேலிய வணிகத்திற்கான வாய்ப்புகளை வழங்கும்.

விளையாட்டு மீதான பேரார்வம் மற்றும் பண்பாடு மற்றும் படைப்புசார் தொழில்களில் நம் இரு நாடுகளின் வளர்ந்து வரும் உறவுகள் ஆகியவற்றின் மீது ஆஸ்திரேலியா மற்றும் இந்தியாவின் பகிர்ந்து கொள்ளும் ஆர்வத்தினால் எழும் சமூக மற்றும் வணிக நலன்களை ஆஸ்திரேலிய அரசு பேணி வளர்க்கும்.

எல்லாத் துறைகளிலும் நமது ஆழமான இருநாட்டு குடிமக்களுக்கு இடையேயான நேரடி இடைவினை இணைப்புகள் பொருளாதார ஈடுபாட்டை இயக்க உதவும். துடிப்பான இந்திய ஆஸ்திரேலிய சமூகம் இந்த கதையின் மையமாக உள்ளது மற்றும் அறிவுரை, வலையமைப்புகள் மற்றும் கூட்டாண்மைகளின் ஆதாரமாக அதன் பங்கை அரசாங்கம் ஆதரிக்கும்.

இந்தியாவுடனான பொருளாதார உறவுகளை விரிவுபடுத்துவதற்கும் ஆழப்படுத்துவதற்கும் எமது முயற்சிகளின் ஒரு பகுதியாக, இந்தியாவின் அண்டை நாடுகளில் குறிப்பாக பங்களாதேஷ், இலங்கை, மாலத்தீவு மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுடன் ஆஸ்திரேலியாவின் வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை வளர்க்க ஆஸ்திரேலிய அரசு உதவும்.

ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் ஒரு விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்கான (CECA) பேச்சுவார்த்தைகளை முறையாக மீண்டும் தொடங்கியுள்ளன. இரு நாடுகளும் 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஒரு முழுமையான CECA ஐ முடிப்பதற்கான நோக்கத்துடன், சரக்குகள் மற்றும் சேவைகளில் இருதரப்பு வர்த்தகத்தை ஆழப்படுத்துவதற்கான ஆரம்ப ஒப்பந்தத்தை இறுதிசெய்வதை நோக்கிச் செயல்பட்டு வருகின்றன.

இருநாட்டு பொருளாதாரங்களின் நலனுக்காக விரிவாக்கப்பட்ட வர்த்தக மற்றும் முதலீட்டுப் பாய்வுகளை ஊக்குவிக்கும் ஒரு விரிவான மற்றும் சமநிலையான வர்த்தக ஒப்பந்தத்தை ஆஸ்திரேலியா நாடுகிறது. வளங்கள் மற்றும் ஆற்றல், வேளாண்மை, பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் பானங்கள் மற்றும் தொழில்துறை தயாரிப்புகள் ஆகியவற்றில் மேம்பட்ட சரக்குகள் சந்தை அணுகலை CECA வழங்க வேண்டும். மேலும் ஆஸ்திரேலியா, சேவை வழங்குநர்களுக்கான மேம்பட்ட அணுகலையும், முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிக்கவும், முதலீட்டை ஊக்குவிக்கவும் ஒழுங்குபடுத்துவதற்கான பொருத்தமான நலக்காப்புகளுடன் நவீன முதலீட்டாளர் பாதுகாப்புகளையும் நாடுகிறது. வர்த்தகத்தை செயல்படுத்த டிஜிட்டல்

கருவிகளைப் பயன்படுத்துவதை ஆதரிக்கும் நவீன மற்றும் முன்னோக்கு விதிகளை உள்ளடக்கி டிஜிட்டல் வர்த்தகத்தை ஒரு ஒப்பந்தம் எளிதாக்கும்.

புதுப்பிக்கப்பட்ட அறிக்கை இந்த முயற்சிகளை முழுமையாக்குகிறது மற்றும் எமது பொருளாதார கூட்டாண்மையில் நிறைவேற்றப்படச் சாத்தியமுள்ள பொருளாதாரத்தை கைவரப்பெறுவதற்கு இரு தரப்பிலும் உள்ள வணிகங்களுக்கு அடித்தளம் அமைக்க உதவும்.

1 இந்தியாவின் டிரில்லியன் டாலர் டிஜிட்டல் வாய்ப்பு, இந்திய அரசு, 2021





**செயல் திட்டம்**

இந்த புதுப்பிக்கப்பட்ட தகவல், அடுத்த ஐந்து ஆண்டுகளில் IES இன் இலட்சியத்தை வழங்குவதற்கான ஒரு மையப்படுத்தப்பட்ட திட்டத்தை வழங்குகிறது.

**நமது இராஜதந்திர அடிச்சுவட்டையும் தொழில்நுட்பத் துறை ஒத்துழைப்பையும் விரிவுபடுத்துதல்**

- பெங்களூருவில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகம், இந்தியாவின் வளர்ந்து வரும் டிஜிட்டல் பொருளாதார மற்றும் புத்தாக்க சூழலமைப்பிற்குள் ஆஸ்திரேலிய வணிகங்களை இணைக்க உதவும், மேலும் விண்வெளி துறையில் நமது வளர்ந்து வரும் இணைப்புகளை வலுப்படுத்தும்.
- ஆஸ்திரேலியா-இந்தியா புத்தாக்க வலையமைப்பு ஆஸ்திரேலிய மற்றும் இந்திய நிறுவனங்களுக்கு இன்றியமையாத தொழில்நுட்பங்கள் மற்றும் சேவைகளை வணிகமயமாக்கவும், முதலீட்டை அணுகவும் மற்றும் ஆழமான வழங்கல் தொடர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் உதவும்.
- இன்றியமையாத மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பக் கொள்கைக்கான ஆஸ்திரேலியா-இந்தியா மையமானது, உலகளாவிய தொழில்நுட்பச் செந்தரங்கள் மற்றும் அமைப்புகளில் செல்வாக்கு செலுத்தும் நமது பகிரப்பட்ட திறனை உருவாக்கி, தொழில்நுட்பம் தொடர்ந்து நம்மை பாதுகாப்புமிக்க, சுகாதாரநலமுடன் இருக்கும், பல வளங்கள் கொண்ட, சுதந்திரமாக முடிவெடுக்கும் நாடுகளாக மாற்றுவதை உறுதிசெய்ய உதவும்.

**எமது துடிப்பான புலம்பெயர் சமூகத்தையும் வணிக நிறுவனங்களையும் திறனதிகாரம் பெறச் செய்தல்**

- ஆஸ்திரேலியா-இந்தியா உறவுகளுக்கான மையம் நமது சமூக மற்றும் பண்பாட்டு இணைப்புகளை வளர்க்கும், இந்திய சந்தையில் வணிகங்கள் வெற்றிபெற உதவுவதற்கு நடைமுறை வழிகளில் செயல்படும், மற்றும் இந்திய-ஆஸ்திரேலியச் சமூகத்தின் நிபுணத்துவத்தை முறைப்படுத்தும்.
- புதிதாக உருவாக்கப்பட்ட பிசினஸ் சாம்பியன்ஸ் குழுப்பிரிப்பானது வணிக ஈடுபாட்டை துரிதப்படுத்தும் மற்றும் வணிக சூழலை மேம்படுத்துவதில் அரசாங்கங்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்பை வழங்கும்.
- புலம்பெயர் சமூக படமாக்கல் அறிக்கையானது ஆஸ்திரேலிய நிறுவன இயக்குநர்கள், தொழில் நெறிஞர்கள், கல்வியாளர்கள் மற்றும் இந்திய வம்சாவழியைச் சேர்ந்த தொழில்முனைவோர் போன்ற முக்கிய வலையமைப்புகளை முன்னிலைப்படுத்தும். இந்த ஆராய்ச்சியானது, நமது ஈடுபாட்டை சிறப்பாகக் குறிவைத்து ஆஸ்திரேலியாவிற்கும்

இந்தியாவிற்கும் இடையிலான உறவுகளை வளர்ப்பதற்கும் புலம்பெயர்ந்த சமூகத்தின் ஈடுபாட்டு உத்திக்கு அடித்தளமாகவும் அமையும்.

**நமது கல்வி மற்றும் ஆராய்ச்சி இணைப்புகளை வலுப்படுத்துதல்**

- ஆஸ்திரேலியா-இந்தியா மைத்ரி (நட்பு) ஸ்காலர்ஸ் திட்டம் ஆஸ்திரேலியாவில் படிக்க சில சிறந்த மற்றும் நுண்ணறிவுள்ள இந்திய மாணவர்களை ஆதரிக்கும், மேலும் மைத்ரி மானியங்கள் மற்றும் பெல்லோஷிப் திட்டம் நமது எதிர்கால தலைவர்களிடையே இணைப்புகளை உருவாக்கும்.
- தொழில்துறை தலைமையிலான ஆஸ்திரேலியா-இந்தியா எதிர்கால திறன்கள் முன்னெடுப்பு, இன்றியமையாத மற்றும் வளர்ந்து வரும் தொழிலாளர் தேவைகளை நிறைவேற்ற இந்தியாவிற்கு விருப்பத் திறன் வழங்குநராக ஆஸ்திரேலியாவை நிலைநிறுத்தும்.
- ஆஸ்திரேலியா-இந்தியா ஆராய்ச்சி மாணவர் பெல்லோஷிப் பைலட் திட்டம் மற்றும் ஆஸ்திரேலிய ஆராய்ச்சியாளர் ஒத்துழைப்பு மையம் - இந்தியா இருதரப்பு ஆராய்ச்சி உடனுழைப்பை தொடர்ந்து வலுப்படுத்தும் மற்றும் இரு நாடுகளின் ஆராய்ச்சி மீச்சிறப்பை காட்சிப்படுத்தும்.

**புதிய ஆற்றல் பொருளாதாரத்தை துரிதப்படுத்துதல்**

- ஆஸ்திரேலியா-இந்தியா தூய்மையான தொழில்நுட்பம் மற்றும் இன்றியமையாத கனிமங்கள் தொகுப்பு, ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் புதிய ஆற்றல் பொருளாதாரத்திற்கு நிலைமாறுகின்ற அதே வேளையில் உலக முன்னணி புத்தாக்கங்களைப் பகிர்ந்து கொள்ளும் மற்றும் பணிகளையும் வளர்ச்சியையும் வழங்குவதற்கான வணிக வாய்ப்புகளை கூட்டாகப் பயன்படுத்திக் கொள்ளும்.
- இந்தியா-ஆஸ்திரேலியா பசுமை எஃகு கூட்டாண்மை புத்தாக்கமான தொழில்நுட்பங்களை ஆதரிக்கும், இது குறைந்த உமிழ்வு பொருளாதாரத்திற்கான நிலைமாற்றத்தில் வளத்துறைக்கு எதிர்காலப் பணிகளை வழங்கும்.
- ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொழில்நுட்பத்தில் கூட்டாக இணைந்து செயல்படும், இதன் மூலம் குறைந்த மற்றும் சுழிய மாசு உமிழ்வு தொழில்நுட்பங்களின் செலவைக் குறைத்து, பயன்பாட்டை படிப்படியாக அதிகரிக்க முடியும்.

9

சாத்திய நிலையிலிருந்து பூர்த்தி செய்து வழங்கலுக்கான நிலையை நோக்கிய பயணம்

**எமது வளங்களையும் METS உறவுகளையும் விரிவுபடுத்துதல்**

- இந்தியா-ஆஸ்திரேலியா இன்றியமையாத கனிமங்கள் ஆராய்ச்சி கூட்டாண்மை மற்றும் ஆஸ்திரேலியா-இந்தியா கிரிட்டிக்கல் மினரல்ஸ் முதலீட்டுக் கூட்டாண்மை ஆகியவை வழங்கல் தொடர்களை வலுப்படுத்தும், ஆஸ்திரேலிய ஏற்றுமதிகளுக்கு மதிப்பு கூட்டும் மற்றும் தொழில்நுட்பத்தை வணிகமயமாக்க இந்தியாவுடன் இணைந்து செயல்படும்.
- வளங்கள் மற்றும் METS தொழில்துறை சந்தை அணுகல் மற்றும் ஆயத்தநிலை திட்டம் வளங்கள் மற்றும் METS ஆனது தெற்காசியாவில் எப்படி வணிகம் செய்வது என்பதை நன்கு புரிந்துகொள்ள நிறுவனங்களுக்கு உதவும்.
- உலகளாவிய சுரங்க சவால் - இந்தியா, மிகப்பெரிய தொழில்நுட்ப மற்றும் இயக்க சவால்களை எதிர்கொள்ளும் இந்திய சுரங்கத் தொழிலாளர்களை உலகின் முன்னணி ஆஸ்திரேலிய தீர்வுகளுடன் இணைத்து பயன்பெற உதவும்.

**நமது அறிவியல் மற்றும் புத்தாக்க உறவுகளை உருவாக்குதல்**

- இந்தியா-ஆஸ்திரேலியா புத்தாக்க மற்றும் தொழில்நுட்ப சவால், தொழில்முனைவோரும் சிறு வணிகர்களும் ஆண்டுக்கு 20 அதிநவீன ஆஸ்திரேலிய மற்றும் இந்திய புத்தாக்கங்களைச் சந்தைப்படுத்த உதவும்.
- ஆஸ்திரேலியா-இந்தியா உத்திப்பூர்வ ஆராய்ச்சி நிதியத்திற்காக தொடர்ந்து வழங்கப்பட்டுவரும் நிதியுதவி, இந்தியாவுடன் ஒரு அர்ப்பணிப்புள்ள ஆராய்ச்சி ஓட்டத்தை உறுதி செய்யும், இது வளர்ச்சியை உந்தித் தள்ளி, உற்பத்தித்திறனை அதிகரிக்கும் அறிவியல் மற்றும் புத்தாக்க உறவை ஆதரிக்கும்.
- இருநாடுகளுக்கும் ஒன்றுக்கொன்று ஒத்த கொள்கை முன்னுரிமைகளை ஆதரிக்க செயற்கைக்கோள் தகவல் தொடர்புகள், வழிசெலுத்தல் அமைப்புகள், பூமி கண்காணிப்பு மற்றும் அதன் பயன்பாடுகள் மற்றும் பெருந்தரவு பகுப்பாய்வியல் ஆகியவற்றில் உடனுழைப்பை ஆதரிக்க பன்னாட்டு விண்வெளி முதலீட்டு முன்னெடுப்பு நிதியுதவியை விரிவுபடுத்துதல்.

**சிறந்த வர்த்தகத்திற்கு அடித்தளம் அமைத்தல்**

- செந்தரங்களையும் இணக்க வர்த்தகத்தையும் செயல்படுத்தும் திட்டம், வர்த்தகம் செய்வதற்கான எல்லைக்கு பின்னால் உள்ள தடைகளை எளிதாக்க உதவும் மற்றும் இரு திசைகளிலும் சரக்குகள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியை எளிதாக்கும்.
- இந்தியா-ஆஸ்திரேலியா தானியங்கள் கூட்டாண்மை, தொடர்ந்து வாடிக்கையாளர்களுக்கு வணிகரீதியான சரக்குப் போக்குவரத்துத் துறையையும் வழங்கல் தொடர்களையும் வலுப்படுத்தும் மற்றும் வேளாண் வர்த்தகத்திற்கு ஆதரிக்கும்.
- பொருளாதாரக் கொள்கை மற்றும் ஒழுங்குமுறை மீதான வலுவூட்டப்பட்ட கூட்டாண்மை, பொதுத்துறை நிறுவன உறவுகளையும் அறிவுப் பரிமாற்றத்தையும் உருவாக்கும்.

**உள்கட்டமைப்புத் துறையில் நிறைவேற்றப்படச் சாத்தியமுள்ள பொருளாதாரத்தைக் கைவரப்பெறுதல்**

- ஆஸ்திரேலியா-இந்தியா உள்கட்டமைப்பு மன்றமானது ஆஸ்திரேலிய நிறுவனங்களுக்கு இந்தியாவின் பரந்த உள்கட்டமைப்பு திட்டங்களுடனும் வாய்ப்புகளுடனும் ஈடுபடுவதற்கான பாதையை மென்மையாக்கும்.

**படைப்புசார் மற்றும் பண்பாடுசார் தொழில்களை மேம்படுத்துதல்**

- மைத்ரி பண்பாட்டு கூட்டாண்மை, காட்சிசார் மற்றும் நிகழ்த்து கலைகள், இலக்கியம், திரைப்படம் மற்றும் இசைத் துறைகளில் திட்டப்பணிகள், நிகழ்வுகள், கண்காட்சிகள் மற்றும் தொழில்முறை பரிமாற்றங்களை ஆதரிக்கும்.

**நமது பிராந்திய இருப்பை விரிவுபடுத்துதல்**

- மாலேவில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகம் மாலத்தீவுகளில் உள்ள நமது கல்வி, சுற்றுலா மற்றும் பரந்த பொருளாதார இணைப்புகளை ஆழப்படுத்தும்
- வங்காள விரிகுடா வர்த்தக மற்றும் ஆற்றல் கூட்டாண்மை, இந்தியா, பங்களாதேஷ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் சிறந்த ஏற்றுமதி வாய்ப்புகளை வழங்குவதோடு ஆற்றல் பாதுகாப்பிற்கும் ஆதரவளிக்கும்.
- வங்காள விரிகுடா இணைப்புநிலைக் கூட்டாண்மையானது வணிகரீதியில் கவனம் செலுத்துகின்ற ஆஸ்திரேலியா-இந்தியா உள்கட்டமைப்பு மன்றத்தை (AIIF) 2024-25 ஆம் ஆண்டில் இருந்து மற்ற தெற்காசிய நாடுகளை உள்ளடக்கிய பிராந்திய முன்னெடுப்பாக விரிவுபடுத்தும்.

**அமைச்சு சாம்பியன்கள்**

ஆஸ்திரேலிய அரசின் இந்தியப் பொருளாதார அமைச்சு சாம்பியன்கள் ஆஸ்திரேலியாவில் செயல்பாடுகளை ஊக்குவிக்கின்றனர் மற்றும் தமக்கு ஒத்த இந்திய அமைச்சர்களுடன் ஆக்கப்பூர்வாக ஈடுபடுகின்றனர். இந்த குழுப்பிரிப்பானது IES பரிந்துரைக்கு பதில்வினையாற்றும் வகையில் 2018 இல் உருவாக்கப்பட்டது மற்றும் 2020 இல் விரிவாக்கப்பட்டது. இது இந்தியாவுடனான நமது பொருளாதார உறவுகளுக்கு உத்திப்பூர்வ மேற்பார்வை, ஒருங்கிணைப்பு மற்றும் மிக உயர்ந்த அரசியல் கவனச் செலுத்தத்தை உறுதி செய்கிறது.

**உறுப்பினர்கள்**

- வர்த்தகம், சுற்றுலா மற்றும் முதலீட்டுத் துறை அமைச்சர் (தலைவர்)
- தொழில், எரிசக்தி மற்றும் உமிழ்வு குறைப்பு துறை அமைச்சர்,
- வளங்கள் மற்றும் நீர்வளத் துறை அமைச்சர்
- வேளாண்துறை மற்றும் வட ஆஸ்திரேலியாவுக்கான அமைச்சர்
- கல்வி மற்றும் இளைஞர்நலத்துறை அமைச்சர்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர்
- குடிவரவு, குடியுரிமை, புலம்பெயர்ந்தோர் சேவைகள் மற்றும் பல்பண்பாட்டு உறவுத் துறை அமைச்சர்

**நோக்குனர்கள்**

வெளியுறவு அமைச்சர் மற்றும் மகளிர்நலத் துறை அமைச்சர்

வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் துறை அமைச்சருக்கு உதவும் துணை அமைச்சர்

தலைவர், இந்திய நாடாளுமன்ற நண்பர்கள் குழு









**அறிமுகம்**

ஆஸ்திரேலிய அரசு நமது பொருளாதார மீட்சிக்கு முட்டுக்கொடுக்கவும், ஆஸ்திரேலியர்களின் செழிப்பையும் பாதுகாப்பையும் மேம்படுத்தவும் வலுவான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை உருவாக்கி வருகிறது.

ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் ஒன்றிடம் குறைவாக உள்ள பண்பை மற்றொன்றிடம் இருந்து பெற்று குறைநிரப்பிக்கொள்ளும் பொருளாதாரங்களை உயரளவில் கொண்டுள்ளன. இருநாட்டுப் பொருளாதாரங்களின் நீடிப்புதிறனுள்ள வளர்ச்சியானது, வணிகங்களுக்கான வாய்ப்புகளை தொடர்ந்து மேம்படுத்தும். ஆழ்ந்த சமூக இணைப்புகளாலும் நமது பகிரப்பட்ட நன்னெறி மதிப்புகளாலும் பொருளாதார உறவு தொடர்ந்து வலுப்படும்.

# An India Economic Strategy to 2035 by Australian Government

எமது உறவில் நிறைவேற்றப்படச் சாத்தியமுள்ள பொருளாதாரத்தை கைவரப்பெற உதவுவதற்கு, 2035 ஆம் ஆண்டிற்கான நீண்ட கால கட்டமைப்பாக IES க்கு 2018 ம் ஆண்டில் ஆஸ்திரேலிய அரசு செயலாட்கொண்டது (உள்படத்தைப் பார்க்கவும்). இந்த உத்தியின் கீழ், இந்திய சந்தையில் ஆஸ்திரேலிய நிறுவனங்கள் வெற்றிபெறவும், செழிக்கவும், கொள்கை மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளில் ஈடுபடவும், இந்தியாவில் ஆஸ்திரேலியாவைப் பற்றிய மற்றும் ஆஸ்திரேலியாவில் இந்தியாவைப் பற்றிய புரிதலை மேம்படுத்தவும் ஆஸ்திரேலிய அரசு உதவுகிறது.

இந்தியாவிற்கான உயர்மட்ட பொருளாதார கூட்டாளியாக IESன் இலட்சியத்தை கைவரப்பெறுவதற்கு அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஆஸ்திரேலிய அரசு எங்கு கவனம் செலுத்தும் என்பதை இந்தப் புதுப்பிக்கப்பட்ட அறிக்கை வகுக்கிறது. இது, IES தொடங்கப்பட்டதில் இருந்து மற்றும் ஜூன் 2020 ம் ஆண்டில் பிரதமர் மோரிசன் மற்றும் பிரதமர் மோடியின் விரிவான உத்திப்பூர்வ கூட்டாண்மை (CSP) அறிவிப்பு வெளியிடப்பட்டதில் இருந்து கட்டமைக்கப்பட்ட உந்தத்தை பராமரிக்கிறது


இது, சிறந்து பெருகிவரும் வாய்ப்புகளுக்கு பதிலளிக்கிறது.

இந்தியாவுடனான நமது பொருளாதார உறவுகளில் மையமாக இருக்கும் கல்வி, வளங்கள், வேளாண் வணிகம், சுற்றுலா மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற மரபுவழி வலிமைகளை இந்தப் புதுப்பிக்கப்பட்ட அறிக்கை ஆதரிக்கிறது. இது, இரு நாடுகளின் எதிர்கால செழுமைக்கு அடித்தளமாக இருக்கும் குறைந்த உமிழ்வு தொழில்நுட்பங்கள், சைபர் மற்றும் இன்றியமையாத தொழில்நுட்பங்கள் மற்றும் விண்வெளி போன்ற வளர்ந்து வரும் துறைகளில் முதலீட்டையும் ஒத்துழைப்பையும் விரிவுபடுத்துவதற்கும் நம்மை இடநிலைப்படுத்துகிறது. இது, அறிவியல் மற்றும் புத்தாக்கம் கூட்டாண்மைகளை இயக்க உதவும், இந்த பிரச்சினைகளில் குவாடில் (ஆஸ்திரேலியா-இந்தியா-ஜப்பான்-அமெரிக்கா) நமது ஈடுபாட்டை முழுமையாக்கும்.

இந்தப் புதுப்பிக்கப்பட்ட அறிக்கை தேசிய அளவில் கவனம் செலுத்தினாலும், இந்தியாவின் சந்தையில் உள்ள பன்முகத்தன்மையை அறிந்து, குறிப்பிட்ட மாநிலங்கள் அல்லது பிராந்தியங்களில் கவனம் செலுத்துவதை பரிசீலிப்பதன் மூலம் ஆஸ்திரேலிய நிறுவனங்களுக்கான மதிப்பை நாங்கள் தொடர்ந்து ஆதரிக்கிறோம்.

இந்த புதுப்பிக்கப்பட்ட அறிக்கையானது இந்திய தொழில்துறைக் கூட்டமைப்பு மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் முன்னாள் செயலர் (கிழக்கு) தூதர் அனில் வாத்வா வழங்கிய ஆஸ்திரேலியா பொருளாதார உத்தியை (AES) எமது கூட்டாண்மையின் மெய்யான பொருளை விளக்கும் குறைநிரப்பு உத்தியாக மதிப்பிடுகிறது.

**உலக GDP முன்னறிவிப்புகளின் பங்கு (PPP)**



உலகளாவிய GDP (மொத்த உள்நாட்டு உற்பத்தி) சதவீதம்

இந்தியா சீனா இந்தோனேசியா ஜப்பான் அமெரிக்கா

ஆதாரமூலம்: IMF உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் - அக்டோபர் 2021, மற்றும் ஆஸ்திரேலிய கருவூலத் துறை, 2021



**2035-ம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய இந்தியப் பொருளாதார உத்தி: சாத்திய நிலையிலிருந்து பூர்த்தி செய்து வழங்கலுக்கான நிலையை நோக்கிய பயணம்(IES)**

2017 ஆம் ஆண்டில், ஆஸ்திரேலிய அரசு இந்தியாவுடனான தன் பொருளாதார கூட்டாண்மையை ஆழப்படுத்த ஆஸ்திரேலியாவுக்கு இலக்கை அடைவதற்கான பயணத்திட்டம் ஒன்றை வழங்குவதற்காக இந்தியாவுக்கான முன்னாள் ஆஸ்திரேலிய தூதரும், வெளியுறவு மற்றும் வர்த்தகத் துறையின் முன்னாள் செயலாளருமான திரு. பீட்டர் வர்கீஸ் AOவை நியமித்தது.

IES ஆனது 2018 ம் ஆண்டில் ஆஸ்திரேலிய அரசால் வெளியிடப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. IES ஆனது ஆஸ்திரேலிய அரசாங்கத்தை நோக்கி இயக்கப்பட்டாலும், இது ஆஸ்திரேலிய மாநில மற்றும் பிரதேச அரசுகள் மற்றும் தனியார் துறை ஆகியவற்றின் அத்தியாவசியப் பங்குகளையும் கோடிட்டுக் காட்டியது.

எதிர்காலத்தில் ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளுள் ஒன்றிடம் குறைவாக உள்ள பண்பை மற்றொன்றிடம் இருந்து பெற்று குறைநிரப்பிக்கொள்ளும் தன்மையின் மிக விரிவான பகுப்பாய்வாக IES உள்ளது. 2035 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை தலையாய மூன்று ஏற்றுமதி இலக்கிடங்களுள் ஒன்றாகவும், ஆசியாவில் தலையாய மூன்று வெளிச்செல்லும் முதலீட்டு இலக்கிடங்களுள் ஒன்றாகவும் மாற்றும் இலட்சியங்கள் IES இன் மையப்பொருளாக உள்ளது.

செயல்படுத்தலின் ஆரம்ப கட்டத்தில் கீழ்கண்ட முக்கிய முன்னேற்றம் உள்ளடங்கும்:

- கொல்கத்தாவில் துணைத் தூதரகத்தை தொடங்குதல்
- சுற்றுலாத் துறைக்கான 'இந்தியா-ஆயத்தம்' பயிற்சியைத் தொடங்குதல்
- ஆஸ்திரேலியா-இந்தியா உத்திப்பூர்வ ஆராய்ச்சி நிதியை 15 மில்லியன் ஆஸ்திரேலிய டாலர்களுடன் நான்கு ஆண்டுகளுக்கு நீட்டித்தல்
- மேலதிக நேரடி விமானங்களை இயக்க விமான சேவை ஒப்பந்தத்தை நிறுவுதல்
- ஆஸ்திரேலிய ஏற்றுமதியாளர்களுக்கான இந்தியாவின் வேளாண் தேவையின் முன்னறிவிப்பை மேம்படுத்துதல்.

கூடுதலாக, ஆஸ்திரேலிய அரசு, இந்தியா பற்றிய மாநில கல்வி மன்றத்தை நிறுவியுள்ளது; ஆஸ்திரேலியாவின் கல்வி முறையை காட்சிப்படுத்தும் இருதரப்பு பன்னாட்டுக் கல்வி மற்றும் ஆராய்ச்சி பயிலரங்கை நடத்தியது; மற்றும் ஆஸ்திரேலிய பழங்கள் ஏற்றுமதியை எளிதாக்குவதற்கு உயிர்ப்பாதுகாப்பு பயிற்சியை அளித்தது.

பொருளாதார உறவுக்கான எமது கொள்கையை வழிநடத்தும் கட்டமைப்பாக IES உள்ளது. அரசு, IES ன் செயல்படுத்தலை ஆதரிப்பதற்கும், உந்தத்தைத் தக்கவைப்பதற்கும், காலமுறையுள்ள, செயல் சார்ந்த புதுப்பிப்புகளைத் தொடர்ந்து வழங்கும்.

வணிகரீதியாக அர்த்தமுள்ள விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை இறுதிப்படுத்துவது இந்த முயற்சிகளுக்கு ஒரு இன்றியமையாத துணைநிகழ்வாக இருக்கும்.

2018 இல் வெளியிடப்பட்ட IESஐ இங்கே பெறலாம்: indiaeconomicstrategy.dfat.gov.au

இந்த புதுப்பிக்கப்பட்ட அறிக்கையை இங்கே பெறலாம்: dfat.gov.au/IESUpdate

ஆஸ்திரேலிய அரசு, இந்த அறிக்கையை தயாரிக்கும் பணியில் ஆஸ்திரேலியாவிலும் இந்தியாவிலும், அரசு மற்றும் தொழில்துறையிலும் உள்ள 600-க்கும் மேற்பட்ட பங்குதாரர்களிடம் கலந்தாலோசித்தது. இந்தப் புதுப்பிக்கப்பட்ட அறிக்கையைத் தயாரிப்பதில் அவர்களின் கருத்துக்களைப் பிரதிபலிக்க அரசு முயன்றது. வணிகங்கள், மாநில மற்றும் பிரதேச அரசுகள், புலம்பெயர் சமூகங்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் தொடர்ந்து ஈடுபடுவது, இந்தியாவுடனான பொருளாதார ஒருங்கிணைப்பை ஆழப்படுத்துவதற்கான அரசின் பணிகளுக்கு இன்றியமையாததாக இருக்கும்.

இந்த புதுப்பிக்கப்பட்ட அறிக்கையானது பாலின சமத்துவம், அனைத்தையும்/அனைவரையும் உள்ளடக்குதல், பன்முகத்தன்மை மற்றும் சரிஒப்பு ஆகிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. இது, இந்த ஐந்தாண்டு செயல் திட்டத்தை செயல்படுத்துவதில் ஒருங்கிணைக்கப்படும்.



**இந்தியப் பொருளாதாரம்: வளர்ச்சி, சீர்திருத்தம் மற்றும் வாய்ப்பு**

2024-ம் ஆண்டுக்குள் இந்தியா உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக மாறும் என்று கணிக்கப்பட்டுள்ளது. 2 இளம் மக்கள்தொகை, வளர்ந்து வரும் நுகர்வோர் வர்க்கம், முறைசார்ந்த பணிகளில் மேலதிக மக்கள் பணியமர்த்தப்படுதல், தொழில்நுட்பத்தின் பெருமளவிலான வளர்ச்சி, குறிப்பிடத்தக்க உள்கட்டமைப்பு முதலீடு மற்றும் விரைவான நகரமயமாக்கல் ஆகியவை இந்த புதுப்பிக்கப்பட்ட அறிக்கையின் காலப்பகுதியில் வளர்ச்சியை ஏற்படுத்தும்.

கோவிட்-19-ல் இருந்து இந்தியாவின் பொருளாதாரம் மீண்டு வருகிறது. விரைவான வெகுமக்கள் தடுப்பூசியளிப்பு நம்பிக்கையை மீட்டெடுக்கிறது. 2026 ம் ஆண்டு வரை, இந்தியாவின் GDP ஆனது 2019 ஆம் அண்டின் நிலைகளில் இருந்து 53 சதவீதம் அதிகரிக்கும் என்று IMF கணித்துள்ளது. 3

மேலதிக வலுவான வளர்ச்சியை உருவாக்கும் சீர்திருத்தங்களுக்கு குறிப்பிடத்தக்க சாத்தியம் உள்ளது. திட்டமிடப்பட்ட சீர்திருத்தங்களில் வங்கித் துறையின் மீள்திறனை மேம்படுத்துதல், எதிர்பார்த்த பலனளிக்காமல் உள்ள பொதுச் சொத்துக்களை தனியார்மயமாக்கல், மூன்றாம் நிலைக் கல்வித் துறையைத் திறத்தல், சிறப்புப் பொருளாதார மண்டலங்களை மேம்படுத்துதல் மற்றும் வரிவிதிப்பை மேம்படுத்துதல் போன்ற கொள்கைகள் அடங்கும். நிதி வெளிப்படைத்தன்மை மற்றும் பசுமையான பொருளாதாரம் ஆகியவை செயற்குறிப்பில் உள்ளன. தூய்மையான, மேலதிக நம்பகமான மற்றும் குறைந்த செலவில் மின்சாரத்தை வழங்க ஆற்றல் சீர்திருத்தங்கள் வகுக்கப்பட்டுள்ளன. பெண் பணியாளர்களின் பங்கேற்பை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதோடு, இதுவரை பயன்படுத்தப்படாத நிறைவேற்றப்படச் சாத்தியமுள்ள பொருளாதாரத்தை கைவரப்பெற உதவும்.

சீர்திருத்தங்கள் சரிவுகளை எதிர்கொள்ளலாம் மற்றும் தொழில்துறை விரும்புவதை விட மெதுவாக செயல்படுத்தலாம். எனினும், பரந்த வளர்ச்சிப் பாதை மற்றும் தொழில்முறை முதலீட்டுக்  கொள்கைகள், வாய்ப்புகளை அதிகரிக்கும்.

IES இல் அமைக்கப்பட்டுள்ள, இரு நாடுகளுள் ஒன்றிடம் குறைவாக உள்ள கட்டமைப்புசார் பண்பை மற்றொன்றிடம் இருந்து பெற்று குறைநிரப்பிக்கொள்தவதுடன் கூடுதலாக, இவ்விரு அரசுகளுக்கு இடையேயான நேரடி நெருக்கமான உறவானது, இன்றியமையாத மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், விண்வெளி மற்றும் இன்றியமையாத கனிமங்கள் போன்ற துறைகளில் புதிய வணிக வாய்ப்புகளைத் திறக்கும்.

ஆசியாவில் பிற இடங்களில் அதிகரித்து வரும் கூலிகள், வர்த்தகப் பதற்றங்கள் மற்றும் வணிக இடரைப் பன்முகப்படுத்துவதற்கான முயற்சிகள் ஆகியவை உலகளாவிய வழங்கல் தொடர்களின் பகுதிகளை இந்தியாவுக்கு இடமாற்றம் செய்வதற்கு சாதகமாக இருக்கும். இந்தியாவால் தனது உற்பத்தித் துறையை அதிகரிக்க முடியுமானால், அது இன்றியமையாத கனிமங்கள் உட்பட ஆஸ்திரேலிய வேளாண்ம் மற்றும் வள விளைபொருட்களுக்கு புதிய வாய்ப்புகளை வழங்க முடியும்.


சேவைத் துறை உயர் மதிப்புள்ள பணிகளை மென்மேலும் உருவாக்கும். படித்த பணியாளர்கள் மற்றும் போட்டிக்கான மேலதிக வெளிப்படைத்தன்மை ஆகியவை சேவைத் துறைக்கு வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்கின்றன.

தொழில்நுட்ப நிறுவனங்களால் செய்யப்பட்ட முதலீடுகள், 2020 ஆம் ஆண்டில், FDI க்கான சிறந்த உலகளாவிய இலக்கிடமாக இந்தியா மாறுவதற்கு பங்களித்தது, இது உலகளவில் நம்பகமான தொழில்நுட்ப திறமைகளின் ஆதாரமாக இந்தியாவின் தகுதிநிலையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. 4

பெருந்தொற்று இந்தியாவின் டிஜிட்டல் நிலைமாற்றத்தை துரிதப்படுத்தியுள்ளது. ஒரு மதிப்பீட்டின்படி, இந்தியாவின் இ-காமர்ஸ் சந்தை 2025 ஆம் ஆண்டுக்குள் 150 பில்லியன் ஆஸ்திரேலிய டாலர்களாக வளரும்.

**இந்தியாவின் வேகமாக வளரும் பொருளாதாரம் மேலதிக வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கும்**

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது (GDP) ஆசியான் நாடுகளுக்கு ஒப்பான விகிதத்தில் வளரும் என்று IMF கணித்துள்ளது - மேலும் 2026 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ASEAN இன் 91% ஆக இருக்கலாம்.




GDP (US$ பில்லியன்)

GDP வளர்ச்சி விகிதம் (% ஆண்டுக்கு ஆண்டு)

இந்தியா (GDP வளர்ச்சி விகிதம்) ஆசியான் (GDP வளர்ச்சி விகிதம்) இந்தியா (GDP) ஆசியான் (GDP)

ஆதாரமூலம்: IMF உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம்: GDP (தற்போதைய விலைகள்) அக்டோபர் 2021

2 உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம், IMF, அக்டோபர் 2021

3 உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம், IMF, அக்டோபர் 2021


4 உலக முதலீட்டு அறிக்கை, UNCTAD, 2021.

5 இந்தியாவில் இ-காமர்ஸ், இந்தியா பிராண்ட் ஈக்விட்டி ஃபவுண்டேஷன், 2021



**இந்தியாவின் வளர்ந்து வரும் மக்கள்தொகை வலுவான பொருளாதார வளர்ச்சி கணிப்புகளுக்கு அடித்தளமாக இருக்கிறது**

இந்தியாவின் மக்கள்தொகை 2020 முதல் 2026 ம் ஆண்டு வரை 77 மில்லியன் அளவுக்கு அதிகரிக்கும் - இது, தாய்லாந்தின் ஒட்டுமொத்த 2020ம் ஆண்டு மக்கள்தொகையை விட அதிகமாக இருக்கும்.





இந்தியா ஆசியான்

மக்கள் தொகை (மில்லியன்கள்)

ஆதாரமூலம்: IMF உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம்: GDP (தற்போதைய விலைகள்) அக்டோபர் 2021

**இந்தியாவின் படித்த பணியாளர்களால் ஆஸ்திரேலிய கல்வி ஏற்றுமதிகளுக்கான தேவை அதிகரிக்கும்**

இந்தியாவின் படித்த பணியாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து வளர்ந்து வருகிறது, மேல்நிலைப் பள்ளி பட்டதாரிகளில் கிட்டத்தட்ட 30% பேர், மூன்றாம் நிலை நிறுவனங்களில் சேர்ந்துள்ளனர்.




மூன்றாம் நிலை நிறுவனங்களில் சேர்ந்துள்ள மேல்நிலைப் பள்ளி பட்டதாரிகளின் %*

ஆதாரமூலம்: யுனெஸ்கோ: இந்தியா – கல்வி மற்றும் எழுத்தறிவு, 2021

* பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழிற்பயிற்சி

தொழில்நுட்பத் துறையில் சிறந்த இணைப்புகளை ஆதரிக்க, அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

- ஆஸ்திரேலியா-இந்தியா சைபர் மற்றும் இன்றியமையாத தொழில்நுட்பம் கூட்டாண்மையின் கீழ் எதிர்கால மானியங்கள் மூலம் இன்றியமையாத மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பச் செந்தரங்கள், நன்னெறி கட்டமைப்புகள் மற்றும் மிகச்சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றில் ஆஸ்திரேலிய மற்றும் இந்திய ஆராய்ச்சி ஒத்துழைப்பை ஆதரித்தல்
- திறன்பெற்றோர் குடிபெயர்வுத் திட்டம், உலகளாவிய திறமை திட்டம் மற்றும் குடிபெயர்வு மற்றும் இடம்பெயர்வு கூட்டாண்மை ஏற்பாடு உட்பட இரு நாடுகளுக்கு இடையே திறன்பெற்ற தொழில்நுட்ப பணியாளர்களை எளிதாக இடம்பெயர்த்துவதற்கான வழிகளை ஆராய்தல்.
- இந்தியாவுடன் இருதரப்பு ரீதியாகவும், குவாட் போன்ற சிறிய எண்ணிக்கையிலான குழுக்கள் மூலமாகவும், இருதரப்பு ரீதியாகவும், இருநாடுகளுக்கும் ஒன்றுக்கொன்று ஒத்த முறையில் சைபர் பாதுகாப்பு தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்காக பலதரப்பு கம்ப்யூட்டர் அவசரநிலைப் பதில்வினைக் குழு (CERT) சமூகங்கள் மூலம் தற்போதுள்ள சைபர் பாதுகாப்பு இயக்க ஈடுபாட்டை பெருக்குதல்.





**தொழில்நுட்ப கூட்டாளிகள்: சைபர் வெளியில் இருந்து புறவெளி வரை**

இந்தியா உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் ஆற்றல்மிக்க தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க சூழலமைப்புகளில் ஒன்றாகும். 2025 ஆம் ஆண்டுக்குள், இந்தியா 900 மில்லியன் இன்டர்நெட் பயனர்களைக் கொண்டிருக்கும் மற்றும் 1.35 டிரில்லியன் ஆஸ்திரேலிய டாலர் டிஜிட்டல் பொருளாதாரத்தை கைவரப்பெறுவதற்கு தீவிரமாக பாடுபடுகிறது. 6

இது, உலகளாவிய தொழில்நுட்ப பொருளாதாரத்திற்கு மென்மேலும் முக்கியமானது. இந்தியா தற்போது 80க்கும் மேற்பட்ட 'யூனிகார்ன்'களை வழங்குகிறது - 1 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் அதிகமான சந்தை மதிப்பு கொண்ட ஸ்டார்ட்அப்கள் - இவற்றில் பாதிக்கும் மேலானவை 2021 ம் ஆண்டில் மட்டுமே சேர்க்கப்பட்டவை ஆகும். கம்ப்யூட்டர் மற்றும் தகவல் சேவைகள் இந்தியாவின் தலையாயச் சேவைகள் ஏற்றுமதியாகும், 2019 ம் ஆண்டில் கிட்டத்தட்ட A$130 பில்லியன் மதிப்புடையது. 7

ஆஸ்திரேலியாவை ஒரு விருப்பமான தொழில்நுட்ப கூட்டாளியாக நிலைநிறுத்த, ஆஸ்திரேலிய தொழில்நுட்ப வணிகங்கள் இந்தியாவுக்குள் நுழைவதற்கு உதவுவதற்கும், முன்னணி தொழில்நுட்பங்கள் மற்றும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை உண்டாக்கும் திறன்கொண்ட தயாரிப்புகளின் ‘கட்டாயம் பரிசீலிக்கப்படவேண்டிய’ ஆதாரமாக ஆஸ்திரேலியா இருப்பதை உறுதி செய்வதற்கும் ஆஸ்திரேலிய அரசு தீவிர முயற்சி எடுக்கும்.

சர்வதேச போட்டியாளர்கள் தென்னிந்தியாவில் மேம்பட்ட இராஜதந்திர இருப்பு மூலம் இந்தியாவில் வாய்ப்புகளை கைப்பற்ற தங்கள் வணிகங்களை தீவிரமாக ஆதரிக்கின்றனர்.

ஆஸ்திரேலிய அரசு, இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் புத்தாக்க சூழலமைப்பு அமைப்பை அணுக விரும்பும் ஆஸ்திரேலிய தொழில்நுட்ப நிறுவனங்களுக்கான ஆதரவை விரிவுபடுத்தும் மற்றும் இந்தியாவில் உள்ள கூட்டாளிகள், வாடிக்கையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடன் வலுவான தொடர்புகளை பிணைக்கும்.

இந்தியாவின் உற்பத்தித் தளம் ஆஸ்திரேலிய புத்தாக்கங்களை உலகிற்கு வழங்குவதற்கு இருநாடுகளுக்கும் ஒன்றுக்கொன்று ஒத்த நன்மை பயக்கும் கூட்டாண்மைக்கான சாத்தியத்தை வழங்குகிறது.

புத்தாக்கமான தொழில்நுட்பங்கள் மற்றும் சேவைகளில் ஆஸ்திரேலியாவின் வர்த்தகத்தை ஆஸ்திரேலிய அரசு ஊக்குவிக்கும் மற்றும் டிஜிட்டல் சுகாதாரநலம், நிதி தொழில்நுட்பம் (ஃபின்டெக்), ஸ்மார்ட் உள்கட்டமைப்பு, வேளாண் தொழில்நுட்பம் (அக்ரிடெக்), சைபர் பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு, ஆற்றல் திறன், சுற்றுச்சூழல் தொழில்நுட்பம், விண்வெளி தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றில் இந்திய தொழில்துறையுடன் கூட்டாண்மையை ஊக்குவிக்கும்.

இந்தத் துறையில் வர்த்தகம் ஏற்கனவே வலுவாக உள்ளது: 2019-20 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவிற்கு இந்தியாவின் இரண்டாவது பெரிய ஏற்றுமதியாக தகவல் தொழில்நுட்பச் சேவைகள் உள்ளது.

திறமை ஈர்ப்பு மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களுக்கான சிறந்த இடம்பெயர்வு ஆகியவற்றின் மூலம் இந்திய நிபுணத்துவத்தை மேம்படுத்துவதற்கு ஆஸ்திரேலிய நிறுவனங்களை ஆஸ்திரேலிய அரசு ஆதரிக்கும்.

இந்தியாவின் மென்மேலும் நன்கு படித்த தொழில்நுட்பப் பணியாளர்களின் போட்டித்தன்மையையும் அளவுகோலையும் போட்டியாக சில நாடுகள் எதிர்கொள்கின்றன. வணிகச் செயல்முறை புறப்பணியாக்கத்துடன் கூடுதலாக, நிறுவனங்கள் தயாரிப்பு மேம்பாடு மற்றும் புத்தாக்கமாக இந்தியாவை எதிர்பார்க்கின்றன. பல முக்கிய ஆஸ்திரேலிய நிறுவனங்கள் ஏற்கனவே இந்தியாவில் உள்ளூர் பொறியியல் மற்றும் R&D திறமையாளர்களுடன் கூட்டாளி ஆவதற்கு உலகளாவிய திறன் மையங்களை நிறுவியுள்ளன.

ஆஸ்திரேலியாவில் மேலதிக இந்திய முதலீட்டை ஆஸ்திரேலிய அரசு ஊக்குவிக்கும். TCS, Infosys, HCL, Wipro மற்றும் Tech Mahindra போன்ற இந்திய தொழில்நுட்ப பெருநிறுவனங்கள் ஏற்கனவே ஆஸ்திரேலியாவில் பெரிய இயக்கங்களைக் கொண்டுள்ளன. இவை, முதன்மையாக ஆஸ்திரேலிய குடிமக்களைப் பணியமர்த்துகின்றன மற்றும் ஆஸ்திரேலிய உற்பத்தித்திறனை மேம்படுத்துகின்றன. ஆஸ்திரேலியாவின் தொழில்நுட்பத் துறைகளில் மேலதிக வளர்ச்சியை ஆதரிப்பதற்காக இந்தியாவில் இருந்து விரிவாக்கப்பட்ட மற்றும் புதிய அந்நிய நேரடி முதலீட்டை (FDI) ஈர்க்க ஆஸ்திரேலிய அரசு தொடர்ந்து பணியாற்றும்.

5G/6G, செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் கம்ப்யூட்டிங், பிளாக்செயின் மற்றும் செயற்கை உயிரியல் போன்ற புதிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் உற்சாகமான புதிய சாத்தியங்களைத் திறக்கின்றன, ஆனால் உத்திப்பூர்வ போட்டி மற்றும் இடரின் திசையன்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. பாதுகாப்பான மற்றும் நம்பகமான தொழில்நுட்பத்தில் நமது பகிரப்பட்ட ஆர்வத்தை முன்னேற்றுவதற்காக, இந்தியாவுடனான நமது நெருக்கமான ஈடுபாட்டை ஆஸ்திரேலிய அரசு விரிவுபடுத்தும்.

6 இந்தியாவின் டிரில்லியன் டாலர் டிஜிட்டல் வாய்ப்பு, இந்திய அரசு, 2021

7 பொருளாதாரச் சிக்கல்களுக்கான கண்காணிப்பகம், 2021.

# An India Economic Strategy to 2035 by Australian Government

**இன்டர்நெட் இணைப்புநிலை**

நான்கு ஆண்டுகளில் இருமடங்கைவிட அதிகமாகியுள்ளது

பெரிய டிஜிட்டல் பொருளாதாரத்தை கட்டமைக்க இந்திய அரசு தீவிரமாக முயற்சி செய்து வருகிறது

2025க்குள் $1.35 டிரில்லியன் என்பது இலக்கு

2018 இல் $270 பில்லியன்

அரை பில்லியனுக்கும் அதிகமான இன்டர்நெட் பயனர்கள்

2025க்குள் 900 மில்லியனாக இது உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது

**செயல் திட்டம்**

பெங்களூருவில் உள்ள புதிய துணைத் தூதரகம், இந்தியாவில் ஆஸ்திரேலியாவின் ஐந்தாவது தூதரக முகமையாகும். இது, நமது இலட்சிய நிலைக்கு பொருத்தமான முறையில் இந்தியாவில் ஆஸ்திரேலிய இருப்புக்கான IES இன் பரிந்துரைகளை நிறைவு செய்கிறது, மேலும் நமது இந்திய வலையமைப்பின் உருவஅளவை நமது உயர்ந்த உலகளாவிய முன்னுரிமைகளுக்கு இணக்கமாகக் கொண்டு வருகிறது.

ஆசியாவின் சிலிக்கான் பள்ளத்தாக்கு என அழைக்கப்படும் பெங்களூரு, உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப மையமாக உள்ளது மற்றும் இந்திய தேசிய விண்வெளி திட்டத்தை வழங்குகிறது. துணைத் தூதரகம் கட்டமைக்கும் ஆஸ்ட்ரேடு (ஆஸ்திரேலிய வர்த்தக மற்றும் முதலீட்டு ஆணையம்) அலுவலகம், வளர்ந்து வரும் பன்னாட்டு இராஜதந்திர சமூகத்துடனும், கணிசமான ஆஸ்திரேலிய வணிக இருப்புடனும் சேரும்.

துணைத் தூதரகம் அதிகாரப்பூர்வ, வணிக மற்றும் ஆராய்ச்சி இணைப்புகளை உருவாக்கும். இந்திய சந்தையில் அரசுக்கும் அரசுக்குமான இடையேயான நேரடி ஈடுபாடு முக்கிய பங்கு வகிக்கிறது. ஆஸ்திரேலிய ஆராய்ச்சியாளர்களும், புதுமையாளர்களும் இந்தியாவின் ஆற்றல்மிக்க தொழில்நுட்பம், விண்வெளி மற்றும் அறிவியல் துறைகளை வழிநடத்தவும், புத்தாக்கங்களை வணிகமயமாக்கவும் துணைத் தூதரகம் உதவும்.

உலகம் முழுவதும், தொழில்நுட்பம் அதன் பயன்பாட்டை ஆளும் விதிகளையும் விதிமுறைகளையும் விட வேகமாக வளர்ந்து வருகிறது. இன்றியமையாத மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பக் கொள்கைக்கான ஆஸ்திரேலியா-இந்தியா உயர் நேர்த்தி மையம், கொள்கைக்கும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைத்து, அரசு, கல்வியாளர்கள் மற்றும் தொழில்துறையை ஒன்றிணைத்து, தொழில்நுட்ப ஆளுகையின் வெளிப்படையான, பல-பங்குதாரர் ஒப்புருவிற்கு பங்களிக்கும். இந்த மையம் சிறந்த வணிக உறவுகளை ஆதரிக்கும், மற்றும் இடர்களைக் குறைக்கின்ற அதே வேளையில் இன்றியமையாத தொழில்நுட்பத்தின் வாய்ப்புகளைப் பயன்படுத்தும். இது, சைபர் தொழில்நுட்பம் மற்றும் வளர்ந்து வரும் இன்றியமையாத தொழில்நுட்பங்கள் மற்றும் தகவல் இயக்கங்கள் மற்றும் புரளி தொடர்பான சிக்கல்கள் பற்றிய உலகளாவிய விவாதங்களில் முன்னணி குரலாக இருக்கும். மேலும், ஆஸ்திரேலியாவின் பன்னாட்டு சைபர் மற்றும் இன்றியமையாத தொழில்நுடப ஈடுபாட்டு உத்தியை வழங்க உதவும்.

இந்த மையம், ஜூன் 2020 இல் கையொப்பமிடப்பட்ட சைபர் மற்றும் சைபர்-தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் இன்றியமையாத தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான இருதரப்பு கட்டமைப்பு ஏற்பாட்டின் கீழ் ஆஸ்திரேலியா மற்றும் இந்தியாவின் ஒத்துழைப்பை முழுமையாக்குகிறது. இருதரப்பு சைபர் பேச்சுவார்த்தைகள் மற்றும் ஆஸ்திரேலியா-இந்தியா சைபர் மற்றும் இன்றியமையாத தொழில்நுடபக் கூட்டாண்மை மானியங்கள் திட்டம் மூலம் வெளிப்படையான,

கட்டற்ற, பாதுகாப்பான மற்றும் பத்திரமான இன்டர்நெட்டை வடிவமைக்க நாங்கள் உழைத்து வருகிறோம்.

18

**செயல் திட்டம்**

ஆஸ்திரேலிய அரசு **ஆஸ்திரேலியா-இந்தியா புத்தாக்க வலையமைப்பை** நிறுவும். இது, இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் புத்தாக்க சூழலமைப்பு அமைப்பை அணுக விரும்பும் ஆஸ்திரேலிய தொழில்நுட்ப நிறுவனங்களுக்கான ஆதரவை விரிவுபடுத்தும் மற்றும் இந்தியாவில் உள்ள கூட்டாளிகள், வாடிக்கையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடன் வலுவான தொடர்புகளை பிணைக்கும்.

இந்தியாவில் உள்ள ஆஸ்திரேலிய தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு மென்மையான தரையிறக்கங்களை வழங்கும் புத்தாக்க மையங்கள், இன்குபேட்டர்கள் மற்றும் ஆக்ஸிலரேட்டர்களுக்கு இடையேயான கூட்டாண்மைகளை புத்தாக்க வலையமைப்பு பேணி வளர்க்கும். புத்தாக்க வலையமைப்பானது, ஆஸ்திரேலிய தொழில்நுட்ப நிறுவனங்களுக்காக காட்சிப்படுத்தல் நிகழ்வுகளை வழங்கும், சந்தைக்கு ஒத்த கருத்துடைய வருகைகளை ஆதரிக்கும், சாத்தியமுள்ள முதலீட்டாளர்களிடம் இருந்து நிதியுதவி பெறுவதற்காக வணிகத் திட்டத்தை வழங்கும் அமர்வுகளையும், புதியவர்களுக்கு பயிற்சி வகுப்புகளையும் மேற்கொள்ளும். புத்தாக்க வலையமைப்பு இந்திய தொழில்நுட்ப நிறுவனங்களுடனும் முதலீட்டாளர்களுடனும் இணைந்து செயல்பட்டு, அவற்றை தொடர்புடைய திறன்களைக் கொண்ட ஆஸ்திரேலிய வணிகங்களுடன் பொருத்தும். இதன் மூலம், வணிகத்திற்கு முந்தைய புதுமையாளர்கள், ஸ்கேல்-அப்ஸ் மற்றும் நன்கு நிறுவப்பட்ட நிறுவனங்கள் ஆகியவற்றுடன் ஈடுபட முடியும்.

ஆஸ்திரேலியாவில், புத்தாக்க வலையமைப்பானது, இந்தியாவின் தொழில்நுட்ப வணிகங்களுடன் வெற்றிகரமாக ஈடுபடுவதற்கு தேவையான திறனை வணிகங்களின் தொடரமைப்பு கொண்டிருப்பதை உறுதி செய்வதற்காகவும், முதலீட்டாளர்கள் உற்பத்தி சார்ந்த வணிகக் கூட்டாண்மைகளை உருவாக்குவதற்காகவும், புதியவர்களுக்குக் கொடுக்கப்படும் பயிற்சி வகுப்புகள் மற்றும் முதலீட்டாளர்களிடம் இருந்து நிதியுதவி பெறுவதற்காக வணிகத் திட்டத்தை வழங்கும் அமர்வுகள் உள்ளிட்ட இந்தியா சார்ந்த சந்தை அறிமுகத் திட்டங்களை வழங்கும். வணிகமயமாக்கல் மானியங்களை துரிதப்படுத்தும் திட்டம் போன்ற தற்போதைய அரசாங்க வணிகமயமாக்கல் திட்டங்களை இத்திட்டம் சிறப்பாக பயன்படுத்தும்.

**நேர்வு ஆய்வு: அட்லாஸ்சியன்**

தொழில்நுட்ப நிறுவனமான அட்லாஸ்சியன்-க்கு, இந்தியாவின் பெங்களூருவில் உலகத் தரம் வாய்ந்த R&D மையத்தைத் திறப்பது என்பது மிக எளிதான செயலாக இருந்தது. இந்த பிராந்தியத்தில் தொழில்நுட்ப திறமை நிறைந்து இருப்பதால், நிறுவனம் தனது நீண்ட கால இலக்குகளுடன் நேரமைந்த இடமாக இது இருக்கும் என்பதை அறிந்திருந்தது. 2018 ஆம் ஆண்டில் 60 க்கும் மேற்பட்ட ஊழியர்களுடன் தொடங்கப்பட்ட இந்நிறுவனம் தற்போது இந்தியாவில் 900 க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்டுள்ளது. அடுத்த ஆண்டில் 300 க்கும் மேற்பட்ட பொறியாளர்களை பணியமர்த்துவதற்கான குறிக்கோளை அடைவதில் தீவிரமான திட்டங்களுடன் உள்ளது. இதன் காரணமாக, வணிகத்தின் மிக வேகமாக வளர்ந்து வரும் திறன் குவிமையமாக இந்த பிராந்தியம் மாறியுள்ளது.

இன்று, தகவல் தொழில்நுட்பச் சேவை மேலாண்மை சந்தைக்கான அதன் தயாரிப்புகளின் பெரும்பகுதிகளும் அதன் கிளவுட் தளம் மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றின் பெரிய பகுதிகளும் இந்தியாவில் இருந்து கட்டமைக்கப்படுகின்றன. அட்லாசியன் இணைத் தலைமைச் செயல் அதிகாரியும் இணை நிறுவனருமான மைக் கேன்னான்-ப்ரூக்ஸ் கூறுகிறார், "நாங்கள்

இந்தியாவில் உண்மையிலேயே அர்த்தமுள்ள பணியைச் செய்ய விரும்புகிறோம், அது எமது வணிகத்தில் உண்மையிலேயே உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இது, எமது உலகளாவிய R&D ஆட்பலத்தின் இன்றியமையாத பகுதியாகும்."

கிரேட் ப்ளேஸ் டு ஒர்க் இன்ஸ்டிடியூட் மூலம் நடத்தப்பட்ட ஆய்வில், இந்தியாவின் தலையாய 20 சிறந்த பணியிடங்களில் இந்த ஆண்டு அட்லாசியன் இடம் பிடித்தது. அட்லாசியன் தமது ஊழியர்களின் உள்ளார்ந்த திறனை வெளிக்கொணர அதிகாரம் அளிப்பதன் மூலம், உலகெங்கிலும் உள்ள தமது வாடிக்கையாளர்களின் உள்ளார்ந்த திறனையும் வெளிக்கொணர உதவுகின்ற தமது குறிப்பணியை நிறைவேற்ற முடியும் என்று நம்புகிறது.

19

**நேர்வு ஆய்வு: டாடா கன்சல்டன்சி சர்வீசஸ்**

உலகளாவிய இந்திய தொழில்நுட்ப நிறுவனமான **டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (TCS)** ஆஸ்திரேலியப் பங்குச் சந்தையில் உள்ள பெரும்பாலான தலையாய 10 நிறுவனங்கள் உட்பட, குறிப்பிடத்தக்க ஆஸ்திரேலிய வாடிக்கையாளர் தளத்தைக் கொண்டுள்ளது. "எமது உத்திப்பூர்வ நோக்கம் ஆஸ்திரேலிய வளர்ச்சிக் கதையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்பதாகும்," என்கிறார் டிசிஎஸ் நிறுவனத்தின் ஆஸ்திரேலியத் தலைவர் விக்ரம் சிங், "நாங்கள் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இங்கு இருக்கிறோம் - நாங்கள் இன்னும் நெடுந்தொலைவு செல்ல உறுதியுடன் இங்கே இருக்கிறோம்."

இந்தியாவில் உள்ளது போலவே ஆஸ்திரேலியாவிலும், டிசிஎஸ் நிறுவனம் திட்டங்கள் மீதும், பணியாளர்கள் மீதும் அதிக முதலீடு செய்துள்ளது. TCS BaNCS எனப்படும் உலகளாவிய வாடிக்கையாளர்களுக்கான உயர் நேர்த்தி நிதி மென்பொருள் தயாரிப்பானது ஆஸ்திரேலியாவில் உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம் இந்த ஆண்டு 100க்கும் மேற்பட்ட பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்துள்ளதுடன், இன்றுவரை 58 புதிய "கொழும்பு திட்ட" மாணவர்களுக்கு பயிற்சியளித்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் உள்ள TCS சைபர் மற்றும் இன்றியமையாத-தொழில்நுட்பத் திறன் என்பது சேவையுறுநர்களுக்கான சைபர் அச்சுறுத்தல்-மேலாண்மை மையம் மற்றும் ஆஸ்திரேலியாவின் சைபர் பாதுகாப்பு கூட்டுறவு ஆராய்ச்சி மையத்துடனான எதிர்காலச் சரிபார்ப்பு ஆராய்ச்சி திட்டப்பணிகள் ஆகியவற்றை உள்ளடக்கியது. பல ஆஸ்திரேலிய பல்கலைக்கழக கூட்டாண்மைகள் நிறுவனத்தின் பரந்த R&D போட்டித்தன்மையை ஆதரிக்கின்றன.

TCS GOIT/ GOIT Girls STEM திட்டங்கள் மற்றும் உள்நாட்டு மாரத்தான் அறக்கட்டளையுடன் கூட்டாண்மை போன்ற சமூக முன்னெடுப்புகளுடன் - பரந்த ஆஸ்திரேலிய தொலைநோக்குக்கு அடித்தளம் அமைத்து, TCS தனது ஆஸ்திரேலிய எதிர்காலத்தைப் பற்றி உற்சாகமாக உள்ளது.

**விண்வெளி**

வேளாண்மை மற்றும் வள மேலாண்மை முதல் காப்பீடு மற்றும் நிதி வரையிலான செயலிகளுடன் விண்வெளி-ஆதார தரவு மற்றும் விண்வெளி-இயக்கப்பட்ட தொழில்நுட்பம் ஆகியவை நமது வாழ்விலும் பொருளாதாரத்திலும் மென்மேலும் ஊடுருவிச் செல்லும். அதே வேளையில், மரபுவழி அரசு நிறுவனங்களுடன் பக்கத்துக்குப் பக்கமாக வணிக விண்வெளி ஆபரேட்டர்களின் வெளிப்பாடு, விண்வெளி தொழில்நுட்பம் மற்றும் தரவுகளின் அடிப்படையில் தயாரிப்புகளை உருவாக்க ஆஸ்திரேலிய நிறுவனங்களுக்கு முன்னோடியில்லாத வாய்ப்புகளை வழங்குகிறது.

ஏவுதள சேவைகள், தரை நிலைய சேவைகள், தகவல் தொடர்புகள் மற்றும் செயற்கைக்கோள் கண்காணிப்பு உள்ளிட்ட விண்வெளிப் பொருளாதாரத்தின் பல அம்சங்களில் ஆஸ்திரேலியாவின் புவியியல் நமக்கு நன்மைகளை வழங்குகிறது. ஆஸ்திரேலியாவின் ஸ்டார்ட்அப் ஆதிக்கம்

செலுத்தும் விண்வெளித் துறையில் உள்ள நிறுவனங்கள் விண்வெளி-ஆதாரத் தரவைப் பயன்படுத்தி மரபுவழியில் புத்தாக்கமான தீர்வுகளை உருவாக்கியுள்ளன, மேலும் விண்வெளியை அணுகுவதற்கான தொழில்நுட்பம் மற்றும் ஆதரவுச் சேவைகளை மென்மேலும் உருவாக்கி வருகின்றன.

விண்வெளித் துறையில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கிறது. பிரதமரும் இந்தியாவின் விண்வெளி அமைச்சருமான மோடி - பெருவிருப்பத்தைக் காட்டுகிற தேசிய விண்வெளி திட்டத்தையும் தொழில் சீர்திருத்தத்தையும் வழிநடத்துகிறார். இந்தியாவின் தேசிய விண்வெளித் திட்டம் தற்போது தனியார் துறை ஈடுபாட்டிற்கு இடமளிக்கிறது - இது, ஆஸ்திரேலிய விண்வெளி நிறுவனங்களுக்கு வாய்ப்புகளைத் திறக்கிறது. FDI கட்டுப்பாடுகளுக்கு திட்டமிடப்பட்ட சீராய்வுகள் மற்றும் புதிய இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அதிகாரமளிப்பு மையம் (IN-SPAce) ஆகியவை வணிக வாய்ப்புகளை மேலும் அதிகரிக்கும். ஆஸ்திரேலிய அரசு பன்னாட்டு விண்வெளி மாநாடு மற்றும் கண்காட்சியிலும் - இந்தியாவின் முதன்மையான விண்வெளி உச்சிமாநாட்டிலும் தொழில்துறை பங்கேற்பை எளிதாக்கியது - இது, ஆஸ்திரேலிய விண்வெளித் துறையில் ஆர்வம் அதிகரிப்பதற்கும், இருவழி வணிக உடனுழைப்பை மேம்படுத்த நிறுவனங்களுக்கு இடையே உறுதியான ஒப்பந்தங்கள் கையெழுத்தாவதற்கும் வழிவகுத்தது.



இரு நாட்டு அரசுகளுக்கும் இடையில் உறவுகள் வலுவாக உள்ளன. புதுப்பிக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (MoU) கீழ், ஆஸ்திரேலிய விண்வெளி முகமை மற்றும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு ஆகியவை விண்வெளி அறிவியல், R&D மற்றும் தொழில்நுட்ப உடனுழைப்பை மேம்படுத்துவதற்கான நடைமுறை முன்னெடுப்புகளில் ஈடுபட்டுள்ளன. இந்தியாவின் ககன்யான் மனித விண்வெளிப் பயண திட்டங்களுக்கு ஆஸ்திரேலியாவின் ஆதரவை உருவாக்குதல், ஆஸ்திரேலிய பிரதேசத்தில் ஒரு தற்காலிக கண்காணிப்பு நிலையம் உட்பட, இன்னும் ஆழமான விண்வெளி உறவு வணிக மற்றும் உத்திப்பூர்வ ஆதாயங்களை அளிக்கும்.

புதிய துணைத் தூதரகம் - இந்தியாவின் விண்வெளித் துறை மற்றும் ஆராய்ச்சித் திட்டத்தின் அதிக அளவிலான பணி அமைவிடங்கள் பெங்களூருவில் அமைந்துள்ளன. புதிய துணைத் தூதரகம், விண்வெளி மற்றும் தொழில்நுட்பக் கூட்டாளி என்ற முறையில் ஆஸ்திரேலியாவின் நற்பெயரை வளர்க்கும் மற்றும் அதிவிரைவாக வளர்ந்து வரும் விண்வெளி ஒத்துழைப்பை எளிதாக்கும். இந்தியாவின் முதன்மையான பன்னாட்டு விண்வெளி கண்காட்சியில் நாங்கள் தொடர்ந்து பங்கேற்போம்.

2010 மற்றும் 2020 ம் ஆண்டுகளில் சுற்றுப்பாதையில் இயக்கத்திலுள்ள செயற்கைக்கோள்கள்

அடுத்த 10 ஆண்டுகளில் ஏவப்படும் என எதிர்பார்க்கப்படுகிற சிறிய செயற்கைக்கோள்கள்

**A$69 பில்லியன்**

2025க்குள் இந்தியாவின் விண்வெளித் துறையில் நிறைவேற்றப்படச் சாத்தியமுள்ள பொருளாதார அளவு

**A$12 பில்லியன்**

2030 ஆம் ஆண்டுக்குள் விண்வெளித் துறைக்கான ஆஸ்திரேலியாவின் இலட்சியங்கள்

**$1.35 டிரில்லியன்**

2040 ஆம் ஆண்டுக்குள் ஈட்டப்படும் என மதிப்பிடப்பட்டுள்ள உலகளாவிய விண்வெளித் துறை வருவாய்.

**செயல் திட்டம்**

ஆஸ்திரேலிய விண்வெளி முகமையின் பன்னாட்டு விண்வெளி முதலீட்டு முன்னெடுப்பானது பன்னாட்டு விண்வெளி முகமைகளுடன் உறவுகளை உருவாக்கும் உத்திப்பூர்வ விண்வெளித் திட்டங்களை ஆதரிக்கிறது. ஆஸ்திரேலியாவின் விண்வெளித் தொழில் திறனை வளர்ப்பதே இதன் நோக்கம் ஆகும்.

விரிவாக்கப்பட்டுள்ள ஒரு செயல்திட்டம், இந்தியாவுடன் ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தும். இது, ஆஸ்திரேலிய நிறுவனங்களுக்கு நிபுணத்துவத்தை வளர்ப்பதற்கும், செயற்கைக்கோள் தகவல்தொடர்பு மற்றும் புவி கண்காணிப்பு (EO) தொழில்நுட்பங்கள் போன்ற இரு நாடுகளின் விண்வெளித் திறன்களைப் பயன்படுத்தி புதிய தயாரிப்புகள், சேவைகள் மற்றும் தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கும் உதவும். இது, நீர் மேலாண்மை, வறட்சி மீள்திறன் திட்டமிடல் மற்றும் வேளாண் வள மேலாண்மை போன்ற — இருநாடுகளுக்கும் ஒன்றுக்கொன்று ஒத்த முன்னுரிமைகளை ஆதரிக்கும் — மற்றும் வணிகப் பலன்களை வழங்கும். இந்த நிதியானது ஆஸ்திரேலிய வணிக நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு வெளிப்படையான மற்றும் போட்டித்தன்மை கொண்ட கூறுகளைக் கொண்டிருக்கும், அத்துடன் ஆஸ்திரேலிய விண்வெளி முகமை மற்றும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு போன்ற இந்திய மற்றும் ஆஸ்திரேலிய விண்வெளி அமைப்புகளுக்கு இடையேயான கூட்டுத் திட்டப்பணிகளுக்கு ஆதரவளிக்கும்.



**நேர்வு ஆய்வு: ஸ்பேஸ் மெஷின்ஸ் கம்பெனி**

சிட்னியைத் தளமாகக் கொண்ட **ஸ்பேஸ் மெஷின்ஸ் கம்பெனி**, சிறிய வணிக செயற்கைக்கோள்களை ஏவிய பிறகு அவைகளை இறுதி சுற்றுப்பாதையில் நிலைநிறுத்துவதற்கு புத்தாக்கமான தொழில்நுட்பத்தை உருவாக்கி வருகிறது – இது, ஒரு வகையான விண்வெளி டாக்ஸி சேவை ஆகும். தலைமை நிர்வாக அதிகாரி ரஜத் குல்ஷ்ரேஷ்தாவின் கூற்றுப்படி, 2020ம் ஆண்டுக்கு முந்தைய வரலாற்று சராசரியுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டுக்குள் வருடாந்திர சிறிய செயற்கைக்கோள் ஆர்டர்கள் கிட்டத்தட்ட 30 மடங்கு அதிகரிக்கும் என்று நார்தர்ன் ஸ்கை ரிசர்ச் (NSR) கணித்துள்ளது. இது குறிப்பிடத்தக்க உலகளாவிய வாய்ப்பை சுட்டிக்காட்டுகிறது. பெங்களூருவில் உள்ள அவர்களின் R&D மையம் மூலம், ஸ்பேஸ் மெஷின்ஸ் கம்பெனி இந்தியாவின் வணிக விண்வெளித் துறைக்குள் இணைப்புகளை உருவாக்கி வருகிறது, இது ஸ்பேஸ் மெஷின்ஸ் கம்பெனி வழங்கக்கூடிய விண்வெளிப் போக்குவரத்து சேவைகளுக்கான வளர்ந்து வரும் தேவையைக் கொண்டுள்ளது.

**நேர்வு ஆய்வு: வென்ச்சர் கேடலிஸ்ட் விண்வெளித் திட்டம்**

இந்திய விண்வெளி ஸ்டார்ட்அப்களான ஆஸ்ட்ரோகேட் லேப்ஸ், டிகந்தாரா மற்றும் 114ai ஆகியவை **வென்ச்சர் கேடலிஸ்ட் விண்வெளித் திட்டத்தில்** பங்கேற்று ஆரம்பகால வெற்றிகளைக் கண்டுள்ளன, இது தெற்கு ஆஸ்திரேலியாவின் பல்கலைக்கழகத்தின் புத்தாக்க மற்றும் உடனுழைப்பு மையத்தால் நடத்தப்படும் இன்குபேஷன் மற்றும் ஆக்சலரேஷன் திட்டமாகும். இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்வது இந்திய ஸ்டார்ட்அப்களுக்கு விரைவான வழிகளில் ஒன்றாகும். இதன் மூலம் அவற்றால், ஆஸ்திரேலிய விண்வெளி சுற்றுச்சூழலை அணுகவும், தயாரிப்புகள் மற்றும் சேவைகளை சோதிக்கவும், மேலும் பெரிய மேற்கத்திய சந்தைகளில் விரிவடைவதற்கு முன் நம்பிக்கையை வளர்க்கவும் முடியும். வழங்கப்பட்ட ஆதரவானது, இந்த ஸ்டார்ட்அப்களுக்கு மேலும் பல வழிகளில் உதவியது. அவையாவன: முதலீட்டாளர்களிடமிருந்து தொடக்க முதலீடு பெறுவதற்கும், அவர்களின் குழுக்களை வளர்ப்பதற்கும், ஆஸ்திரேலியாவில் உள்ள ஆராய்ச்சி கல்வி நிறுவனங்களுடன் கூட்டாண்மைகளைப் பெறுவதற்கும் உதவியது.

**இந்தியாவின் பலதிறன் வாய்ந்த தென் பிராந்தியம்**

சென்னையில் உள்ள எமது துணைத் தூதரகமும் பெங்களூருவில் உள்ள புதிய துணைத் தூதரகமும் இந்தியாவின் தெற்கில் உள்ள வாய்ப்புகளை மேலும் பயன்படுத்திக் கொள்ள ஆஸ்திரேலிய நிறுவனங்களுக்கு உதவும். இந்தியாவின் தென் மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா மற்றும் கேரளா ஆகியவை — இந்தியாவின் மக்கள்தொகையில் 20 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது மற்றும் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30 சதவீத பங்களிப்பை வழங்குகிறது.

இப்பிராந்தியம் கடந்த ஐந்து ஆண்டுகளாக உயர்ந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளது (ஆண்டுக்கு சராசரியாக 8.1 சதவீதம்). இது, வாகன உற்பத்தி மற்றும் மருந்தாக்கத் தொழில் உட்பட நன்கு நிறுவப்பட்ட தொழில்களைக் கொண்டுள்ளது. மேலும், வளர்ந்து வரும் விண்வெளி மற்றும் உயிரி-தொழில்நுட்பத் துறைகள் உட்பட உயர் தொழில்நுட்ப உற்பத்தியில் உலகளவில் போட்டியிடுகிறது.

இது, வலுவான சேவைத் துறைகளைக் கொண்டுள்ளது மற்றும் இந்தியாவின் தகவல் தொழில்நுட்ப சந்தையில் ஆதிக்கம் செலுத்துகிறது. சென்னை, பெங்களூரு மற்றும் ஹைதராபாத் ஆகிய பெருநகரங்கள் இந்தியாவின் புதிய நவீன, தொழில்நுட்பம் சார்ந்த பொருளாதாரத்தை உள்ளடக்கி, அறிவியல், புத்தாக்க, தொழில்நுட்பம் மற்றும் ஸ்டார்ட்அப்களுக்கான மையங்களாக போட்டியிடுகின்றன.

இந்தியாவின் தெற்குப்பகுதி சாதகமான இயக்க சூழல்கள், வலுவான உலகளாவிய இணைப்புநிலை, திறன்பெற்ற பணியாளர்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது மற்றும் ஒப்பீட்டளவில் அதிக வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்கிறது. சுகாதாரநலம், கல்வி, மற்றும் சமூக நலன் ஆகியவற்றில் முதலீடு செய்த வரலாற்றின் விளைவாக, நடுத்தர முதல் உயர் மனித வளர்ச்சி கண்டுள்ளது. மேலும், தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது இந்தியாவின் தேசிய சராசரியை விட 50 சதவீதம் அதிகமாக உள்ளது.

**தெலங்கானா**

GDSP: US$ 131 பில்லியன்

மியான்மர், கம்போடியா மற்றும் லாவோஸ் நாடுகளின் கூட்டு GDP-அளவுக்கு இணையானது

2016 முதற்கொண்டு வருடாந்திர GDSP வளர்ச்சி: 6.3%

**ஆந்திரப் பிரதேஷ்**

GDSP: US$ 131 பில்லியன்

மியான்மர், கம்போடியா மற்றும் லாவோஸ் நாடுகளின் கூட்டு GDP-அளவுக்கு இணையானது

2016 முதற்கொண்டு வருடாந்திர GDSP வளர்ச்சி: 8.5%

**கர்நாடகா**

GDSP: US$ 227 பில்லியன்

வியட்நாமின் GDP-இன் ஏறத்தாழ 2/3 பங்கு

2016ம் ஆண்டிலிருந்து வருடாந்திர GDSP வளர்ச்சி: 8.9%

**பெங்களூருவில் ஆஸ்திரேலியத் துணைத் தூதரகம்**

**சென்னையில் ஆஸ்திரேலியத் துணைத் தூதரகம்**

**தமிழ்நாடு**

GDSP: US$ 248 பில்லியன்

தாய்லாந்தின் GDP-இன் ஏறத்தாழ பாதி பங்கு

2016 முதற்கொண்டு வருடாந்திர GDSP-இன் வளர்ச்சி: 7.4%

**கேரளா**

GDSP: US$ 119 பில்லியன்

சிங்கப்பூரின் GDP-இன் ஏறத்தாழ 1/3 பங்கு

2016 முதற்கொண்டு வருடாந்திர GDSP-இன் வளர்ச்சி: 6.3%

**தென் இந்தியா**

GDSP: US$ 855 பில்லியன்

ஆசியானின் மொத்த GDP-இன் ஏறத்தாழ 1/4 பங்கு

2016 முதற்கொண்டு வருடாந்திர GDSP-இன் வளர்ச்சி: 8.1%

GDSP: மொத்த உள்நாட்டு மாநில உற்பத்தி

23

சாத்திய நிலையிலிருந்து பூர்த்தி செய்து வழங்கலுக்கான நிலையை நோக்கிய பயணம்

**அறிவியல் மற்றும் புத்தாக்கம்**

IES கோடிட்டுக் காட்டியுள்ளபடி, நீடிப்புதிறனுள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்ப புத்தாக்கமானது 2035ம் ஆண்டு வரைக்கும் மற்றும் அதற்கு அப்பாலும் ஆஸ்திரேலியா மற்றும் இந்தியாவின் செழுமைக்கான ஒரு அடிப்படை கூறாக இருக்கும்.

ஆழமான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு உடனுழைப்பு இரு தரப்புக்கும் பயனளிக்கும். உலகளாவிய கம்பெனிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் இந்தியாவின் பெரிய திறமையான பணியாளர் குழுக்களிலும், உலகச் செந்தரமான தொழில்நுட்பக் குழுக்களிலும் அதிக ஆர்வம் காட்டுகின்றன. ஆஸ்திரேலியா - தூய ஆராய்ச்சி திருப்புமுனைகளை வணிகமயமாக்குவதில் சில சமயங்களில் பின்தங்கியிருக்கிறது - இந்தியாவின் புத்தாக்க சூழலமைப்புகளுடனான ஆழமான இணைப்புகளிலிருந்து ஆதாயம் பெற காத்திருக்கிறது.

எமது இருதரப்பு ஆராய்ச்சி உறவுகள் வலுவான புரிதலுடன் உள்ளன. ஆஸ்திரேலிய மற்றும் இந்திய ஆராய்ச்சியாளர்கள் ஆண்டுதோறும் சுமார் 2,130 இணை வெளியீடுகளை உருவாக்குகின்றனர். 2016-2020 ம் ஆண்டுகளுக்கு இடையில் இந்தியாவின் ஏழாவது பெரிய அறிவியல்சார் வெளியீட்டு கூட்டாளியாக ஆஸ்திரேலியா இருந்தது.

ஆனால் வளர்ச்சிக்கான இடம் தொடர்ந்து நீடிக்கிறது. ஆஸ்திரேலிய அரசு, ஆஸ்திரேலியாவின் உலகத் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்களின் இந்தியாவில் உள்ள நிலையை உயர்த்த நடவடிக்கை எடுக்கும் - சிறந்த மற்றும் நுண்ணறிவுள்ள மாணவர்களை நாங்கள் ஈர்ப்பதை உறுதிசெய்யும் - மற்றும் ஆஸ்திரேலிய ஆராய்ச்சியாளர்களும் நிறுவனங்களும் இந்தியாவின் திறமையான பணியாளர் குழுக்களையும் சந்தை வாய்ப்புகளையும் அணுகுவதற்கு உதவ எமது உள்ளூர் இருப்பைப் பயன்படுத்தும்.

அறிவியல் மற்றும் புத்தாக்கம் ஒத்துழைப்புக்கான அரசாங்கத்தின் ஆதரவிற்கான முதன்மை வழிமுறையாக, ஆஸ்திரேலியா-இந்தியா உத்திப்பூர்வ ஆராய்ச்சி நிதி உள்ளது. ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் இந்த முன்னெடுப்புக்கு இணை நிதியளிக்கின்றன மற்றும் ஆராய்ச்சி முன்னுரிமைகளை கூட்டாக ஒப்புக்கொள்கின்றன.

**செயல் திட்டம்**

**ஆஸ்திரேலியா-இந்தியா உத்திப்பூர்வ ஆராய்ச்சி நிதி**யத்திற்காக (2024-25க்குப் பிறகு ஆண்டுக்கு A$3.8 மில்லியன்) தொடர்ந்து வழங்கப்பட்டுவரும் நிதியுதவி, பரந்த உலகளாவிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப இராஜதந்திர நிதியத்தின் கீழ் இந்தியாவுடன் அர்ப்பணிக்கப்பட்ட ஆராய்ச்சி தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யும்.

**இந்தியா- ஆஸ்திரேலியா புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப சவால்**, சிறு வணிகங்கள், தொடக்க நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர் ஆகியவற்றுக்கு புத்தாக்கமான தொழில்நுட்ப தீர்வுகளை வழங்குவதன் மூலம் சிக்கலான சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார சவால்களை (கழிவு குறைப்பு, நீர் பாதுகாப்பு மற்றும் உணவு அமைப்பு மீள்திறன் போன்றவை) சமாளிக்கும். CSIRO இன் புத்தாக்க முடுக்கி திட்டம் மற்றும் 2021 ஆம் ஆண்டில் இந்தியாவின் அடல் இன்னோவேஷன் மிஷன் மற்றும் CSIRO ஆல் நிகழ்த்தப்பட்ட வெற்றிகரமான 2021 இந்தியா-ஆஸ்திரேலியா சர்குலர் எகானமி ஹேக்கத்தான் ஆகியவற்றைக் கட்டமைத்து, இந்த கூட்டாண்மை ஒவ்வொரு ஆண்டும் சுமார் 20 அதிநவீன ஆஸ்திரேலிய மற்றும் இந்திய புத்தாக்கங்களை சந்தைப்படுத்த உதவும். ஆழ்ந்த தொழில்நுட்ப புத்தாக்கங்களை நிகழ் உலக தீர்வுகளாக மாற்ற தொழில்துறையுடன் இணைந்து பணியாற்றுதல்.

**340 க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி செயல்பாடுகள்** ஆஸ்திரேலியா-இந்தியா உத்திப்பூர்வ ஆராய்ச்சி நிதியத்தால் ஆதரிக்கப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலிய மற்றும் இந்திய ஆராய்ச்சியாளர்களால் ஆண்டுதோறும் ஏறத்தாழ **2130 கட்டுரைகள்** இணைந்து வெளியிடப்படுகின்றன .

ஆஸ்திரேலியா-இந்தியா உத்திப்பூர்வ ஆராய்ச்சி நிதியத்தில் இன்றுவரை ஆஸ்திரேலிய அரசாங்கத்தால் **$100 மில்லியனுக்கும்** அதிகமாக முதலீடு செய்யப்பட்டுள்ளது.





**வளங்கள் மற்றும் METS துறைகள்**

ஆஸ்திரேலியா-இந்தியா பொருளாதார உறவின் மையத்தில் வளங்கள் இருக்கும். பாதுகாப்பான, நம்பகமான மற்றும் உயர்தர கனிமங்கள் வழங்குநராக ஆஸ்திரேலியாவின் நிலையை வளர்க்க தொழில்துறையுடன் ஆஸ்திரேலிய அரசு தொடர்ந்து பணியாற்றும். இருநாடுகளுக்கும் ஒன்றுக்கொன்று ஒத்த நன்மை பயக்கும் கூட்டாண்மைகளை மேம்படுத்துவதன் மூலம் தெற்காசிய சந்தையில் நமது உலகத் தரம் வாய்ந்த சுரங்க தளவாடங்கள், தொழில்நுட்பம் மற்றும் சேவைகள் (METS) துறையை விரிவுபடுத்த உதவுவோம்.

எஃகு உற்பத்திக்கான உலோகவியல் நிலக்கரி, 2020-21 ஆம் ஆண்டில், 7.7 பில்லியன் ஆஸ்திரேலிய டாலர் மதிப்புடன் இந்தியாவுடனான எங்கள் வணிக வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது - உயர்தர வெப்ப நிலக்கரி, தாமிரம், தங்கம், வெள்ளி மற்றும் பிளாட்டினம் ஆகியவையும் 'தலையாய பத்து' சரக்குகள் ஏற்றுமதியாகும். இந்தியாவின் நீடிப்புதிறனுள்ள, நீண்ட கால பொருளாதார வளர்ச்சியின் போக்கில், எரிபொருள் கட்டுமானம், உற்பத்தி மற்றும் மின்சார உற்பத்தி, பரப்புகை மற்றும் சேமிப்பகம் ஆகியவற்றிற்கான ஆதாரங்களுக்கான இந்தியத் தேவை வளர உள்ளது.

இன்றியமையாத கனிமங்கள் மற்றும் தாமிரம் போன்ற பொருட்கள் இந்த சூழலில் மென்மேலும் முக்கியமான பகுதியாக இருக்கும். வளர்ந்து வரும் தொழில்துறை ஆர்வம் மற்றும் இலட்சிய அரசாங்க இலக்குகளால் அடித்தளம் அமைக்கப்பட்டு, புதுப்பிக்கத்தக்கவை மற்றும் கிரிட் ஸ்கேல் பேட்டரி சேமிப்பகம் மற்றும் மின்சார வாகனங்கள், சோலார் பேனல்கள், கம்ப்யூட்டர்கள் மற்றும் ஸ்மார்ட்போன்கள் ஆகியவற்றில் மேம்பட்ட உற்பத்திக்கான இந்தியாவின் உந்துதல் கணிசமான தேவையை உருவாக்கும். இந்தியா தனது வழங்கல் தொடர்களைப் பாதுகாக்க விரும்புவதால், பரந்த அளவிலான வளர்ச்சிக்குத் தயாராக உள்ள மற்றும் பல்வேறு இன்றியமையாத கனிமங்களைக் கொண்ட விரிவான உத்திப்பூர்வ கூட்டாளியான ஆஸ்திரேலியா, ஒரு தர்க்கரீதியான தேர்வாகும்.

ஆஸ்ட்ரேட்டின் ஆஸ்திரேலியா-இந்தியா இன்றியமையாத கனிமங்கள் கூட்டாண்மையின் நிறைவேற்றப்படச் சாத்தியமுள்ள பொருளாதார வாய்ப்புகளைத் திறத்தல் என்னும் தலைப்பிலான 2021ம் ஆண்டின் அறிக்கை சிறந்த ஒத்துழைப்புக்கான ஒரு பாதையை கோடிட்டுக் காட்டுகிறது.

ஆஸ்திரேலிய நிறுவனங்கள் METS க்கான வளர்ந்து வரும் தேவையை நிறைவேற்ற நன்கு இடநிலைப்படுத்தப்பட்டுள்ளன மற்றும் சுரங்க ஆலோசனை; ஆராய்வு தொழில்நுட்பங்கள்; சுரங்க மென்பொருள்; செயலாக்க கூறுகள் மற்றும் அமைப்புகள்; சுற்றுச்சூழல் மற்றும் கனிம தர தொழில்நுட்பங்கள் மற்றும் பாதுகாப்புத் தளவாடங்கள்; மற்றும் சுரங்க கல்வி மற்றும் திறன்கள் ஆகியவற்றில் போட்டியில் பெற்ற வெற்றி அடிப்படையிலான சாதகத்தைக் கொண்டுள்ளன அரசுகளுக்கு இடையே சிறந்த நடைமுறையைப் பகிர்ந்துகொள்வது மற்றும் ஒழுங்குமுறை தொழில்நுட்பத் (regtech) துறையை ஈடுபடுத்துவது ஆகியவை சுரங்க உற்பத்தித்திறன், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் இணக்கம் மற்றும் வணிக வாய்ப்புகளைத் திறக்கும் வாய்ப்பை வழங்குகிறது. METS உறவு, ஆஸ்திரேலிய சுரங்கத் துறையில் இந்திய நிறுவனங்கள் முதலீடு செய்வதையும் கண்டுள்ளது.

கொல்கத்தாவில் உள்ள ஆஸ்திரேலியத் துணைத் தூதரகம் - IES பரிந்துரையைப் பின்பற்றி 2019 இல் திறக்கப்பட்டது – இது, கிழக்கு இந்தியாவில் வளங்கள் மற்றும் METS ஆகியவற்றில் ஆஸ்திரேலியாவின் வணிக மற்றும் பொருளாதார இராஜதந்திரத்தை விரிவுபடுத்தியுள்ளது.

வளங்கள் மற்றும் METS துறையில் சிறந்த ஈடுபாட்டை ஆதரிக்க, அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

- ஏற்றுமதி நிதி முகமையால் நிர்வகிக்கப்படும் A$2 பில்லியன் இன்றியமையாத கனிமங்கள் கட்டமைப்புவசதி மூலமாக இன்றியமையாத கனிமங்கள் திட்டப்பணிகளின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கிறது
- ஆஸ்திரேலிய வளங்களுக்கான ஒரு முக்கியமான இந்திய சேவையுறுநரை உள்ளடக்கிய பிசினஸ் சாம்பியன்ஸ் குழுவின் மூலமாக நெருக்கமாக ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

### செயல் திட்டம்

**METS தொழில்துறை சந்தை அணுகல் மற்றும் ஆயத்தநிலைத் திட்டம்**, இந்தியா, பங்களாதேஷ் மற்றும் தெற்காசியாவில் எப்படி வணிகம் செய்வது என்பதை நன்கு புரிந்துகொள்ள வளங்கள் நிறுவனங்களுக்கு உதவும்.

தொழில்நுட்ப மற்றும் இயக்க சவால்களை எதிர்கொள்ளும் இந்திய சுரங்கத் தொழிலாளர்கள் **உலகளாவிய சுரங்க சவால் - இந்தியா** மூலம் ஆஸ்திரேலிய தீர்வுகளுடன் இணைக்கப்படுவார்கள்.

25


**செயல் திட்டம்**

**இந்திய மற்றும் ஆஸ்திரேலிய அறிவியல் நிறுவனங்கள், தொழில்துறை மற்றும் அரசு கூட்டாளிகள்** மற்றும் CSIRO ஆல் தற்போது உருவாக்கப்பட்டு வரும் இன்றியமையாத ஆற்றல் உலோகங்கள் மிஷன் ஆகியவற்றின் உடனுழைப்பான இந்தியா- ஆஸ்திரேலியா இன்றியமையாத கனிமங்கள் ஆராய்ச்சிக் கூட்டாண்மை, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நிலைமாற்றத்தை வளப்படுத்துவதற்கான சவாலைச் சமாளிக்கும் மற்றும் இந்திய மற்றும் ஆஸ்திரேலிய இன்றியமையாத கனிமங்களின் மதிப்பு தொடர்களை ஒருங்கிணைப்பதன் வணிக நன்மைகளின் வாய்ப்புகளைத் திறக்க உதவும்.

**இந்தியா-ஆஸ்திரேலியா பசுமை எஃகு கூட்டாண்மையானது,** ஆஸ்திரேலிய எஃகு மற்றும் இரும்புத் தாது உற்பத்தியாளர்கள் மற்றும் இந்திய அரசு மற்றும் தொழில்துறையுடன் CSIRO வின் உறவுகளை உருவாக்கி, எஃகு உற்பத்தியில் செயல்திறன்களையும் சுற்றுச்சூழல் வருவிளைவுகளையும் மேம்படுத்த புத்தாக்கமான ஆஸ்திரேலிய மற்றும் இந்திய தொழில்நுட்பத்தை வணிகமயமாக்குவதை ஆதரிக்கும்.

**ஆஸ்திரேலியா-இந்தியா இன்றியமையாத கனிமங்கள் முதலீட்டுக் கூட்டாண்மை** ஆஸ்திரேலிய மற்றும் இந்திய அதிகாரிகளுக்கு இடையே தொடர்ந்து வழங்கப்பட்டுவரும் ஈடுபாட்டை ஆதரிக்கும் மற்றும் ஆஸ்திரேலியா-இந்தியா இன்றியமையாத கனிமங்கள் வழங்கல் தொடர்களின் வளர்ச்சியை துரிதப்படுத்தும்.

**மின்சார வாகனங்களை தயாரிப்பதற்கான இந்தியாவின் உந்துதல், வளப் பொருட்களுக்கான கணிசமான தேவையை உருவாக்கும்**




47 மில்லியன் - 86 மில்லியன்

3 மில்லியன் - 6 மில்லியன்

3.2 மில்லியன் - 6 மில்லியன்

0.05 மில்லியன் - 0.08 மில்லியன்

உயர்ந்த வளர்ச்சி நடுத்தர வளர்ச்சி தாழ்ந்த வளர்ச்சி

ஆதாரமூலம்: ஆஸ்ட்ரேட், ஆஸ்திரேலியா-இந்தியா இன்றியமையாத கனிமங்கள் கூட்டாண்மையின் நிறைவேற்றப்படச் சாத்தியமுள்ள பொருளாதார வாய்ப்புகளைத் திறத்தல்



**ஆற்றல்**

சர்வதேச ஆற்றல் நிறுவனம் (IEA) தற்போதைய தேசியக் கொள்கைகளின் அடிப்படையில், 2040 ம் ஆண்டுக்குள் இந்திய ஆற்றல் தேவை ஏறத்தாழ 70 சதவீதம் அதிகரிக்கும் என்றும், அனைத்து IEA முன்னறிவிப்புக் காட்சிகளிலும் உலகளவில் எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு மிகப்பெரிய அதிகரிப்பைக் கொண்டிருக்கும் என்றும் கணித்துள்ளது. ஏராளமான ஆற்றல் வளங்களையும், பெரிய ஆற்றல் திட்டப்பணிகளை வழங்கும் அனுபவத்தையும், ஆழமான தொழில்நுட்ப அறிவையும் கொண்டுள்ள ஆஸ்திரேலியா - இந்தியாவின் ஆற்றல் தேவைகளை நிறைவேற்ற உதவுவதற்கு நன்கு இடநிலைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய ஆற்றல் சந்தைகளின் விலை உணர்திறன் மற்றும் போட்டித் தன்மையைக் கருத்தில் கொண்டு, ஆஸ்திரேலிய அரசும் தொழில்துறையும் தற்சார்பியலான மரபுவழி ஆற்றல் கூட்டாளியாக இருப்பதற்கு கடினமாக உழைக்க வேண்டும். IEA இன் படி, இந்த புதுப்பிக்கப்பட்ட அறிக்கையின் காலப்பகுதியில் இந்தியாவின் ஆற்றல் கலவையில் வெப்ப நிலக்கரி தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தும். மேலும், வெளிப்புற காரணிகளுக்கு உலக நிலக்கரி வர்த்தகம் பதில்வினையாற்றும் போது உயர்தர வெப்ப நிலக்கரியை வழங்கும் ஆஸ்திரேலிய வழங்குநர்களுக்கு இந்தியா ஒரு வாய்ப்பை வழங்கும். நிலைமாற்ற எரிபொருளாக LNG ன் அதிகரித்த பயன்பாட்டை இந்திய அரசு ஆதரிக்கிறது, மேலும் ஆஸ்திரேலிய உற்பத்தியாளர்கள் இந்தியாவில் விற்பனை செய்வதில் அண்மையில் ஓரளவு வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

உமிழ்வைக் குறைப்பதற்கான தொழில்நுட்ப அடிப்படையிலான அணுகுமுறையில் ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கின்றன. மேலும், புதுப்பிக்கத்தக்கவைகளிலும் ஹைட்ரஜன் பொருளாதாரத்திலும் வணிக வாய்ப்புகள் குறிப்பிடத்தக்க அளவில் கொட்டிக் இருக்கின்றன. அண்மையில் 100 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க திறன்களை எட்டிய இந்திய அரசு, வளர்ந்து வரும் ஆற்றல் தேவையை நிறைவேற்றுவதற்கும் கார்பன் குறைப்பு முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கும் 2030ம் ஆண்டுக்குள் 500 ஜிகாவாட் நிறுவ இலக்கு நிர்ணயித்துள்ளது. இதை அடைவதற்கு, இந்திய அரசு தனியார் துறையை எதிர்நோக்கும்; இதனால், புதுப்பிக்கத்தக்கவை மேம்பாடு மற்றும் கிரிட் மேலாண்மை ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற ஆஸ்திரேலிய நிறுவனங்கள் ஈடுபடுவதற்கு நன்கு இடநிலைப்படுத்தப்படும்.

இந்தியா தனது ஹைட்ரஜன் திட்டத்தின் முதல் பகுதியை 17 பிப்ரவரி 2022 அன்று வெளியிட்டது. ஹைட்ரஜன் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா இடையே ஒத்துழைப்புக்கான அளவுருக்களை வகுக்க இந்தத் திட்டம் உதவும். இந்தியாவில் பசுமை ஹைட்ரஜன் திட்டப்பணிகளில் Fortescue Future Industries மற்றும் JSW Future Energy ஆகியவற்றுக்கு இடையேயான 2021 கட்டமைப்பு ஒப்பந்தம் போல, ஆஸ்திரேலிய மற்றும் இந்திய நிறுவனங்கள் ஏற்கனவே கூட்டாண்மைகளை உருவாக்கி வருகின்றன. உலகின் இரண்டாவது பெரிய எஃகு உற்பத்தியாளரான இந்தியாவுக்கு தனது தொழிற்துறையில் கார்பனைக் குறைக்க புதிய தொழில்நுட்பங்கள் தேவைப்படும். குறைந்த உமிழ்வு தொழில்நுட்பத்திற்கான செந்தரங்களை அமைப்பதில் நெருக்கமான ஒருங்கிணைப்பும் முக்கியமானதாக இருக்கும்.

இந்தியாவின் ஆற்றல் தேவைகளை நிறைவேற்றுவதில் ஆஸ்திரேலியாவின் தொடர்ச்சியான பங்கை ஆதரிப்பதற்கும், ஆற்றல் பாதுகாப்பில் இந்தியாவின் தலைமையை ஆதரிப்பதற்கும், அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

- இந்தியா-ஆஸ்திரேலியா அமைச்சர்கள் மட்டத்திலான ஆற்றல் பேச்சுவார்த்தையின் கீழ் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல், மின்சாரம், நிலக்கரி மற்றும் சுரங்கங்கள், பெட்ரோலியம் மற்றும் எரிவாயு ஆகியவற்றில் ஒத்துழைப்பை உருவாக்குதல் மற்றும் வணிகரீதியான வருவிளைவுகளை ஊக்குவித்தல்
- ஆஸ்திரேலிய டாலர் 1 மில்லியன் பங்களிப்பின் மூலம் உலகளவிலான சூரிய ஆற்றல் பயன்பாட்டை அதிகரிப்பதற்கு பன்னாட்டு சூரியக் கூட்டணியில் இந்தியாவின் தலைமையை ஆதரித்தல்
- பலதரப்பு மேம்பாட்டு நிதிகள் மற்றும் ஆஸ்திரேலியாவின் தெற்காசியப் பிராந்திய உள்கட்டமைப்பு இணைப்புநிலைத் திட்டத்தின் மூலம் பிராந்திய ஆற்றல் இணைப்புநிலையையும் ஆளுகையையும் ஆதரிக்க இந்தியாவுடன் இணைந்து பணியாற்றுதல்.

27

ஆஸ்திரேலிய அரசு இலக்கிடப்பட்ட பிராந்திய முன்னெடுப்புகள் மூலம் பிராந்தியத்தின் நிறைவேற்றப்படச் சாத்தியமுள்ள பொருளாதாரத்தைப் பயன்படுத்தும். பின்வருவன உள்ளிட்டவை:


- ஏழு தெற்காசிய மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பிராந்திய அமைப்பான பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான (பிம்ஸ்டெக்) வங்காள விரிகுடா முன்னெடுப்பை ஆதரிப்பதற்கான வர்த்தக கூட்டாண்மைக்கான உதவி
- பங்களாதேஷில் தரவு மற்றும் டிஜிட்டல் அடிப்படையிலான அரசு சேவை வழங்கல் திட்டம், சேவை வழங்கலை மேம்படுத்துவதற்காக வாழ்க்கை நிகழ்வுகளையும் மக்கள் தொகை கணக்கெடுப்பு தரவுகளையும் கைப்பற்றி டிஜிட்டல்மயமாக்குவதற்கு அரசுக்கு உதவுதல், நிதி உள்ளடக்கத்தையும் புத்தாக்கமான நிதி தயாரிப்புகளையும் மேம்படுத்துவதற்கு அரசு மற்றும் தனியார் துறையின் தொழில்நுட்ப பயன்பாட்டை மேம்படுத்துதல், ஆஸ்திரேலிய மற்றும் தெற்காசிய தகவல் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை பயன்படுத்தல்
- புதிதாக நிறுவப்பட்ட ஆஸ்திரேலியா-பங்களாதேஷ் வர்த்தக மற்றும் முதலீட்டு கட்டமைப்பு ஏற்பாட்டின் கீழ் வர்த்தகம் மற்றும் முதலீட்டை அதிகரிக்க கொள்கை பரிந்துரைகளை வழங்க பங்களாதேஷ் சந்தை வாய்ப்புகள் மற்றும் வர்த்தக தடைகள் பற்றிய ஆய்வு.

### செயல் திட்டம்

தெற்காசியாவிற்கான எல்என்ஜி கூட்டாண்மையுடன் பிராந்தியத்தின் நிறைவேற்றப்படச் சாத்தியமுள்ள பொருளாதாரத்தைப் பயன்படுத்த, வேகமாக வளர்ந்து வரும் தெற்காசிய ஆற்றல் சந்தைகளை, அதிலும் குறிப்பாக இந்தியா மற்றும் பங்களாதேஷை அணுகுவதற்கு வசதியாக, **வங்காள விரிகுடா வர்த்தகம் மற்றும் ஆற்றல் கூட்டாண்மையை** அரசாங்கம் தொடங்கும்.

### இந்தியாவின் ஆற்றல் தேவை அதிகரிக்கும் என கணிக்கப்படுகிறது

தற்போதைய அமைப்புகளின் கீழ் அல்லது நீடிப்புதிறனுள்ள ஆற்றல் கொள்கைகளை பெருவிருப்பத்துடன் நிறைவேற்றுவதன் கீழ், இந்தியாவின் ஆற்றல் தேவை அதிகரிக்கும் என கணிக்கப்படுகிறது.




**மில்லியன் கணக்கான டன்கள் எண்ணெய்க்கு சமம்**

- நடப்பு இந்திய கொள்கை அமைப்புகள்
- வலுவான பொருளாதார மீட்சி, மற்றும் எரிசக்தி கொள்கை லட்சியங்களை முழுமையாக செயல்படுத்துதல்
- இந்தியா தனது காலநிலை நடவடிக்கையை மேலும் அதிகரிக்க வேண்டும்

ஆதாரமூலம்: பன்னாட்டு ஆற்றல் முகமை, இந்தியா ஆற்றல் கண்ணோட்டம், பிப்ரவரி 2021

28

2035-ம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய இந்தியப் பொருளாதார உத்தி தொடர்பான புதுப்பிக்கப்பட்ட அறிக்கை

**நேர்வு ஆய்வு: கிராம ஆற்றல்**

பெர்த் மாநகரைத் தளமாகக் கொண்ட வில்லேஜ் எனர்ஜி, மேற்கூரை சோலார் போன்ற இடைவிடாத ஆற்றல் ஆதாரமூலங்களைக் கொண்டு கிரிட்களை நிர்வகிக்க குறைந்த விலை தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது. செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி, நுகர்வோரின் தேவைகளுக்கு பதில்வினையாற்றும் வகையில் வலையமைப்புகில் ஆற்றல் பாய்வுகளை வில்லேஜ் எனர்ஜி நிர்வகிக்கிறது. இது, ஒவ்வொரு வாடிக்கையாளரும் தங்கள் நிதிநிலை மற்றும் தேவைகளுக்கு ஏற்ப தங்கள் பயன்பாட்டை சரிசெய்ய அனுமதிக்கிறது.

ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள பகிடிராய் கிராமத்தில் உள்ள வில்லேஜ் எனர்ஜியின் உயர் நேர்த்தித் திட்டப்பணியில் இந்த முன்னோடி தொழில்நுட்பம் மிகப்பெரும் நிகழ் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆற்றல் செலவுகள் குறைந்துள்ளது, அதே நேரத்தில் நுகர்வு உயர்ந்துள்ளது. மின்வெட்டுகளில் பெரிய அளவில் குறைப்பு ஏற்பட்டுள்ளதோடு, மின்வெட்டுக்களால் வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் சிறு வணிகச் சாதனங்கள் பாதிக்கப்படுவது பெருமளவு குறைந்துள்ளது. வில்லேஜ் எனர்ஜி தொழில்நுட்பம், பெரிய மின் பயன்பாடுகளுக்காக, இறுதிப் பயனர் வரை திறம்பட கொண்டு சேர்க்கும் ஆற்றல் பரப்புகையின் செயல்திறனை மேம்படுத்துகிறது. மேலும் இந்நிறுவனம், உள்ளூர் கிராமவாசிகள் மற்றும் மைக்ரோ SME க்கள் புதிய வாய்ப்புகளின் நன்மைகளைப் பயன்படுத்திக் கொள்ள உதவுகிறது, இது, குறைந்த செலவில் சிறந்த தரம் மற்றும் நம்பகமான சேவைகளில் இருந்து பாய்கின்ற - மாற்றத்திற்கான உண்மையான ஊக்கியாக உள்ளது.

29

சாத்திய நிலையிலிருந்து பூர்த்தி செய்து வழங்கலுக்கான நிலையை நோக்கிய பயணம்

30

# An India Economic Strategy to 2035 by Australian Government

2035-ம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய இந்தியப் பொருளாதார உத்தி தொடர்பான புதுப்பிக்கப்பட்ட அறிக்கை

**சுகாதாரநலம்**

சுகாதாரநலத் துறையில் ஆஸ்திரேலியா-இந்தியா உடனுழைப்பு மிகவும் எதிர்பார்க்கப்படுகிறது. COVID–19 ஆனது இந்தியாவில் டிஜிட்டல் சுகாதாரநலச் சேவைகளை உயர்த்தியது, மருத்துவ சாதனங்கள் மற்றும் மருந்துப் பொருட்களைத் தயாரிப்பதில் அதிக கவனம் செலுத்தியது, மேலும் தடுப்பூசிகள் உட்பட உலகளாவிய வழங்கல் தொடர்களில் இந்தியாவின் முக்கியத்துவத்தை வலுப்படுத்தியது.

இந்திய சந்தையின் அளவுகோல் ஆனது, மருத்துவ சாதனங்களில் ஆஸ்திரேலியப் புத்தாக்கங்களை வணிகமயமாக்குவதற்கு முக்கிய வாய்ப்புகளை வழங்குகிறது. மேலும், தனித்துவமாக்கிய துறைகளில் டிஜிட்டல் சுகாதாரநலத்தையும் ஏற்றுமதி ஊட்டச்சத்து மருந்துகள் மற்றும் வைட்டமின்கள் ஆகியவற்றை வணிகமயமாக்குவதற்கும், சுகாதாரநல நிபுணர்களுக்கான பயிற்சியில் இணைந்து பணியாற்றுவதற்கும் உதவுகிறது. அதே நேரத்தில், ஆஸ்திரேலியாவின் மருந்தாக்கத் தொழில் பாதுகாப்பையும் வழங்கல் தொடர் மீள்திறனையும் மேம்படுத்தும் திறனை இந்தியா கொண்டுள்ளது.

அதிகரித்துவரும் அரசுக்கும் அரசுக்குமான நேரடி உடனுழைப்பு இந்த நோக்கங்களை ஆதரிக்கும். பலதரப்பு மன்றங்களில் ஒழுங்குமுறை மற்றும் தரவுச் செந்தரங்கள் மற்றும் உலகளாவிய சுகாதாரநல நடைமுறைகள் ஆகியவற்றின் மீதான ஒத்துழைப்பு, செயல்திறனை மேம்படுத்துகிறது, முதலீட்டு வாய்ப்புகளைத் திறக்க உதவுகிறது மற்றும் மருந்தாக்கத் தொழிலிலும் மருத்துவ சாதனங்களிலும் வர்த்தகத்தை எளிதாக்குகிறது. மேலும், இருதரப்பு உடனுழைப்பானது பொதுவான சவால்களைத் தீர்க்கும், தொழில்நுட்ப அறிவை இரு நாடுகளுள் ஒன்றிடம் குறைவாக உள்ள பண்பை மற்றொன்றிடம் இருந்து பெற்று குறைநிரப்பிக்கொள்ளும் துறைகளில் தேவையுடன் இணைக்கும்.

இந்த தனியார் துறை மற்றும் அரசு முயற்சிகள் யாவும், வணிகமயமாக்கலை ஆதரிக்க இருதரப்பு மருத்துவ ஆராய்ச்சி ஒத்துழைப்பில் விரைவுபடுத்தும் நடவடிக்கை மூலம் ஆதரிக்கப்பட வேண்டும்.

குவாட் தடுப்பூசி கூட்டாண்மை மூலமாகவும் ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் ஒத்துழைக்கின்றன. இந்த கூட்டாண்மையானது, 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் உற்பத்தியை குறைந்தபட்சம் ஒரு பில்லியன் டோஸ்கள் அதிகரிக்க உதவுவது உட்பட இந்தியாவில் COVID-19 தடுப்பூசி தயாரிப்பை விரிவுபடுத்துகிறது.

அதிக சுகாதாரநல ஒத்துழைப்பை ஆதரிக்க அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

• ஆஸ்திரேலிய சுகாதாரநலத் தயாரிப்புகளுக்கான உயர்தர பிராண்ட் இடநிலைப்படுத்தலை ஆதரித்தல்

• ஆஸ்திரேலிய ஆராய்ச்சியை வணிகமயமாக்குவதற்கும், இந்தியாவில் உற்பத்தி மையங்களை அமைப்பதற்கும் முயற்சிகளை முடுக்கிவிடுவதன் மூலம், இந்திய சந்தை வாய்ப்புகள் குறித்த சிறந்த ஆஸ்திரேலிய மெட்டெக் விழிப்புணர்வை உருவாக்குதல்

• தகவல் பரிமாற்றம் மற்றும் நம்பிக்கையை வளர்க்கும் செயல்பாடுகள் ஆகியவற்றை எளிதாக்குவதற்கு ஆஸ்திரேலியாவின் நோய்த்தீர் சரக்குகள் நிர்வாகம் மற்றும் இந்தியாவின் ஒன்றிய மருந்துகள் செந்தர கட்டுப்பாட்டு அமைப்பு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இறுதி செய்தல்

• ஒத்திசைவு, தரவு தனியுரிமை அமைப்புகள், கிளினிக்கல் மொழி, ஒழுங்குமுறை ஒத்திணக்கம் மற்றும் டிஜிட்டல் நேரமைப்பு ஆகியவற்றுக்கான வாய்ப்புகளை அடையாளம் கண்டறிவதற்கு – ஆஸ்திரேலியா இந்தியா டிஜிட்டல் சுகாதாரநலச் செந்தரம் மற்றும் ஒத்திசைவு இடைவெளி பகுப்பாய்வு ஆகியவற்றை மேற்கொள்தல்

• ஒழுங்குமுறை மற்றும் கொள்கை பிரச்சினைகளை அடையாளம் கண்டறிந்து சீர்செய்வதற்கு, ஏற்கனவே உள்ள ஒப்பந்தங்களின் கீழ் பணிக்குழுக்களைப் பயன்படுத்துவது உட்பட, தொழில்நுட்ப பரிமாற்றங்களைத் தொடர்ந்து மேற்கொள்தல்



சாத்திய நிலையிலிருந்து பூர்த்தி செய்து வழங்கலுக்கான நிலையை நோக்கிய பயணம்

உலகளவில் வர்க்க மருந்துகளை வழங்கும் மிகப்பெரிய நாடாக இந்தியா உள்ளது, மேலும் மருந்து உற்பத்தியில் ஒட்டுமொத்தத்தில் கனஅளவில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

உலகளவில் பல்வேறு தடுப்பூசிகளில் 50 சதவீதத்திற்கும் மேலாக இந்தியா வழங்குகிறது.

2021 ம் ஆண்டில் இந்தியாவின் உள்நாட்டு மருந்து சந்தையின் உத்தேசமாகக் கணக்கிடப்பட்ட மதிப்பு. இது 2030ம் ஆண்டில் 120-150 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயரும் எனக் கணிக்கப்படுகிறது.

2019 ம் ஆண்டில் இந்தியாவின் உயிரிதொழில்நுடபத் துறையின் மதிப்பு. இந்தத் துறை 2025 ஆம் ஆண்டுக்குள் 150 பில்லியன் அமெரிக்க டாலர்களாக வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆதாரமூலம்: இந்தியா பிராண்ட் ஈக்விட்டி ஃபவுண்டேஷன்

**நேர்வு ஆய்வு: கோக்லியர்**

ஆஸ்திரேலிய நிறுவனமான கோக்லியர் 1998 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் செவித்திறனை மீட்டெடுத்து வருகிறது. அதன் உலகின் முன்னணி தொழில்நுட்பம் அங்கு 20,000 க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு நன்றாகக் காது கேட்கவும், அவர்களின் உள்ளார்ந்த திறனை வெளிக்கொணரவும், அவர்களின் பேரார்வங்களைத் தொடரவும் உதவியது.

இன்று, கோக்லியர் தொழில்நுட்பத்தால் இந்தியாவில் செவித்திறன் குறைபாடு உள்ள மேலும் பலருக்கு உதவ முடியும். காது கேளாமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு செவிப்புலன் பரிசோதனை செய்வதன் மூலம் காது கேளாமை பற்றி முன்கூட்டியே கண்டறிவதை ஊக்குவித்தல் மற்றும் மிகவும் மேம்பட்ட சிகிச்சைகள் மற்றும் தொழில்நுட்பங்களை அணுகுதல் உள்ளிட்ட தடைகளை நிவர்த்தி செய்ய அரசாங்கங்களுடன் கோக்லியர் இன்னும் நெருக்கமாக பணி செய்ய தயாராக உள்ளது. கோக்லியர் குழு கல்வி முன்னெடுப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது மற்றும் இந்தியாவில் உள்ள சுகாதாரநல நிபுணர்களுடன் நெருக்கமாக பணியாற்றுகிறது.

# An India Economic Strategy to 2035 by Australian Government

**முதலீடு: மேம்பட்டுவரும் நிலைமைகள்**

IES இந்தியாவின் நேர்மறையான முதலீட்டு அடிப்படைகளை எடுத்துக்காட்டியது. IES தொடங்கப்பட்டதில் இருந்து இவை மேலும் மேம்பட்டுள்ளன மற்றும் இந்தியாவில் ஆஸ்திரேலிய முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறிப்பிடத்தக்கவை.

கோவிட்-19 ஆனது ஆசியாவில் மற்றெங்கும் உள்ள போக்குகளுடன் தொடர்ந்து ஒரே சீரான அளவில் இந்தியாவில் ஆஸ்திரேலிய முதலீட்டின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. இருப்பினும், 2020 ம் ஆண்டில் மொத்த ஆஸ்திரேலிய முதலீட்டுப் பங்கு 2018 ம் ஆண்டு நிலைகளுடன் ஒப்பிடத்தக்கதாக இருந்தது, மேலும் 2019 ம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளில் 15.1 சதவீத வளர்ச்சிப் போக்கைப் பெற்றுள்ளது.

வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்கான இந்திய அரசின் கொள்கைகள் பின்வருமாறு: A$30 பில்லியன் மதிப்புள்ள தனியார்மயமாக்கல் செயற்குறிப்பு; முக்கிய உள்கட்டமைப்புகளை தொடர்ச்சியாக வெளியிடுதல்; சொத்து பணமாக்கல்; பின்னோக்கிய வரிச் சட்டங்களை நீக்குதல்; மற்றும் சில முதலீட்டு உச்சவரம்புகளை நீக்குதல். இந்தியாவின் மாநில அரசுகள் தாராளமயமாக்கல் சீர்திருத்தங்களைப் பயன்படுத்தி வெளிநாட்டு முதலீட்டிற்காக போட்டியிடுகின்றன, அதே போல் நில சலுகைகள் மற்றும் பிற மானியங்கள் போன்ற மற்ற ஊக்கிகளையும் பயன்படுத்துகின்றன.

ஆஸ்திரேலியா இந்தியாவிற்கு ஒரு கவர்ச்சிகரமான முதலீட்டு இலக்கிடமாக உள்ளது. மேம்பட்ட தொழில்நுட்பம், சுகாதாரநலம், வளங்கள் மற்றும் ஆற்றல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உள்ள முக்கிய இந்திய நிறுவனங்கள் ஏற்கனவே ஆஸ்திரேலியாவில் குறிப்பிடத்தக்க முதலீடுகளைக் கொண்டுள்ளன.

இந்த முதலீடுகள் R&D மற்றும் வணிகமயமாக்கலில் ஆஸ்திரேலியாவின் திறன்களை வலுப்படுத்துகிறது மற்றும் முக்கிய தொழில்கள் மற்றும் பிராந்தியங்களில் வளர்ச்சி மற்றும் உற்பத்தித்திறனுக்கு அடித்தளம் அமைக்கும் பொருளாதார உள்கட்டமைப்பை மேம்படுத்துகிறது.

ஒட்டுமொத்த முதலீட்டு உறவை வலுப்படுத்த, அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

• ஆஸ்திரேலிய போர்ட்ஃபோலியோ முதலீட்டாளர்களுக்கு, இந்தியாவைப் பற்றியும் முதலீட்டு வாய்ப்புகள் பற்றியும் அதிலும் குறிப்பாக மேல்நிதி நிதிகள் பற்றிய புரிதலை விரிவுபடுத்துதல்

ஆஸ்திரேலியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் வகையில் உத்திப்பூர்வ முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் இந்திய முதலீட்டை ஈர்க்கும் முயற்சிகளைத் தொடர்தல்

• முதலீட்டு பாய்வுகளை எளிதாக்க ஆஸ்ட்ரேட் மற்றும் இன்வெஸ்ட் இந்தியா இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புதுப்பிக்க நாடுதல்

• இந்தியா-ஆஸ்திரேலியா இரட்டை வரிவிதிப்பு ஒப்பந்தத்தின் கீழ் தொழில்நுட்ப சேவைகளுக்கான கட்டணங்களின் எல்லை தாண்டிய வரிவிதிப்பு பிரச்சினைக்கு இருதரப்பும் பயனடையும் வகையிலான தீர்வுக்கு பேச்சுவார்த்தை நடத்துதல்

• முதலீட்டாளர்களுக்கு சிறந்த நிச்சயத்தன்மையையும் சட்டப்பூர்வ பாதுகாப்புகளையும் வழங்க முதலீட்டு பாதுகாப்பு விதிகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துதல்.

**செயல் திட்டம்**

பொருளாதாரக் கொள்கை மற்றும் ஒழுங்குமுறை மீதான வலுப்படுத்தப்பட்ட கூட்டாண்மை இந்தியாவுடனான நிறுவன ஈடுபாட்டை விரிவுபடுத்தும், இந்திய ஒழுங்குமுறைச் சூழலைப் பற்றிய திறனையும் ஆஸ்திரேலிய புரிதலையும் வளர்க்கும்.

இந்த திட்டமானது ஒழுங்குமுறை, வரிவிதிப்பு மற்றும் வர்த்தகம் ஆகியவற்றில் நிபுணத்துவத்தைப் பகிர்ந்துகொள்வதற்கும், உருவாக்குவதற்கும் ஆஸ்திரேலிய மற்றும் இந்திய

சிவில் சர்வீஸ் தலைவர்களுக்கான திட்டங்களை உள்ளடக்கும். ஆஸ்திரேலிய மற்றும் இந்திய பொருளாதார முகமைகள் முழுவதும் இருதரப்பும் பயனடையும் வகையிலான தற்காலிக மாற்றுத் திட்டம்; மற்றும் இந்தியாவுடன் வலுவான நிறுவன தொடர்புகளை பேணி வளர்ப்பதற்காக ஆஸ்திரேலிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட ஈடுபாடு மற்றும் பரிமாற்றத் திட்டம்.



சாத்திய நிலையிலிருந்து பூர்த்தி செய்து வழங்கலுக்கான நிலையை நோக்கிய பயணம்

**ஆஸ்திரேலியாவின் முதலீட்டு உறவுகள்: 2019 ம் ஆண்டில் முதலீட்டின் மொத்த பங்கு (A$ பில்லியன்)**

ஆஸ்திரேலியாவில் அமெரிக்காவின் முதலீடு அமெரிக்காவில் ஆஸ்திரேலியாவின் முதலீடு

ஆஸ்திரேலியாவில் ஜப்பானின் முதலீடு ஜப்பானில் ஆஸ்திரேலியாவின் முதலீடு

ஆஸ்திரேலியாவில் சீனாவின் முதலீடு சீனாவில் ஆஸ்திரேலியாவின் முதலீடு

ஆஸ்திரேலியாவில் இந்தியாவின் முதலீடு இந்தியாவில் ஆஸ்திரேலியாவின் முதலீடு

ஆதாரமூலம்: ABS அட்டவணை 5352.0 அடிப்படையில்

**நேர்வு ஆய்வு: ஆஸ்திரேலியன் சூப்பர்**

2019 ஆம் ஆண்டில், ஆஸ்திரேலியன்சூப்பர் இந்தியாவின் தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதியத்தின் (NIIF) மாஸ்டர் ஃபண்டிற்கு 1 பில்லியன் அமெரிக்க டாலர்களை அளித்து, மேனேஜர் NIIF லிமிடெட் நிறுவனத்தில் ஒரு பங்கைப் பெற்றது. ஆஸ்திரேலியன்சூப்பர் தனது முதலீட்டு முடிவிற்கு முந்தைய ஆண்டுகளில், இந்திய அரசு வெளிநாட்டு முதலீட்டிற்கு, அதிலும் குறிப்பாக உள்கட்டமைப்புத் துறையில் இந்தியாவை மிகவும் கவர்ச்சிகரமானதாக மாற்றுவதற்கான கட்டமைப்பு மாற்றங்களை முன்னெச்சரிக்கையுடன் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

ஸ்திரேலியன்சூப்பரின் முதலீடு இன்னும் ஆரம்ப கட்டத்தில் இருப்பதால், வருவாயை மதிப்பிடுவதை கடினமாக்குகிறது, இந்தியாவில் கோவிட்-19 இன் இரண்டாவது அலையில் இருந்து உள்கட்டமைப்பு சொத்துக்களின் செயல்பாடு வலுவாக மீண்டுள்ளது என்று குறிப்பிடுகிறது.

சாலைகள் மற்றும் விமான நிலையங்களில் போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் மின்சார நுகர்வு ஆகியவை கோவிட்-க்கு முந்தைய நிலைக்கு மீட்டெடுக்கப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலியன்சூப்பரால் கவனிக்கப்படும் ஒரு சவாலானது, இந்தியாவில் அதன் முதலீட்டை விரைவாகப் பயன்படுத்துவதற்கான திறன் ஆகும். ஆஸ்திரேலியன்சூப்பர், அதன் முதலீடு மற்றும் கோவிட்-19க்கான காலம் மற்றும் இந்திய உள்கட்டமைப்புத் துறையின் கவர்ச்சிகரமான துறைகளில் சொத்துக்களுக்கான அதிக அளவிலான போட்டி ஆகியவையே இதற்குக் காரணம் என்று கூறுகிறது. இருப்பினும், அண்மையில் வெளியிடப்பட்ட தேசிய உள்கட்டமைப்பு பைப்லைன் மற்றும் மாஸ்டர்பிளான் மூலம், ஆஸ்திரேலியன்சூப்பர் அண்மைய எதிர்காலத்தில் முதலீடு செய்ய போதுமான வாய்ப்பு கிடைக்கும் என்று நம்புகிறது.

# An India Economic Strategy to 2035 by Australian Government

2035-ம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய இந்தியப் பொருளாதார உத்தி தொடர்பான புதுப்பிக்கப்பட்ட அறிக்கை

**உள்கட்டமைப்பு: ஆழமான கூட்டாண்மைக்கான வலுவூட்டப்பட்ட கட்டிடக்கலை**

அரசாங்கம் உள்கட்டமைப்புத் துறையில் இணைப்புகளை வலுப்படுத்தி வணிக வருவிளைவுகளை எளிதாக்கும். ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் பொருளாதார மேம்பாட்டை உந்துவதற்கும், அவற்றின் மக்கள்தொகைக்கும் இந்தோ-பசிபிக் பிராந்தியத்திற்கும் உலகத் தரம் வாய்ந்த இணைப்புநிலையை வழங்குவதற்கும் வலுவான உள்கட்டமைப்பு செயற்குறிப்புகளைக் கொண்டுள்ளன.

பொருளாதார வளர்ச்சி, பணி உருவாக்கம் மற்றும் கோவிட்-19 இல் இருந்து மீள்தல் ஆகியவற்றை ஆதரிப்பதற்கு இந்தியா உள்கட்டமைப்பில் அதிக அளவிலான முதலீட்டை மேற்கொண்டு வருகிறது. இந்தியாவின் உள்கட்டமைப்புத் துறையில் ஆஸ்திரேலியாவின் ஈடுபாட்டை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஆஸ்திரேலியாவின் உள்கட்டமைப்புத் துறையிலும் இந்திய முதலீட்டுக்கு வாய்ப்பு உள்ளது.

இந்தியாவின் உள்கட்டமைப்பு செயற்குறிப்பு ஆஸ்திரேலிய முதலீட்டாளர்களுக்கும் உள்கட்டமைப்பு சேவை வழங்குநர்களுக்கும், அதிலும் குறிப்பாக போக்குவரத்து உள்கட்டமைப்பு (இரயில், சாலைகள் மற்றும் துறைமுகங்கள்), நகர்ப்புற மேம்பாடு (கட்டிடங்கள் மற்றும் நீர்) மற்றும் வாடிக்கையாளர்களுக்கு வணிகரீதியான சரக்குப் போக்குவரத்துத் துறை வழங்குநர்களுக்கும் வாய்ப்புகளை வழங்குகிறது, கார்பன் குறைப்பு உட்பட இந்தியாவின் ஆற்றல் மற்றும் வேளாண் செயற்குறிப்புடன் ஈடுபடுவதற்கான சாத்தியங்களும் உள்ளன.

ஆஸ்திரேலிய வணிகங்கள் இந்திய சந்தையைப் புரிந்துகொள்வதற்கும் நுழைவதற்கும் சவால்களைக் காண்கின்றன. இந்தச் சவால்கள் இருந்தபோதிலும், ஆஸ்திரேலிய வெற்றிக் கதைகள், இடரில் ஈடுபடும் தொழில் முன்னோடியாக இருப்பதன் நன்மையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. சிறந்த வர்த்தகக் கூட்டாண்மைகளை ஆதரிப்பதற்காக நம்பிக்கையையும் அதிகாரப்பூர்வ உறவுகளையும் கட்டியெழுப்புவதில் அரசு தனது பங்கை ஆற்றுவதற்கு உறுதிபூண்டுள்ளது.

IES வெளியானதில் இருந்து, இலட்சியத் திட்டங்களை அறிவிப்பதன் மூலம் உள்கட்டமைப்பு மேம்பாட்டை எளிதாக்குவதற்கான பின்வரும் முயற்சிகளை இந்தியா துரிதப்படுத்தியுள்ளது: தேசிய பணமாக்கல் பைப்லைன் (A$100 பில்லியனுக்கும் அதிகமான 'இடர் குறைப்புச் செய்யப்பட்ட' பிரவுன்ஃபீல்ட் சொத்துக்கள்); தேசிய உள்கட்டமைப்பு பைப்லைன் (சுமார் 2.6 டிரில்லியன் டாலர் மதிப்புள்ள 8,000 உள்கட்டமைப்பு திட்டப்பணிகள்); A$1.8 டிரில்லியன் தேசிய உள்கட்டமைப்பு மாஸ்டர் பிளான்; மற்றும் உள்கட்டமைப்புத் துறையில் 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிக்கும் சீர்திருத்தங்கள். இது, குளோபல் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் ஹப்ஸ் இன்ஃப்ராகாம்பஸின் கூற்றுப்படி உள்கட்டமைப்பு மேம்பாட்டின் பெரும்பாலான அம்சங்களில் அதன் தரவரிசையை மேம்படுத்தியுள்ளது (விளக்கப்படத்தைப் பார்க்கவும்).

உள்கட்டமைப்புத் துறையில் மேலதிக முதலீட்டுக்கும், வணிகச் செயல்பாடுகளுக்கும் ஆதரவளிக்க, அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

- ஆஸ்திரேலியத் திறனைக் காட்சிப்படுத்தும் முன்னெடுப்புகள் மற்றும் வணிகங்களை இணைத்தல் உட்பட, ஆஸ்திரேலியா-இந்தியா வர்த்தகப் பரிமாற்றத்தில் உள்கட்டமைப்பு மீதான கவனச்செலுத்தத்தைத் தொடர்தல்
- ஆஸ்திரேலிய மற்றும் இந்திய உள்கட்டமைப்பு துறைகளின் இயங்குநிலையை மேம்படுத்துவதற்கான ஒழுங்குமுறை கட்டமைப்புகளிலும் செந்தரங்களிலும் ஒத்துழைத்தல்.

**செயல் திட்டம்**

**ஆஸ்திரேலியா-இந்தியா உள்கட்டமைப்பு மன்றமானது (AIIF)** — IES இன் ஒரு முக்கியமான பரிந்துரையாக உள்ளது — ஆஸ்திரேலிய வணிகங்களுக்கு இந்தியாவின் பரந்த உள்கட்டமைப்பு திட்டங்களில் இருந்தும் வாய்ப்புகளில் இருந்தும் பலனடைவதற்கான பாதையை மென்மையாக்கும். மன்றமானது, தனித்துவமாக்கிய சேவைகள் மற்றும் தொழில்நுட்பத்துறையில் உள்ள ஆஸ்திரேலிய முதலீட்டாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் உட்பட, கொள்கை, கார்ப்பரேட் மற்றும் ஒழுங்குமுறை நிபுணத்துவம் ஆகியவற்றை ஒ்னறிணைக்கும், வணிக உறவுகளை வலுப்படுத்தும் மற்றும் வாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கும். இந்த மன்றம், இந்திய உள்கட்டமைப்பு திட்டப்பணிகளில் சிறந்த ஆஸ்திரேலிய ஈடுபாடு மற்றும் ஆஸ்திரேலியாவின் வர்த்தகம் மற்றும் முதலீட்டில் சிறந்த பல்வகைப்படுத்தல் ஆகியவற்றை ஆதரிக்கும். இம்மன்றம் 2022 ம் ஆண்டு முதல் பாதியில் தன் செயல்பாடுகளைத் தொடங்கி ஜூன் 2024 ம் ஆண்டு வரை இயங்கும்.





**இந்தியாவின் உள்கட்டமைப்புச் சூழல் மேம்பட்டுள்ளது**

InfraCompass இன் கூற்றுப்படி, 2017 ம் ஆண்டு முதல் 2020 ம் ஆண்டு வரை உள்கட்டமைப்பு தரத்தின் எட்டு முக்கிய இயக்கிகளுள் ஆறு இயக்கிகளில் இந்தியா உயர்ந்துள்ளது.

தரவரிசை

திட்டமிடல்

நிதிசார் சந்தைகள்

கொள்முதல்

நிதித் திறன்

ஒழுங்குமுறை கட்டமைப்புகள்

ஆளுகை

செயல்பாடு

**தரவரிசை 2017 தரவரிசை 2020**

ஆதாரமூலம்: உலகளாவிய உள்கட்டமைப்பு மையம்





**நிதிச் சேவைகள்**

இந்தியாவின் நிதிச் சேவைத் துறையானது கூட்டாண்மைக்கான குறிப்பிடத்தக்க வாய்ப்புகளை தொடர்ந்து வழங்கி வருகிறது. டிஜிட்டல் புத்தாக்கங்களின் முடுக்கும் வேகத்தை பிரதிபலிக்கும் வகையில், மொபைல் கட்டணச் செயலிகள் மற்றும் பிற ஆள்சார் நிதி தகவல் கருவிகள் உட்பட வங்கியியல் மற்றும் நிதிசார் தொழில்நுட்ப (ஃபின்டெக்) துறைகளில் இந்தியா அதிவிரைவான வளர்ச்சியைக் காண்கிறது.  ஆசியாவின் சிறந்த நிதித்தொழில்நுட்ப மையமாக மாறுவதற்கான

இந்தியாவின் முயற்சியானது எதிர்காலத்தில் ஆஸ்திரேலிய வணிகத்திற்கான வாய்ப்புகளை வழங்கும்.

நிதிச் சேவைகளில் அந்நிய முதலீட்டை ஈர்ப்பது இந்திய அரசின் முன்னுரிமையாக உள்ளது. இந்தியா மூலதன முதலீட்டு வளர்ச்சி, வலுவான கார்ப்பரேட் ஆளுகை மற்றும் பொதுத்துறை பங்குகளை விற்றுவிடல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம், தனது வங்கித் துறையின் நலனில் கவனம் செலுத்துகிறது. இது, நுகர்வோர் தங்கள் தரவை சிறந்த முறையில் அணுகுவதற்கும் பகிர்வதற்கும் அதிகாரம் அளிக்க ஒரு தரவு பெயர்வுத்திறன் ஆட்சியையும் செயல்படுத்துகிறது.

சாத்தியமான முதலீட்டாளர்களுக்கான ஒழுங்குமுறை உறுதிப்பாடு அதிகரிக்கும் போது, ஆஸ்திரேலிய மற்றும் இந்திய வணிகங்கள் இணக்கமான அமைப்புகள் மற்றும் செந்தரங்களில் இருந்தும், இயங்குநிலை மற்றும் சிறந்த தகவல் பகிர்வு ஆகியவற்றிலிருந்தும் பயனடையும்.

ஆஸ்திரேலியாவின் வங்கியியல் அமைப்பு, உலகளாவிய நிதி அமைப்புடன் நன்கு ஒருங்கிணைக்கப்பட்டிருந்தாலும், இந்தியாவுடன் மிகக் குறைந்த அளவிலான வெளிப்பாட்டையே கொண்டுள்ளது. ஆஸ்திரேலிய வங்கி சொத்துக்களில் கால் பகுதி அண்டைநாடுகளில் அமைந்துள்ளது, ஆனால் இதில் 1 சதவீதத்திற்கும் குறைவாகவே இந்தியாவில் உள்ளது.

இந்தியாவின் கடன் சந்தைகளில் முதலீடு அதிகரித்து வருவது வலுவான அண்மைய எதிர்காலத்தில் அடையக்கூடிய வாய்ப்பை பிரதிநிதித்துவப்படுத்துகிறது, புதிய முதலீட்டு ஆணைகளை நிறுவுவதற்கும், இந்தியச் சந்தையைப் பற்றிய மேலதிக அறிவை மேம்படுத்துவதற்கும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

நிதிச் சேவைகளில் ஈடுபாட்டை ஆழமாக்க உதவ, அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

- நிதி ஆயோக் மற்றும் இந்தியாவின் நிதி அமைச்சகத்துடன் ஆஸ்திரேலிய கருவூலத்தால் நடத்தப்படும் வருடாந்திர பேச்சுவார்த்தைகளைப் பயன்படுத்தி, கருவூலத்திற்கும் இந்திய நிதி அமைச்சகத்திற்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீண்டும் நிறுவுதல் உட்பட இருதரப்பு உறவுகளையும் நிதித்துறையில் ஒத்துழைப்பையும் ஆழப்படுத்தல்.
- தரவுகளைச் சார்ந்தியங்கும் தொழில்நுட்ப நிறுவனங்களை சர்வதேச அளவில் உயர்த்துவதற்கும், சந்தைகள் எங்கிலும் தயாரிப்புகளையும் சேவைகளையும் நுகர்வோர் அணுக அனுமதிப்பதற்கும், இந்தியாவுடனான இயங்குநிலை நுகர்வோர் தரவு பெயர்வுத்திறன் கட்டமைப்புகளில் தொடர்ச்சியாக ஈடுபடுதல்.

**குளோபல் ஃபின்டெக் அடாப்ஷன் இன்டெக்ஸ், 2019**

87%

இந்தியா

64%

உலகளாவிய சராசரி

58%

ஆஸ்திரேலியா

EY's குளோபல் ஃபின்டெக் அடாப்ஷன் இன்டெக்ஸ் 2019 இன் கூற்றுப்படி, இந்தியாவில் ஃபின்டெக் ஏற்பு உலகளாவிய சராசரியை விட அதிகமாக உள்ளது. இந்த விளக்கப்படம் ஃபின்டெக் சேவைகளைப் பயன்படுத்தும் மக்கள்தொகையின் சதவீதத்தைக் காட்டுகிறது.

ஆதாரமூலம்: EY குளோபல் ஃபின்டெக் அடாப்ஷன் இன்டெக்ஸ் 2019

37

சாத்திய நிலையிலிருந்து பூர்த்தி செய்து வழங்கலுக்கான நிலையை நோக்கிய பயணம்

38

2035-ம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய இந்தியப் பொருளாதார உத்தி தொடர்பான புதுப்பிக்கப்பட்ட அறிக்கை

**பெருகிவரும் சமூக உறவுகள்**

700,000 க்கும் மேற்பட்ட வலிமையான, இந்திய மரபுடைமையைக் கொண்ட ஆஸ்திரேலியர்கள் ஆஸ்திரேலியாவில் மிகவும் ஆற்றல் வாய்ந்த மற்றும் வெற்றிகரமான சமூகங்களில் ஒன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். சமூகம் 20 ஆண்டுகளில் ஐந்து மடங்கு வளர்ச்சியடைந்துள்ளது, இந்தியாவில் பிறந்தவர்களைப் பொறுதத்வரை, ஆஸ்திரேலியாவில் உள்ள வெளிநாடுகளில் பிறந்தவர்களில் இரண்டாவது பெரிய குழுவாக 2020 ஆம் ஆண்டில் மாறியுள்ளனர் (விளக்கப்படத்தைப் பார்க்கவும்).

ஆஸ்திரேலியாவின் பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் இந்த சமூகத்தின் நேசத்துக்குரிய பங்கு வணிகம், அரசியல், கலை, அறிவியல் மற்றும் சிவில் சமூகம் எங்கிலும் தொடர்ந்து வளரும். இந்த சமூகத்தின் பல உறுப்பினர்கள் ஆஸ்திரேலியா-இந்தியா பொருளாதார உறவுக்கு மதிப்புமிக்க பங்களிப்பை வழங்குகிறார்கள். அவர்கள் வர்த்தகம் மற்றும் முதலீட்டை எளிதாக்குகின்றனர், பண்பாடு புரிதலை உருவாக்க உதவுகின்றனர், மாணவர்கள், திறமையான புலம்பெயர்ந்தோர் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கான இலக்கிடமாக ஆஸ்திரேலியாவின் கவர்ச்சியை மேம்படுத்துகின்றனர், மேலும் இந்தியாவில் ஆஸ்திரேலியா எவ்வாறு உள்வாங்கி உணரப்படுகிறது மற்றும் ஆஸ்திரேலியாவில் இந்தியா எவ்வாறு உள்வாங்கி உணரப்படுகிறது என்பதன் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர்.

**செயல் திட்டம்**

ஆஸ்திரேலியா-இந்தியா உறவுகளுக்கான மையம், இந்தியாவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையே மற்றும் ஆஸ்திரேலியாவின் துடிப்பான இந்திய புலம்பெயர் சமூகத்துடன் வணிக மற்றும் சமூக ஈடுபாட்டை இயக்கி ஒருங்கிணைக்கும். இது, ஆஸ்திரேலிய வணிக "இந்திய கல்வியறிவை" உருவாக்குவதிலும் இந்தியச் சந்தையில் இணைப்புகளை வழிசெலுத்த உதவுவதிலும் ஆஸ்திரேலிய இந்திய வர்த்தக பரிமாற்றத்தை (AIBX) முழுமையாக்கும். இந்த மையம், உலகளவில் முன்னணியில் இருக்கும் தரமான ஆஸ்திரேலிய மூன்றாம் நிலை நிறுவனங்களைப் பற்றிய மிகவும் துல்லியமான புரிதலை ஆதரிக்கும். மேலும், நிகழ்வுகள் மற்றும் பண்பாட்டு பரிமாற்றம் மூலம் இருநாட்டு குடிமக்களுக்கு இடையேயான நேரடி இடைவினை உறவுகளையும், புரிதலையும், பரிமாற்றத்தையும் பெருக்கும்.

39

சாத்திய நிலையிலிருந்து பூர்த்தி செய்து வழங்கலுக்கான நிலையை நோக்கிய பயணம்


**செயல் திட்டம்**

பொருளாதார உறவை மேலும் ஆதரிக்க, புலம்பெயர்ந்த இந்தியர்கள் தமது வலையமைப்புகளையும் நிபுணத்துவத்தையும் பயன்படுத்த அவர்களின் ஆயத்த நிலையை அரசு ஆதரிக்கும். புலம்பெயர் சமூக படமாக்கல் அறிக்கையானது ஆஸ்திரேலிய நிறுவன

இயக்குநர்கள், தொழில் நெறிஞர்கள், கல்வியாளர்கள் மற்றும் இந்திய வம்சாவழியைச் சேர்ந்த தொழில்முனைவோர் போன்ற முக்கிய வலையமைப்புகளை முன்னிலைப்படுத்தும். இந்த ஆராய்ச்சியானது, நமது ஈடுபாட்டை சிறப்பாகக் குறிவைத்து ஆஸ்திரேலியாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவுகளை வளர்ப்பதற்கும் புலம்பெயர்ந்த சமூகத்தின் ஈடுபாட்டு உத்திக்கு அடித்தளமாகவும் அமையும்.

**இந்தியாவுடனான சமூக இணைப்புகள் தொடர்ந்து வளர்ந்து வருகின்றன**

இந்தியாவில் பிறந்த ஆஸ்திரேலிய குடியிருப்பாளர்கள் மற்றும் இந்திய வம்சாவழியைச் சேர்ந்த ஆஸ்திரேலியர்கள், 2000-20




இந்தியாவில் பிறந்தவர் இந்திய வம்சாவழி

ஆதாரமூலம்: ABS மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் குடிபெயர்வுத் தரவு (இந்திய வம்சாவழி தரவானது 5-ஆண்டுக்கு ஒருமுறையான அதிகரிப்புகளில் ஆஸ்திரேலிய மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவுகளில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது)





**கல்வி**

ஆஸ்திரேலியா-இந்தியா கல்வி உறவு வலுவானது. இந்திய மாணவர்கள், நிறுவனங்கள், இந்திய புலம்பெயர்ந்தோர் மற்றும் இந்திய அரசுடன் நீண்டகால இணைப்புகளைக் கொண்டுள்ள ஆஸ்திரேலியா, மேல்நிலைப்பள்ளி, பல்கலைக்கழகம் மற்றும் தொழிற்கல்வித் துறைகளில் கல்வி மற்றும் பயிற்சியை உலகத் தரத்தில் வழங்குகிறது. இன்னும் ஆழமான கல்வி உறவு இரு நாடுகளுக்கும் நன்மைகளைத் தரும்.

கோவிட்-19 இன் சவால்களுக்கு மத்தியிலும் கல்வி உறவுகளை வலுப்படுத்த அரசு உழைத்துள்ளது. ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் 2020 ம் ஆண்டில் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் தொழிற்கல்வி மற்றும் பயிற்சியில் (VET) ஒத்துழைப்பை மேம்படுத்தின. இந்தத் துறை எங்கிலும் தர உத்தரவாதத்தில் நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்தல் போன்ற, டிஜிட்டல் வழங்கலுக்கு நிலைமாறுவதில் ஆஸ்திரேலியா இந்தியாவுடன் ஒத்துழைத்துள்ளது. பல ஆஸ்திரேலிய நிறுவனங்கள், கூட்டு ஆராய்ச்சி, மாணவர்கள் தமது பட்டப்படிப்பின் ஒரு பகுதியை இந்தியாவிலும் மற்றொரு பகுதியை ஆஸ்திரேலியாவிலும் பயிலும் திட்டங்கள் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றின் பரிமாற்றம் உட்பட இந்திய நிறுவனங்களுடன் கூட்டுறவு ஒப்பந்தங்களைத் தொடர்ந்து செய்து வருகின்றன.

எல்லை மூடலின் சவால்களுக்கு அப்பால் நாம் செல்லும்போது, ஆஸ்திரேலிய அரசு ஆஸ்திரேலியாவை உயர்தர கல்வி வழங்குநராகவும் கூட்டாளியாகவும் தொடர்ந்து

நிலைநிறுத்தும். நமது கல்வி, திறன்கள் மற்றும் ஆராய்ச்சித் தேவைகளை தற்காலத்திலும் எதிர்காலத்திலும் ஆதரிக்கும்.

ஒழுங்குமுறை அமைப்புகளில் தொடர்ச்சியான அதிகாரப்பூர்வ ஈடுபாடு, ஆஸ்திரேலிய வழங்குநர்களுக்கு இந்தியாவில் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும், உள்நாட்டில் இருப்பை ஆதரிக்கக்கூடிய இணைப்புகளுக்கும் உதவும். இது, ஆஸ்திரேலிய மாணவர்களுக்கும், கூட்டுப் பட்டப்படிப்புத் திட்டங்களுக்கும், இந்தியாவில் வாய்ப்புகளை ஆதரிக்கும். ஆஸ்திரேலிய மற்றும் இந்திய வணிக அமைப்புகளுடன் ஆஸ்திரேலிய VET மாணவர்களுக்கு இந்தியாவில் பணி ஒருங்கிணைந்த கற்றல் வாய்ப்புகளை ஆராய ஒரு மதிப்பிடல் பயிற்சியை அரசு நியமிக்கும்.

கல்வித் தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் பயன்படுத்துகின்ற டிஜிட்டல் மற்றும் கலப்பு டெலிவரி முறைகள் உட்பட, பல்வேறு வகையான படிப்புகளில் இந்திய மாணவர்கள் படிப்பதை ஊக்குவிக்க, வழங்குநர்களுடன் அரசு பணியாற்றும். கல்வியை வழங்குவதற்கான புத்தாக்கமான ஒப்புருக்கள், பல்வேறு மாணவர்களின் திறமையை எளிதாக்கவும், எதிர்காலத் திறன்களின் தேவைகளைப் நிறைவேற்ற ஆயத்தநிலை இடம்பெயர்வுக்கும் உதவும்.

சர்வதேச கல்விக்கான ஆஸ்திரேலிய உத்தி 2021-2030 (ASIE) ஆஸ்திரேலியாவின் சர்வதேச கல்வித் துறையின் எதிர்காலத்திற்கு மேலும் வழிகாட்டும் மற்றும் பெருந்தொற்றுநோயில் இருந்து துறையை மீட்டெடுப்பதில் கவனம் செலுத்தும். தகுதிகளை அங்கீகரிப்பதில் சிறந்த நடைமுறையைப் பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்புகளை ஆஸ்திரேலியா தொடர்ந்து ஆதரிக்கும். இதில் கலப்பு, ஆன்லைன் மற்றும் அண்டைநாடுகளில் வழங்கல் உட்பட, மேலதிக குறைநிரப்பு அணுகுமுறைகள் இருநாடுகளுக்கும் ஒன்றுக்கொன்று ஒத்த நன்மையைப் பயக்கும்.

கல்வித் துறையில் உறவுகளை வலுப்படுத்த, அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

- இந்தியாவின் பன்னாட்டுக் கல்வி செயற்குறிப்பு, நிறுவனக் கூட்டாண்மை மற்றும் இந்தியாவில் உள்ள மாணவர்கள் ஆகியவற்றை ஆதரிப்பதற்காக ஆஸ்திரேலியாவின் படிப்பு மையங்களை நிறுவ ஆஸ்திரேலிய பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பணியாற்றுதல்
- VET இல் உள்ள தொடர்புகளை வலுப்படுத்தவும், எதிர்காலத் திறன் ஈடுபாட்டைப் பற்றிய தகவலளிக்கவும், ஆஸ்திரேலியா இந்திய கல்விக் கவுன்சில் (AIEC) திறன் செயற்குறிப்புக்கு ஆதரவளிக்கவும் ஆஸ்திரேலியா இந்திய திறன்கள் உச்சி மாநாட்டைத் தொடங்குதல்
- இருநாடுகளுக்கும் ஒன்றுக்கொன்று ஒத்த ஆர்வமுள்ள துறைகளில் ஈடுபாட்டை ஆதரிக்கும் மானியங்கள் திட்டத்துடன் திறன்கள் துறைகளுக்கு இடையே சிறந்த ஒத்துழைப்பை வளர்ப்பதற்காக ஆஸ்திரேலியா இந்தியா திறன்கள் போர்ட்டலைத் தொடங்குதல்
- இந்திய மாணவர்கள் மற்றும் பட்டதாரிகளுக்கான ஊதியமளிக்கும் பணிக்குப் பொருத்தமான தகுதியைப் பெறச்செய்யும் திட்டங்கள் உட்பட, மாணவர் அனுபவத்தை மேம்படுத்தவும், முழுமையான கல்வி கூட்டாளியாக ஆஸ்திரேலியாவின் நிலையை உருவாக்கவும் ஆஸ்ட்ரேடின் இந்தியா டிஜிட்டல் கல்வி மையத்தை வழங்குதல்.
- ஆஸ்திரேலியா மாஸ்டர் கிளாஸ் சீரீஸ் மற்றும் விர்ச்சுவல் எஜுகேஷன் ஷோகேஸ் போன்ற நிகழ்வுகள் மூலம் ஆஸ்திரேலிய திறன்களைக் காட்சிப்படுத்தல் மற்றும் புதிய மாணவர்களையும் கூட்டாளிகளையும் ஈர்த்தல்.

41

சாத்திய நிலையிலிருந்து பூர்த்தி செய்து வழங்கலுக்கான நிலையை நோக்கிய பயணம்

**செயல் திட்டம்**

ஒரு புதிய **மைத்ரி ஸ்காலர்ஸ்** முன்னெடுப்பானது தலையாயச் செயல்திறன் கொண்ட இந்தியப் பட்டதாரி மாணவர்களை ஆஸ்திரேலியாவின் உலகின் முன்னணி பல்கலைக்கழகங்களுக்கு கொண்டு வரும். ஆஸ்திரேலியா-இந்தியா உறவுகளுக்கான மையம், அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) மற்றும் சுகாதாரநலம் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, இந்த முன்னெடுப்பை நிர்வகிக்கும்.

ஆஸ்திரேலியக் கல்வி, திறன்கள் மற்றும் கல்வித் தொழில்நுட்ப வழங்குநர்களுக்கு இந்தியச் சந்தையில் அணுகலை வழங்கவும், ஆஸ்திரேலிய திறன்களை காட்சிப்படுத்தவும், ஆஸ்திரேலியாவை இந்தியாவின் விருப்ப கல்விக் கூட்டாளியாக நிலைநிறுத்தவும் ஆஸ்திரேலியா-இந்தியா எதிர்காலத் திறன்கள் முன்னெடுப்பை நிறுவுவதற்கு அரசாங்கம் தொழில்துறையுடன் இணைந்து செயல்படும். எதிர்காலத் திறன்கள் முன்னெடுப்பானது ஆஸ்திரேலியத் திறன்கள் வழங்குநர்களுக்கு இந்தியாவில் தேவையான அளவில் வழங்குவதற்கான குறிப்பிடத்தக்க வாய்ப்புகளைத் திறக்கும். டிஜிட்டல் நலன்; போக்குவரத்து மற்றும் வாடிக்கையாளர்களுக்கு வணிகரீதியான சரக்குப் போக்குவரத்துத் துறை; நவீன உற்பத்தி; மற்றும் தரவுப் பகுப்பாய்வியல் மற்றும் சைபர் செக்யூரிட்டி ஆகியவற்றில் ஆஸ்திரேலியாவின் வலிமை இந்தியாவின் திறன்கள் தேவைக்கு பொருந்துகிறது. வணிகப் பயிற்சித் தேவைகளைப் நிறைவேற்றுவதற்கு தொழில் சார்ந்த அணுகுமுறையைப் பயன்படுத்துவது, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் திறன்களை மேலதிக இந்தியத் தொழிலாளர்கள் பெற்றிருப்பதை உறுதி செய்யும்.

ஆஸ்திரேலியா-இந்தியா ஆராய்ச்சி மாணவர் பெல்லோஷிப் பைலட் திட்டத்தின் மூலம் இருவழி மாணவர் மற்றும் ஆராய்ச்சியாளர் பரிமாற்றத்தை அரசு ஆதரிக்கிறது. மேலும், ஆஸ்திரேலியா மற்றும் இந்திய ஆராய்ச்சியாளர்களை ஆஸ்திரேலியா ஆராய்ச்சி ஒத்துழைப்பு மையம் - இந்தியா மூலம் இணைக்கவும் உடனுழைக்கவும் உதவுகிறது.

**நேர்வு ஆய்வு: டீக்கின் யுனிவர்சிட்டி மற்றும் O.P. ஜிண்டால் குளோபல் யுனிவர்சிட்டி**

அக்டோபர் 2021 ம் ஆண்டில், **டீக்கின் பல்கலைக்கழகம் மற்றும் OP ஜிண்டால் குளோபல் யுனிவர்சிட்டி** ஆகியவை ஜிண்டால் மற்றும் டீக்கின் கல்விக் கூட்டாண்மையை புது டெல்லியில் தொடங்கின. இந்தியாவில் உள்ள ஆஸ்திரேலிய நிறுவனங்களுக்கான நாடுகடந்த கல்வி, ஊதியமளிக்கும் பணிக்குப் பொருத்தமான தகுதியுடன் இருத்தல், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கக் கூட்டாண்மைகள் ஆகியவற்றுக்கான புதிய ஒப்புருக்களை இந்த கூட்டாண்மை விளக்குகிறது.


இந்தியாவிற்குள் படிப்பைத் தொடங்கும்போதும், அதன்பிறகு கடனை இடமாற்றும் போதும், மாணவர்கள் பன்னாட்டு வளாக அனுபவத்தைப் பெறுவதற்காக, கற்பித்தல் மற்றும் கற்றலின் புத்தாக்கமான மற்றும் கலப்பின ஒப்புருக்களை உருவாக்குவதற்கான இரு பல்கலைக்கழகங்களின் உறுதிப்பாட்டை இந்த தொடக்கம் கொண்டாடுகிறது.



**இந்திய மாணவர் சேர்க்கை 2012-2020**

கோவிட்-19 பெருந்தொற்றுநோய் காரணமாக 2020 இல் மந்தநிலை காணப்பட்டாலும், 2012 ம் ஆண்டு முதற்கொண்டு இந்திய மாணவர் சேர்க்கை வேகமாக வளர்ந்துள்ளது.

மாணவர்களின் எண்ணிக்கை




உயர்கல்வி VET ELICOS மொத்தம்

*சேர்க்கைத் தரவு ஆஸ்திரேலியாவில் உள்ள வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையைக் குறிக்கவில்லை, ஆனால் உண்மையான படிப்புச் சேர்க்கைகளைக் கணக்கிடுகிறது.

ஆதாரமூலம்: கல்வி, திறன்கள் மற்றும் பணிவாய்ப்புத் துறை

**ஆஸ்திரேலியாவில் உள்ள 5 வெளிநாட்டு மாணவர்களில் கிட்டத்தட்ட ஒருவர் இந்தியாவைச் சேர்ந்தவராக இருக்கிறார்**

டிசம்பர் 2021 நிலவரப்படி, ஆஸ்திரேலியாவில் உள்ள வெளிநாட்டு மாணவர்களின் மிகப்பெரிய குழுவாக இந்திய பன்னாட்டு மாணவர்கள் உள்ளனர்.

19%

இந்தியா

17%

சீனா

11%

நேபாளம்

5%

வியட்நாம்

4%

கொலம்பியா

ஆதாரமூலம்: ஆஸ்திரேலிய அரசு





**சுற்றுலாத்துறை**

# An India Economic Strategy to 2035 by Australian Government

ஆஸ்திரேலியாவின் சுற்றுலாத் துறையின் மீட்சிக்கு இந்தியா முக்கியமானதாக இருக்கும். கோவிட்-19க்கு முன், வருகையாளர்களின் எண்ணிக்கையில் இந்தியா வேகமாக வளர்ந்து வரும் நமது சுற்றுலாச் சந்தையாக இருந்தது. ஆஸ்திரேலியா 2035 ஆம் ஆண்டுக்குள் மேலும் 1.2 மில்லியன் இந்தியர்களின் வருகையை அடைவதை இலக்காகக் கொண்டுள்ளது, இது ஆஸ்திரேலியப் பொருளாதாரத்திற்கு ஆண்டுக்கு 9 பில்லியன் ஆஸ்திரேலிய டாலர்களுக்கு மேலான மதிப்பை சேர்க்கும்.

குறுகிய கால மற்றும் நடுத்தர கால சவால்களைக் கண்டறிந்து தீர்ப்பதற்கும், இந்திய சந்தையின் நீண்டகால உள்ளார்ந்த திறனைக் கைவரப்பெறுவதற்கும், தொழில்துறை மற்றும் மாநில அமைப்புகளுடன் இணைந்து பணியாற்ற அரசு உறுதிபூண்டுள்ளது. விமானப் போக்குவரத்து அணுகல், இலக்கிடப்பட்ட சந்தைப்படுத்தல், தொழில்துறை உடனுழைப்பு மற்றும் அரசுக்கும் அரசுக்குமான வலுவான நேரடி உறவுகள் ஆகியவை ஆஸ்திரேலியாவை இந்தியப் வருகையாளர்களின் தலையாய இலக்கிடமாக நிலைநிறுத்துவதற்கு இன்றியமையாததாக இருக்கும். நமது பன்னாட்டு வருகையாளர் பொருளாதாரத்தில் இந்திய மாணவர்களும் முக்கிய கூறாக இருப்பார்கள்.

2035-ம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய சுற்றுலா ஆஸ்திரேலியாவின் இந்திய உத்தி சுற்றுலாத் திட்டத்தை புதுப்பிப்பதன் மூலம், நமது முன்னுரிமைகளைத் தெரிவிக்க ஆராய்ச்சிகளை மேற்கொள்வதன் மூலம், சுற்றுலா மற்றும் கூட்டுப் பணிக்குழுவில் புதுப்பிக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவுடன் ஒத்துழைப்பதன் மூலம், வெளிச்செல்லும் இந்திய சுற்றுலா குறித்த ஆஸ்திரேலிய துறைகளின் புரிதலை அரசு தொடர்ந்து மேம்படுத்தும். பிராண்ட் நீர்த்துப்போவதைத் தவிர்க்க, மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களுடன் ஒன் வாய்ஸ் முன்னெடுப்பின் கீழ் அரசாங்கம் செயல்படும்.


இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கான தேவையை அதிகரிக்கவும், சலுகைகளை மேம்படுத்தவும், அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

- இந்திய மற்றும் ஆஸ்திரேலிய விமான நிறுவனங்கள், விமான நிலையங்கள், CAPA, மாநில மற்றும் பிரதேச அரசுகள் மற்றும் சுற்றுலா அமைப்புகளுடன் ஈடுபடுவதன் மூலம் ஆஸ்திரேலியா-இந்தியா வழித்தடங்களில் விமான இணைப்புநிலையையும் திறனையும் மேம்படுத்தல்
- பிரபலங்களின் ஒப்புதல்களைப் பயன்படுத்துவதன் மூலம் மற்றும் Signature Experiences of Australia திட்டத்தை ஊக்குவிப்பதன் மூலம் ஆடம்பர ஓய்வுத் துறையில் எமது பங்கை வளர்த்தல்
- இந்தியாவில் சுற்றுலா ஆஸ்திரேலியாவின் தடத்தை விரிவுபடுத்தல் மற்றும் T20 உலகக் கோப்பை 2022 ஊக்குவிப்பு போன்ற கூடுதல் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு புதிய நிதியைப் பயன்படுத்துதல்
- ஆஸ்திரேலிய சுற்றுலா ஏற்றுமதி கவுன்சிலின் இந்தியா ஹோஸ்ட் திட்டத்தின் கீழ் கல்வி முன்னெடுப்புகள் மூலம் 'இந்தியா ஆயத்தம்' சுற்றுலாப் பணியாளர்களை ஆதரித்தல்.

**ஆஸ்திரேலியாவிற்கு இந்திய வருகையாளர்கள்**

2019 ஆம் ஆண்டில், கிட்டத்தட்ட 400,000 இந்தியர்கள் ஆஸ்திரேலியாவுக்கு வருகைதந்து 1.8 பில்லியன் ஆஸ்திரேலிய டாலர்களை செலவழித்தனர். இதன் மூலம் குறுகிய கால வருகையாளர்களின் வருகையின் அடிப்படையில் இந்தியா எமது ஏழாவது பெரிய சந்தையாகவும், செலவழிப்பின் அடிப்படையில் எமது ஆறாவது பெரிய சந்தையாகவும் விளங்குகிறது.

வருகையாளர்களின் எண்ணிக்கை




மொத்த செலவு (A$ பில்லியன்)

குறுகிய கால வருகையாளர் வருகைகள் மொத்த பயணச் செலவு

ஆதாரமூலம்: சுற்றுலா ஆஸ்திரேலியா



**பண்பாடு மற்றும் படைப்புசார் தொழில்கள்**

இந்தியாவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையிலான கலை அனுபவங்கள் மற்றும் பண்பாட்டு பரிமாற்றங்கள் நமது பொருளாதாரத்தை ஆதரிக்கின்றன, சுற்றுலாவை ஊக்குவிக்கின்றன மற்றும் சமூக இணைப்புகளை உருவாக்குகின்றன. ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் துடிப்பான பண்பாட்டுத் துறைகளைக் கொண்டுள்ளன, அவை கருத்துக்கள் மற்றும் படைப்பாற்றல் மீது நாம் வைக்கும் நன்னெறிமதிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

இந்தியாவிற்கும் ஆஸ்திரேலியாவின் திரைத்துறைக்கும் இடையிலான உடனுழைப்பை ஊக்குவிப்பதன் மூலம் ஆஸ்திரேலியாவின் வளமான பண்பாட்டுக் கூறுகளையும் இயற்கை அழகு பற்றிய இந்திய உள்ளுணர்வுகளையும் வடிவமைக்க முடியும். இலக்கியம் முதற்கொண்டு காட்சி மற்றும் நிகழ்த்து கலைகள் வரையிலான பண்பாட்டு விழாக்களில் நெருக்கமாக ஒத்துழைப்பதன் மூலம் இரு திசைகளிலும் நன்மைகளைப் பெற முடியும்.

ஃபேஷன் மற்றும் டெக்ஸ்டைல்ஸ் துறைகள் மிகவும் வாய்ப்புவளம் கொண்டவையாக உள்ளன. மேலும், ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் மூல உள்ளீடுகளின் வடிவமைப்பு, உற்பத்தி மற்றும் தயாரிப்பு ஆகியவற்றில் இரு நாடுகளுள் ஒன்றிடம் குறைவாக உள்ள பண்பை மற்றொன்றிடம் இருந்து பெற்று குறைநிரப்பிக்கொள்ளும் வலிமைகளைக் கொண்டுள்ளன என்று AES முன்னிலைப்படுத்துகிறது. அனிமேஷன் மற்றும் கேமிங் துறையில், ஆஸ்திரேலியாவின் வளர்ந்து வரும் தொழில்துறைக்கு இந்தியாவில் கூட்டாண்மைகள் நிறைவேற்றப்படச் சாத்தியமுள்ள பரந்த பொருளாதாரத்தை வழங்குகின்றன.

கலைகள் எங்கிலும் வலுவான உறவுகளை ஆதரிப்பதில் அரசு செயலாட்கொண்டுள்ளது. ஆஸ்திரேலிய நிகழ்த்து கலைகள் சந்தை மூலம் வலுவான வாய்ப்பு உள்ளது. இது, கலைகளுக்கான ஆஸ்திரேலிய மன்றத்தின் உத்திப்பூர்வ முன்னெடுப்பு ஆகும். இது, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தின் சமகால நடனம், நாடகம், வளர்ந்து வரும் புதிய கருத்து/தொழில்நுடபம் அடிப்படையிலான கலைகள் ஆகியவற்றை தேசிய மற்றும் சர்வதேச அளவில் காட்சிப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டது.

இன்றுவரை, உயர்மட்ட இந்திய விழாக்களிலும், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் கலை விழாக்களிலும், அதிலும் குறிப்பாக இலக்கியம் மற்றும் காட்சிக் கலைகளில் விளக்கக்காட்சிகளை அரசு ஆதரித்துள்ளது. இது, நிகழ்த்து கலைகளில் இருதரப்பும் பயனடையும் வகையிலான உறவுகளையும் பரிமாற்றங்களையும் செயல்படுத்துகிறது.

**செயல் திட்டம்**

நமது பொருளாதாரத்திலும், இருநாட்டு குடிமக்களுக்கு இடையேயான நேரடி இடைவினை இணைப்புகளிலும் படைப்புசார் தொழில்களின் முக்கிய பங்கை அதிகரிக்க அரசாங்கம் **மைத்ரி பண்பாடு கூட்டாண்மையை** நிறுவும். இந்த நிதியானது, காட்சிசார் மற்றும் நிகழ்த்து கலைகள், இலக்கியம், திரைப்படம் மற்றும் இசைத் துறைகளில் திட்டப்பணிகள், நிகழ்வுகள், கண்காட்சிகள் மற்றும் தொழில்முறை பரிமாற்றங்களை ஆதரிக்கும். இந்த நிதியானது, கூட்டு பண்பாட்டுத் திட்டப்பணிகளை மேம்படுத்தவும் இரு திசைகளிலும் பண்பாட்டு சுற்றுலாவை அதிகரிக்கவும் உதவும்.





**விளையாட்டு**

ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் விளையாட்டு மீதான, அதிலும் குறிப்பாக கிரிக்கெட், கால்பந்து, நீச்சல், ஹாக்கி மற்றும் பலதரப்பட்ட ஒலிம்பிக் விளையாட்டுகளில் நீண்டகால பேரார்வத்தை பகிர்ந்து கொள்கின்றன.

இந்தியாவில் பெண்கள் மற்றும் சிறுமிகள் உட்பட விளையாட்டுப் பங்கேற்பு அதிகரித்து வருகிறது. உயரளவு போட்டித்திறன் கொண்ட விளையாட்டை ஆதரிக்கும் இந்திய அரசின் கொள்கைகள் டோக்கியோ ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் விளையாட்டுகளில் அண்மைய சாதனைகளுடன் வெற்றியைக் காட்டுகின்றன.

ஆஸ்திரேலியாவைப் போலவே, இந்தியாவும் விளையாட்டின் மதிப்பை ஒரு பெரிய வணிகமாக மட்டுமல்ல, அதன் உலகளாவிய நிலையை உயர்த்துவதற்கான ஒரு வழியாகவும் பார்க்கிறது. இந்தியா உள்கட்டமைப்பையும் மேலதிக உலகளாவிய விளையாட்டு நிகழ்வுகளை நடத்தும் திறனையும் மேம்படுத்த விரும்புகிறது. ஆஸ்திரேலியா 2023 FIFA மகளிர் உலகக் கோப்பை மற்றும் பிரிஸ்பேன் 2032 ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் விளையாட்டுகளை நடத்துகிற. இதன் மூல் ஆஸ்திரேலியாவால் கூட்டாண்மைக்கான வாய்ப்புகளை வழங்க முடியும் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களைப் பகிர்ந்துகொள்ள முடியும்.

ஆஸ்திரேலிய விளையாட்டு மற்றும் விளையாட்டு வீரர்கள் இந்தியாவில் வலுவான நிலையை அனுபவிக்கின்றனர். கட்டமைப்பு வசதிகள், பயிற்சி மற்றும் நிகழ்வு மேலாண்மை ஆகியவற்றில் நிபுணத்துவத்திற்கான இந்தியாவின் வளர்ந்து வரும் தேவையை நிறைவேற்ற விரும்பும் ஆஸ்திரேலியாவின் உலகின் முன்னணி விளையாட்டு சேவை வழங்குநர்களுக்கு இந்த நற்பெயர் சாதகமாக உள்ளது. பல ஆண்டுகளாக, இந்தியாவில் உள்ள ஆஸ்திரேலிய மற்றும் இந்திய நிறுவனங்கள் உயர்தர ஆஸ்திரேலிய விளையாட்டு வீரர்களை பிராண்டு தூதுவர்களாக வெற்றிகரமாக ஈடுபடுத்தியுள்ளன.

ஆஸ்திரேலியாவின் விளையாட்டு சாதனைகளுக்குப் பின்னால் உள்ள விளையாட்டு நிபுணத்துவம் பற்றிய விழிப்புணர்வை அரசு தொடர்ச்சியாக பரப்பும் மற்றும் இந்தியாவில் ஆஸ்திரேலிய விளையாட்டுச் சேவை வழங்குநர்களுக்கு கதவுகளைத் திறப்பதற்கான வாய்ப்புகளை ஆராயும். விளையாட்டு ஒத்துழைப்பு, ஊக்கமருந்து எதிர்ப்பு மற்றும் விளையாட்டு ஒருமைப்பாடு பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் உட்பட இந்தியாவுடன் நெருக்கமான அதிகாரப்பூர்வ ஈடுபாட்டை அரசு தொடர்ந்து பராமரிக்கும். ABC இன் செய்திகள் மற்றும்

விளையாட்டுகளில் பெண்களின் முன்னெடுப்பானது விளையாட்டு ஊடகங்களில் பன்முகத்தன்மையையும், அனைத்தையும்/அனைவரையும் உள்ளடக்குவதையும் ஆதரிக்கும் மதிப்புமிக்க திட்டமாக தொடரும்.



**வேளாண்வணிகம்**

ஆஸ்திரேலிய வேளாண் வணிகத் துறையின் வளர்ச்சிக்கான நிறைவேற்றப்படச் சாத்தியமுள்ள பொருளாதாரமாக இந்தியா தொடர்ந்து பிரதிநிதித்துவப்படுத்துகிறது. உள்நாட்டு உற்பத்தியில் இந்தியா கவனம் செலுத்தினாலும், மூலப் பொருட்கள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களுக்கான தேவை (ஒயின், பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் ஊட்டச்சத்து மருந்துகள் போன்றவை) தொடர்ந்து உயரும். ஆஸ்திரேலிய நிபுணத்துவம் இருநாடுகளுக்கும் ஒன்றுக்கொன்று ஒத்த நன்மை பயக்கும் கூட்டாண்மைகளுக்கு உற்பத்தித் திறனை அதிகரிக்க ஒரு தளத்தை வழங்க முடியும்.

வேளாண் வணிகத்தில் இந்தியாவின் முதன்மை கூட்டாளியாகவும், விவசாயப் பொருட்களின் முக்கிய வழங்குநராகவும், தொழில்நுட்ப அறிவில் இன்றியமையாத கூட்டாளியாகவும் ஆஸ்திரேலியாவை நிலைநிறுத்த அரசு செயல்பட்டு வருகிறது. சுங்க வரிகள் மற்றும் இறக்குமதி வரிகள் ஆகியவை நமது தொழில்களுக்கு முக்கிய பிரச்சினைகளாக இருப்பதை அரசு உணர்ந்து கொண்டுள்ளது மற்றும் விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் (CECA) தொடர்பான பேச்சுவார்த்தைகளில் வரிக் குறைப்பைத் தொடரும். இருநாட்டுச் சந்தைகளிலும் தொழில்நுட்பச் சந்தை அணுகல் பிரச்சினைகளின் முன்னேற்றம் 2020 ம் ஆண்டில் இருவழி வேளாண் வர்த்தகம் A$1 பில்லியனைத் தாண்ட உதவியது.

கொட்டைகள், பருப்பு வகைகள், தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி மற்றும் கம்பளி போன்ற பொருட்கள் ஆஸ்திரேலியாவின் முன்னுரிமைகளில் உள்ளன. கூடுதலாக, தோட்டக்கலை பொருட்கள், பொதியிடப்பட்ட உணவு மற்றும் பானங்கள் உட்பட, எமது மரபுவழி ஏற்றுமதி வலிமைக்கு அப்பால் ஆஸ்திரேலிய ஏற்றுமதியாளர்களுக்கான சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்தவும் நாங்கள் பணியாற்றி வருகிறோம். வேளாண் வணிக விரிவாக்க முன்னெடுப்பு மற்றும் வேளாண் வர்த்தகம் மற்றும் சந்தை அணுகல் ஒத்துழைப்பு மானியங்கள் மூலம், ஏற்ற இறக்கமான இறக்குமதி தேவை மற்றும் கொள்கை மாற்றங்களைக் கடந்துச்செல்ல தொழில்துறைக்கு அரசு தொடர்ந்து உதவும். வணிகத்திற்கும் வணிகத்திற்குமான நேரடி உறவுகளை ஆழப்படுத்த, தொழில்துறை தலைமையிலான இந்தியா-ஆஸ்திரேலியா தானியங்கள் கூட்டாண்மைக்கு நாங்கள் ஆதரவளிப்போம்.

இந்திய டெக்ஸ்டைல் உற்பத்தியாளர்களுக்கு ஆஸ்திரேலிய கம்பளி மற்றும் பருத்தி போன்ற இந்திய உற்பத்திக்கு பங்களிக்கும் ஆஸ்திரேலிய வேளாண் பொருட்களுக்கான வாய்ப்புகளை அதிகரிக்க அரசு ஆராயும். இந்த முயற்சிகளை மேலும் தொடர அரசு ஆஸ்திரேலியா-இந்தியா கம்பளி புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புதுப்பிக்கும்.

முக்கிய வேளாண் உள்ளீடுகளுக்கான வழங்கல் தொடர்களை பல்வகைப்படுத்துவதற்கான எமது பரந்த முயற்சிகளின் ஒரு பகுதியாக, வேளாண் வேதிப்பொருள் மற்றும் உர இறக்குமதியின் ஆதாரமூலமாக இந்தியாவை அரசு கருதும்.

நீர் மேலாண்மை உட்பட ஆஸ்திரேலிய வேளாண் தொழில்நுட்பங்களுக்கு இந்தியா வளர்ந்து வரும் சந்தையாகவும் உள்ளது. ஆஸ்திரேலிய அறிவுசார் சொத்தைப் பயன்படுத்தி தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் அல்லது உணவுப் பதப்படுத்துதலில் கூட்டுசேர்தல் போன்ற கூட்டு முயற்சிகளை இந்தியாவில் தொடங்குவதில் சில நிறுவனங்கள் வெற்றி கண்டுள்ளன.

உணவுப் பாதுகாப்பு மற்றும் காலநிலை மீள்திறன் வேளாண்மை ஆகியவற்றில் ஆஸ்திரேலியா இந்தியாவுடன் தொடர்ந்து பணியாற்றும். நீர்வள மேலாண்மை தொடர்பான 2020 ம் ஆண்டின் புரிந்துணர்வு ஒப்பந்தம், நீர்வள மேலாண்மை தொடர்பான கொள்கை, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி உடனுழைப்பை வலுப்படுத்தும்.

வேளாண் துறையில் நீடிப்புதிறனுள்ள வளர்ச்சியை ஆதரிக்க, அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

- வர்த்தகத்தை ஆதரிப்பதற்காக இயற்கைப் பொருட்களுக்கான இருநாடுகளுக்கும் ஒன்றுக்கொன்று ஒத்த அங்கீகார ஏற்பாட்டை இறுதி செய்தல்
- இன்றியமையாத வேளாண் வேதிப்பொருட்களை வழங்குவதற்கான இந்தியாவின் திறனைப் பற்றிய விழிப்புணர்வை உள்நாட்டு இறக்குமதியாளர்களிடையே அதிகரித்தல், ஆஸ்திரேலிய இறக்குமதியாளர்களுடன் இந்திய ஏற்றுமதியாளர்களை இணைக்கும் வாய்ப்புகளை அடையாளம் காணுதல்
- இந்தியாவின் உணவுப் பாதுகாப்பு மற்றும் செந்தரங்கள் ஆணையத்தால் (FSSAI) நிர்வகிக்கப்படும் உணவுச் செந்தரங்கள் மூலம் இந்தியாவின் ஒழுங்குமுறை திறன் மற்றும் சான்று அடிப்படையிலான கட்டுப்பாடுகளை ஆதரிக்க தொழில்நுட்ப அறிவு பரிமாற்றத்தில் ஈடுபடுதல்.

47

சாத்திய நிலையிலிருந்து பூர்த்தி செய்து வழங்கலுக்கான நிலையை நோக்கிய பயணம்

**செயல் திட்டம்**

**ஆஸ்திரேலியா-இந்தியா தானியங்கள் கூட்டாண்மை** மற்றும் வேளாண் வணிக விரிவாக்க முன்னெடுப்பு (ABEI) ஆகியவற்றின் கீழ், தானியங்கள் மற்றும் தானியப் பொருட்களில் எதிர்கால வர்த்தகத்திற்கான தளத்தை உருவாக்க இந்தியாவுடன் ஈடுபடுவதற்கான ஒரு உத்திப்பூர்வக் கட்டமைப்பை உருவாக்க, ஆஸ்திரேலிய தானியத் தொழில்துறைக்கு அரசாங்கம் நிதியளிக்கிறது.

இது, தன்னம்பிக்கையை வளர்ப்பதற்காக அரசுக்கும் அரசுக்குமான நேரடி தொடர்ச்சியான பரிமாற்றங்களைத் தொடர்ந்து, இந்தியாவில் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைப்பதற்கும் தானியங்கள் சேமிப்பில் ஒரு முன்னோடி ஆய்வு ஆகும்.

**இந்தியாவின் வேளாண் உணவு நுகர்வு மற்றும் இறக்குமதி 2050 ஆம் ஆண்டுக்குள் கணிசமாக வளரும் என்று கணிக்கப்பட்டுள்ளது**

இந்தியாவின் வளர்ந்து வரும் மக்கள்தொகை, செல்வம் மற்றும் நகரமயமாக்கல் ஆகியவற்றால், இது ஆஸ்திரேலிய வேளாண் மற்றும் வேளாண் வணிக ஏற்றுமதிக்கான வாய்ப்பை வழங்குகிறது.

நுகர்வு (US$ பில்லியன்)

கோதுமை

பால்பொருட்கள்

பழங்கள்

காய்கறிகள்


இறக்குமதிகள் (US$ பில்லியன்)

கோதுமை

பால்பொருட்கள்

பழங்கள்

காய்கறிகள்




ஆதாரமூலம்: ஆஸ்திரேலிய வேளாண்மை மற்றும் வள பொருளாதாரம் மற்றும் அறிவியல் பணியகம்





**பாதுகாப்புத்துறை**

ஆஸ்திரேலிய மற்றும் இந்திய நிறுவனங்கள் ஒன்றுக்கொன்று குறிப்பிடத்தக்க கொள்முதல் செயற்குறிப்பில் மேலும் தனித்துவமாக்கிய வாய்ப்புகளைக் காணலாம். எங்கள் விரிவான உத்திப்பூர்வ கூட்டாண்மை மற்றும் பாதுகாப்பு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை செயல்படுத்துவதற்கான ஏற்பாடு, பாதுகாப்பு தொடர்பான பிற முன்னெடுப்புகளுடன் பக்கத்துக்குப் பக்கமாக, வணிக நலன்களை ஆதரிக்கும் இந்தியாவுடன் அதிக அளவிலான நம்பிக்கையை உருவாக்குகிறது. முக்கியப் போக்குவரத்து மற்றும் கண்காணிப்பு அமைப்புகள், தொழில் ஈடுபாட்டிற்கான அதிகரித்த வாய்ப்புகள் உள்ளிட்ட பெருகிவரும் பல பகிரப்பட்ட தளங்களில் இருந்து ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் பயனடைகின்றன.

சைபர் செக்யூரிட்டி, விண்வெளி, ஒருங்கிணைந்த நுண்ணறிவு, கண்காணிப்பு மற்றும் உளவு பார்த்தல், கடல்சார் போர், ஆளில்லா வாகனங்கள், சிப்பாய் தளவாடங்கள் மற்றும் சேவைகள் மற்றும் பயிற்சி வழங்குதல் ஆகியவை உடனுழைப்புக்கான துறைகளாகும். வளர்ந்து வரும் அமெரிக்க-இந்திய பாதுகாப்பு உறவுகள், இந்தியாவில் பணிபுரியும் முக்கிய அமெரிக்க


பாதுகாப்பு நிறுவனங்களின் உலகளாவிய வழங்கல் தொடர்களில் ஈடுபட்டுள்ள ஆஸ்திரேலிய நிறுவனங்களுக்கும் வாய்ப்புகளை வழங்கலாம்.

பாதுகாப்புத் துறை உறவில் நீடிப்புதிறனுள்ள வளர்ச்சியை ஆதரிக்க, அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

- பாதுகாப்பு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டுதல் குழுவின் தொடக்கக் கூட்டத்தை இந்தியாவுடன் சேர்ந்து கூட்டுதல்
- DEFEXPO உட்பட இந்தியாவில் எதிர்கால பாதுகாப்பு மற்றும் பத்திரத்தன்மை வர்த்தகக் கண்காட்சிகளில் ஆஸ்திரேலிய தொழில்துறை பங்கேற்பை ஆதரித்தல்
- பொருத்தமான இடங்களில் எல்லாம் இந்தியாவுடன் இருதரப்பு மற்றும் பலதரப்பு பாதுகாப்பு பயிற்சிகளில் தொழில்துறை ஈடுபாட்டை ஆதரித்தல்.

**2000 முதல் 2020 ம் ஆண்டு வரையிலான இந்தியாவின் இராணுவச் செலவு**

இந்தியாவின் இராணுவச் செலவு கடந்த இரண்டு தசாப்தங்களாக வேகமாக வளர்ந்துள்ளது, 2020-21 ஐ விட 2021-22 இல் 1.5 சதவீதம் மேலதிக பெயரளவு அதிகரிப்பு காணப்படுகிறது




US$ பில்லியன்

ஆதாரமூலம்: ஸ்டாக்ஹோம் பன்னாட்டு அமைதி நிறுவனம்



**உலகளாவியக் கூட்டாளிகள்**

ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் வெளிப்படையான மற்றும் பலனளிப்புத்திறனுள்ள பலதரப்பு அமைப்புகளுக்கான ஈடுபாட்டுறுதியைப் பகிர்ந்து கொள்கின்றன. மேலும், விதிகள் அடிப்படையிலான ஒழுங்குமுறையை ஆதரிக்கும் உலகளாவிய விதிமுறைகளையும் செந்தரங்களையும் அமைப்பதில் இந்தியா ஒரு முக்கிய கூட்டாளியாக தொடர்ந்து நீடிக்கும்.

2023 ஆம் ஆண்டில் இந்தியா நடத்தும் G20 மாநாட்டு ஆண்டை ஆஸ்திரேலியா ஆதரிக்கும்.

ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் பல முன்னுரிமைகளைப் பகிர்ந்து கொள்கின்றன, மேலும் இந்தியாவின் G20 தலைவர் பதவிக்கான வாய்ப்புகளைப் பிராந்தியத்திற்காக ஆஸ்திரேலியா பயன்படுத்திக்கொள்ளும்.

ஆற்றல், இன்றியமையாத கனிமங்கள், பொறுப்பான வணிக நடத்தை, வழங்கல் தொடர் மீள்திறன், வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட பல முக்கியப் பணிகளில் ஆஸ்திரேலிய நாடு, இந்தியாவுடனும் OECD உடனும் தொடர்ந்து பணியாற்றும். இந்தியா OECD இன் முக்கிய கூட்டாளியாக உள்ளது மற்றும் OECD இன் இந்தியா குறித்த முறைசாரா பிரதிபலிப்புக் குழுவிற்கு ஆஸ்திரேலியா தலைமை தாங்குகிறது. OECD இன் செந்தரங்கள் மற்றும் கருவித்தொகுப்புகள் உலகளாவிய வெளிப்படைத்தன்மையையும் நல்ல ஆளுகையையும் மேம்படுத்துகின்றன.

பன்னாட்டு ஆற்றல் முகமையுடன் (IEA) இந்தியாவின் உத்திப்பூர்வ கூட்டாண்மைக்கு ஆஸ்திரேலியா ஆதரவளிக்கும். மேலும், இந்தியாவுக்கான உறுப்பாண்மைக்கான பாதையை அடையாளம் காண மற்ற IEA உறுப்பு நாடுகளுடன் தொடர்ந்து பணியாற்றும்.

எதிர்காலத்தில் APEC இல் விரிவாக்கப்பட்ட உறுப்பாண்மை ஏதாவது கருத்தில் கொள்ளும்போது, முடிவுகளுக்கு ஒருமித்த கருத்து தேவைப்படும் இடங்களில் எல்லாம், இந்த முக்கிய பிராந்திய மன்றத்திற்குள் இந்தியாவைக் கொண்டுவருவதற்கு ஆஸ்திரேலியா மற்ற உறுப்பினர்களுடன் இணைந்து பணியாற்றுவதில் உறுதியாக உள்ளது. இந்தியா APEC உறுப்பினர்களுடன் கணிசமான பொருளாதார தொடர்புகளைக் கொண்டுள்ளது மற்றும் அமைப்புக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்திருந்து இருக்கும்.

நிலையான மற்றும் வெளிப்படையான விதிகள் அடிப்படையிலான உலகளாவிய வர்த்தக அமைப்பைத் தொடர்ந்து வழங்குவதை உறுதிசெய்வதற்கு, நிறுவனத்தை சீர்திருத்துவது உட்பட, உலக வர்த்தக அமைப்பில் ஆஸ்திரேலியா, இந்தியாவுடன் தொடர்ந்து பணியாற்றும்.

இன்றியமையாத மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பம், வழங்கல் தொடர் மீள்திறன் (சுத்தமான ஆற்றல் மற்றும் குறைக்கடத்திகள் மற்றும் அவற்றின் இன்றியமையாத கூறுகள் தொடர்பானது உட்பட), சைபர் செக்யூரிட்டி, உள்கட்டமைப்பு, காலநிலை மாற்றத்தை எதிர்த்தல், விண்வெளியின் நீடிப்புதிறனுள்ள பயன்பாடு மற்றும் அடுத்த தலைமுறை STEM திறமை ஆகியவற்றில் ஆஸ்திரேலியா இந்தியாவுடன் குவாடில் (ஆஸ்திரேலியா-இந்தியா-ஜப்பான்-யுனைடெட் ஸ்டேட்ஸ்) இணைந்து பணியாற்றுகிறது. குவாட் ஆனது பிராந்தியத்தின் செழிப்பு, நிலைத்தன்மை மற்றும் மீள்திறனுக்கு பங்களிக்க ஒரு நேர்மறையான, நடைமுறை செயற்குறிப்பைக் கொண்டுள்ளது.

50

2035-ம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய இந்தியப் பொருளாதார உத்தி தொடர்பான புதுப்பிக்கப்பட்ட அறிக்கை

**வணிக கல்வியறிவு மற்றும் வணிகச் சூழல்**

இந்திய வணிகச் சூழல் குறித்து ஆஸ்திரேலிய நிறுவனங்களுக்கு IES இன் அறிவுரை பொருத்தமாகவே உள்ளது. உள்நாட்டில் வளர்ந்த நிபுணத்துவம் அல்லது உள்ளூர் பிரதிநிதித்துவம் மூலம் - சந்தையைப் புரிந்துகொள்வதில் முதலீடு செய்வது முக்கியமானது. வெற்றிக் கதைகள் பெரும்பாலும் ஒரு இந்திய கூட்டாளியின் அல்லது பிரதிநிதியின் நன்மையை, நீண்ட கால பார்வையை மற்றும் நிகழ் இருப்பை மேற்கோள் காட்டுகின்றன. இந்தியாவின் அளவுகோல் மற்றும் பன்முகத்தன்மைக்கு பெரும்பாலும் இலக்கிடப்பட்ட மற்றும் உள்ளூர்மயமாக்கப்பட்ட அணுகுமுறை தேவைப்படுகிறது.

இந்தியாவில் செயல்படும் ஆஸ்திரேலிய நிறுவனங்களுக்கு நடைமுறை உதவிகளை வழங்குவதற்கான அரசாங்கத்தின் ஈடுபாட்டுறுதியை இந்தப் புதுப்பிக்கப்பட்ட அறிக்கை மீண்டும் வலியுறுத்துகிறது.

விரிவான ஆஸ்ட்ரேட் இருப்பு உட்பட – எமது அதிகாரிகளின் வலையமைப்பு – வலுவான பதிவைக் கொண்டுள்ளது. நடைமுறை புதிய முன்னெடுப்புகளில் பின்வருவன அடங்கும்:

- ஆஸ்திரேலியா இந்திய உறவுகளுக்கான மையம்
- ஆஸ்திரேலியா இந்தியா உள்கட்டமைப்பு மன்றம் (AIIF)
- ஆஸ்திரேலியா இந்தியா பிசினஸ் சாம்பியன்ஸ்

இந்த முன்னெடுப்புகள், தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளைக் கட்டமைக்கும், இதில் பின்வருவன அடங்கும்:

- ஆஸ்திரேலியா இந்தியா வர்த்தகப் பரிமாற்றம்
- ஆஸ்திரேலியா இந்தியா CEO மன்றம்

**ஆஸ்திரேலியா இந்தியா வர்த்தகப் பரிமாற்றம்** (AIBX) என்பது இந்தியாவுடனான வர்த்தக மற்றும் முதலீட்டுக் கூட்டாண்மைகளை முன்னேற்றுவதற்கான ஆஸ்திரேலிய அரசின் உயர் நேர்த்தித் திட்டமாகும். விரிவான உத்திப்பூர்வ கூட்டாண்மையின் கீழ் ஒரு முன்னெடுப்பான AIBX, வணிக மற்றும் பொருளாதார இணைப்புகளை மேம்படுத்த வணிக, தொழில் மற்றும் அரசாங்க தலைவர்களை இணைக்கிறது.

ஆஸ்ட்ரேட் தலைமையில், AIBX திட்டமானது, இந்தியாவிற்கான ஆஸ்திரேலிய ஏற்றுமதிகளை வளர்ப்பதையும், இருவழி முதலீட்டை அதிகரிப்பதையும், இரு திசைகளிலும் வணிக கல்வியறிவை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் ஆஸ்திரேலிய மற்றும் இந்திய வணிகங்களை இணைக்கும் தொழில் நிகழ்வுகள், வணிகத்தை வெற்றியடையச் செய்வதற்கான சந்தை நுண்ணறிவுகள் மற்றும் இருநாட்டுச் சந்தைகள் எங்கிலும் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு வாய்ப்புகளைக் கைப்பற்ற ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட ஆதரவு ஆகியவை அடங்கும்.

AIBX மற்றும் வரவிருக்கும் நிகழ்வுகள் பற்றி மேலும் அறிய, பார்வையிடவும்: austrade.gov.au/AIBX .

51

சாத்திய நிலையிலிருந்து பூர்த்தி செய்து வழங்கலுக்கான நிலையை நோக்கிய பயணம்

பிசினஸ் சாம்பியன்ஸ் குழுவானது, இந்தியாவில் எமது உயர் நேர்த்தி வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் திட்டமான AIBX மூலம் ஈடுபடும். மேலும், CEO மன்றத்துடன் இணைந்து இயங்கும் - இது தலைவர் மட்டத்திலான சந்திப்புகளுக்கு இணையாகச் சந்திக்கும் உயர்மட்ட அமைப்பாகும்.

ஆஸ்திரேலியாவிற்கும் இந்தியாவிற்கும் இடையேயான தொழில் நெறிஞர்கள் மற்றும் தொழில்முறை சேவைகளின் இருவழி இயக்கமானது, இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டை எளிதாக்க உதவுகிறது. இது, ஆஸ்திரேலிய மற்றும் இந்திய தொழில்களுக்கு இடையிலான உடனுழைப்பின் மூலம் சிறப்பாக அடையப்படுகிறது மற்றும் தொழில்முறை சேவைகளில் இருவழி வர்த்தகத்தை அதிகரிப்பதற்கும் பங்களிக்கும்.

2019-20 ம் ஆண்டில், மற்ற வணிகச் சேவைகள் (பெரும்பாலான தொழில்முறை சேவைகளை உள்ளடக்கியது) உலகளவில் ஆஸ்திரேலியாவின் சேவைகள் ஏற்றுமதியில் 13 சதவீதத்தைக் கொண்டிருந்தன, ஆனால் ஆஸ்திரேலியாவின் சேவைகளில் ஒரு சதவீதத்திற்கும் குறைவாகவே இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

தொழில் நெறிஞர்கள் - வழக்கறிஞர்கள், கணக்காளர்கள் மற்றும் பொறியாளர்கள் - பெரும்பாலும் தாங்கள் முதன்மையாக இயங்கும் பகுதியின் சட்ட அதிகார எல்லைக்கு வெளியே சேவைகளை வழங்கும்போது உள்ளூர் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் கீழ் கூடுதல் வணிகத் தேவைகளை நிறைவேற்ற வேண்டும். இந்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பொதுமக்களையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க உதவுவதால், ஆஸ்திரேலியாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே தொழில் நெறிஞர்களின் இருவழிப் பயணத்தைத் தேவையில்லாமல்

தடுக்காமல் பொருத்தமான செந்தரங்களைப் பராமரிப்பதில் அவற்றின் பயன்பாடு கவனம் செலுத்த வேண்டும்.

தொழில் நெறிஞர்கள் மற்றும் தொழில்முறை சேவைகளின் இருவழி இயக்கத்தை எளிதாக்குவதற்கு, இந்தியாவில் உள்ள சரிநேர் ஊழியர்களுடன் இருதரப்பு அங்கீகாரத்தையும் ஒத்த ஏற்பாடுகளையும் பின்பற்றுவதில் அரசானது ஆஸ்திரேலிய தொழில்முறை சேவைகள் ஒழுங்குமுறை மற்றும் அங்கீகார அமைப்புகளுடன் இணைந்து செயல்படும்.

**செயல் திட்டம்**

உயர் மட்டங்களில் இருதரப்பு வணிக ஈடுபாட்டின் அடிப்படையிலான கட்டிடக்கலையை வலுப்படுத்த, அரசாங்கம் **பிசினஸ் சாம்பியன்ஸ்** குழுவை நிறுவியுள்ளது. வணிக ஈடுபாட்டை அதிகரிக்க ஒவ்வொரு நாட்டிலிருந்தும் நான்கு மூத்த வணிகர்கள் குழுவில் உள்ளனர். ஒரு செயலகத்தின் ஆதரவுடன், இந்தக் குழுவானது பொருளாதாரக் கொள்கையை வகுப்பது, வர்த்தகம் மற்றும் முதலீட்டை மேம்படுத்துவது உட்பட அரசுக்கு அறிவுரை வழங்கும்.

அரசாங்கம் ஆஸ்திரேலிய செந்தரங்கள் மற்றும் இணக்க வர்த்தகத்தை செயல்படுத்தும் திட்டத்தை நிறுவும். இந்தத் திட்டம் ஆஸ்திரேலியாவின் தேசிய செந்தரங்கள் மற்றும் இணக்க (சோதித்தல்) அமைப்புகளை இந்திய சரிநேர் நிறுவனங்களுடன் கூட்டாண்மைகளை உருவாக்கி, இந்தியாவுடனான வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிக்கும். இந்த பல்லாண்டுத் திட்டம் வர்த்தகத்திற்கான தடைகளை அடையாளம் கண்டு கடக்கும் மற்றும் நீடிப்புதிறனுள்ள தொழில்துறை கூட்டாண்மைகளைக் கட்டமைக்கும். இதில் செந்தரங்கள், இணக்கம் மற்றும் சான்றளிப்புச் செயல்முறைகள் சீரமைக்கப்பட்ட வணிக வாய்ப்புகளை அடையாளம் காண்பது உள்ளிட்டவை அடங்கும். ஒவ்வொரு பொருளாதாரத்தின் இணக்கம் மற்றும் சோதித்தல் முறைகள் சந்தைகளுக்கும் நுகர்வோருக்கும் துல்லியமான மற்றும் நம்பகமான முடிவுகளை வழங்குவதற்கான திறனைக் கொண்டிருந்தால் ஒழிய, செந்தரங்களை வணிகங்களால் பயன்படுத்த முடியாது என்பதால் ஒத்திசைவுக்கான இந்த அணுகுமுறை அவசியமாகும்.





**இந்தியாவின் பலதிறன் வாய்ந்த அண்டை நாடுகள்**

பங்களாதேஷ், இலங்கை, நேபாளம் மற்றும் மாலத்தீவுகள் கல்வி, சுற்றுலா, வளங்கள், ஆற்றல் மற்றும் வேளாண் பொருட்கள் உட்பட இந்திய சந்தையில் ஈடுபட்டுள்ள ஆஸ்திரேலிய நிறுவனங்களுக்கு குறைநிரப்பு வாய்ப்புகளை வழங்குகின்றன.

மக்கள்தொகை அடிப்படையில் உலகின் எட்டாவது பெரிய நாடாக பங்களாதேஷ் உள்ளது மற்றும் வலுவான பொருளாதார வளர்ச்சியை தொடர்ந்து பதிவு செய்து வருகிறது. செப்டம்பர் 2021 இல் நடைமுறைக்கு வந்த ஆஸ்திரேலியா-பங்களாதேஷ் வர்த்தக மற்றும் முதலீட்டு கட்டமைப்பு ஏற்பாடு ஆழமான பொருளாதார உறவுகளுக்கு அடித்தளம் அமைத்துள்ளது. வங்காளதேசம் குறைந்த வளர்ச்சியடைந்த நாடு என்ற தகுதிநிலையில் 2026 ம் ஆண்டில் பட்டம் பெறுவதற்கு முன்னதாக சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறது. அடுத்த சில ஆண்டுகளில் இயக்கத்திற்கு வரும் முக்கிய போக்குவரத்து வழிகள் உள்ளிட்ட - இந்தியா-பங்களாதேஷ் இணைப்புநிலையை ஆழமாக்குவது - ஏற்கனவே இந்தியாவில் உள்ள ஆஸ்திரேலிய நிறுவனங்களுக்கு வாய்ப்புகளைத் திறக்கும்.

இலங்கை வளர்ந்து வரும் திறன்பெற்ற பணியாளர்கள், ஆழமான நீர் துறைமுகங்கள் மற்றும் ஆஸ்திரேலியாவுக்கான நேரடி விமான இணைப்புகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. ஆஸ்திரேலிய துறைமுகங்களில் இருந்து இலங்கைக்கும் அதற்கு அப்பாலும் நேரடியான கப்பல் போக்குவரத்து என்பது உண்மையான பலனளிப்புத்திறன்களுக்கான வாய்ப்புகளைத் திறக்கும் உள்ளார்ந்த திறனைக் கொண்டுள்ளது. வேளாண் சரக்குகள் உட்பட ஆஸ்திரேலியாவின் பொருட்களை பதப்படுத்தி மீள் ஏற்றுமதி செய்வதற்கு இலங்கை ஒரு மையமாகவும் செயல்பட முடியும். இது, மூல நிபந்தனைகளின் விதிகளுக்கு உட்பட்டு, இந்தியாவுடனான இலங்கையின் வர்த்தக உடன்படிக்கையின் கீழ் வரியில்லாச் சந்தை அணுகலைப் பயன்படுத்திக் கொள்ள நிறுவனங்களை அனுமதிக்கலாம். 28 க்கும் மேற்பட்ட ஆஸ்திரேலிய கல்வி நிறுவனங்கள் இலங்கையில் இருப்பைக் கொண்டுள்ளன. இது, பிராந்திய கல்வி மையமாக அதன் வளவாய்ப்புகளை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இந்தியாவில் கால் பதிக்கும் நிறுவனங்களுக்கு நேபாளம் வாய்ப்புகளை வழங்குகிறது. அதன் வளர்ந்து வரும் நடுத்தர வர்க்கம், கல்வி மற்றும் முதல்தர உணவுகளுக்கான சந்தையாகும். புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் வேளாண் தொழில்நுட்பம் ஆகியவையும் வளவாய்ப்புள்ளதாக இருக்கின்றன.

**செயல் திட்டம்**

**மாலேவில் உள்ள புதிய ஆஸ்திரேலியத் தூதரகம்,** மாலத்தீவுகள் உடனான நமது கல்வி, சுற்றுலா மற்றும் பரந்த பொருளாதார இணைப்புகளை ஆழப்படுத்தும். மாலத்தீவின் சொகுசு சுற்றுலாத் துறையானது, உயர்தர உணவு மற்றும் பானங்கள் ஏற்றுமதியை செய்து வருபவர்களுக்கு சிறப்பான வாய்ப்புகளை வழங்குகிறது.

**வங்காள விரிகுடா இணைப்புநிலை கூட்டாண்மை** செயல்பாடு வர்த்தக ரீதியாக கவனம் செலுத்தும் ஆஸ்திரேலியா – இந்தியா உட்கட்டமைப்பு கூட்டமைப்பை 2024-25-லிருந்து பிற தெற்காசிய நாடுகளையும் உள்ளடக்குகின்ற ஒரு பிராந்திய அளவிலான முனைப்புத்திட்டமாக விரிவாக்கும்.



<u>**ஆஸ்திரேலிய அரசு**</u>

**வெளியுறவு மற்றும் வர்த்தகத் துறை**